
E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi
ஓம் சக்தி
செப்டம்பர் 2019
விலை ரூ.15
நிறுவனர் :
நா. மகாலிங்கம்
சயனக்கோலத்திலும் உனையன்றி யார்கண்டார் என்னை
நின்றகோலத்தில்தான் தூரத்திலிருந்து தரிசித்தேன் உன்னை
நீன்ற கோலத்தில் அத்தீவரதர்

கு ம ர கு ரு

பொறியியற் கல்லூரி | வணிக மேலாண்மைப் பள்ளி | வேளாண்மைக் கல்லூரி
பன்முகக் கலை அறிவியல் கல்லூரி | சக்தி மேம்பாட்டுக் கல்வி மையம்

ஒழுக்கமே வாழ்வு



"கல்வியைப் போலவே தொழில்களும் கடவுளுக்குச் சமமானவை. படிக்கும் காலத்திலேயே தொழிலுக்கான பயிற்சியை மாணவர்கள் பெறவேண்டும்."

அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கம்



குமரகுரு பன்முக கலை அறிவியல் கல்லூரி

அடிப்படை அறிவியலிலிருந்து சமூக அறிவியல் வரையும், இலக்கியத்திலிருந்து நுண்கலைவரையும் அனைத்தையும் வழங்கி, சமூக முன்னேற்றத்திற்கான ஆய்வுகளை முன்னெடுத்து, வாழ்நாள் முழுதும் கற்றலில் ஆர்வம் கொண்டு, உலகியலின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் தனியாத ஆர்வம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கல்வி நிறுவனம்.

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

150 ஏக்கர் வளாகத்தில் 6000 மாணவர்களுடனும் 400 பேராசிரியர்களுடனும் 34 ஆண்டுகளாக 'ஒழுக்கமே வாழ்வு' எனும் உயர் குறிக்கோளுடன், ஆராய்ச்சியையும் தொழில் இணைவையும் அடிப்படையாகக் கொண்டு தேசிய தர வரிசையில் முதல் நூறு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

கே.சி.டி. வணிக மேலாண்மைப் பள்ளி

தொழிலகங்கள் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்தில் முனைப்புடன் செயல்படும் இளைய தலைமுறைக்கான தலைவர்களை உருவாக்கும் இந்தியாவின் முதல் 100 நிறுவனங்களில் ஒன்றாகும் கல்வி, மனித வளம், மாணவர்கள் சேவை, ஐ.டி. தொழில்நுட்பம், தொழிலினைவு, சமூக பங்களிப்பு போன்றவைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் இணையற்ற நிறுவனம்.

குமரகுரு வேளாண்மைக் கல்லூரி

தொழில்நுட்பம் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையைத் தற்சார்புத் தொழிலாக மாற்றுவதற்குரிய வேளாண்மைக் கல்வியை, கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம்.

ஆராய்ச்சி அமைப்புக்கள்

மாணவர் ஆராய்ச்சிகள்

iQube — Innovate • Incubate • Incorporate

GARAGE

re — KCT'S PLATFORM FOR RESEARCH & EXPLORATION

தொழிலக ஆராய்ச்சிகள்

KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION

TECHNOLOGY VISION 2020 — TIFAC — MISSION REACH

FORGE போர்ஜ்

கே.சி.டி.யின் ஒர் அங்கமான 'போர்ஜ்' வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்தையும், கணினி அறிவியலையும் இணைத்து ரோபோட் தானியங்கிஇயந்திரங்களையும் செயற்கை அறிவூட்டல் கருவிகளையும், டிஜிட்டல் வணிகத்தையும் வளர்த்தெடுத்துப் பல்வேறு தொழில் துறைகளிலும் இந்த நுண்ணறிவுப் பயன்பாட்டைக் கொண்டுசெல்லும் நோக்கில் செயல்படுகிறது.

குமரகுரு கல்வி வளாகம்
சரவணம்பட்டி
கோயம்புத்தூர்
0422 2661100
kct.ac.in
kctbs.ac.in
kclas.ac.in
kia.ac.in



சுரங்கம்

அருட்செல்வர் "காஷ்மீர்ப் பிரச்சனைக்குக் காந்தியப் பாதையில் ஒரு தீர்வு" என்று 17 ஆண்டுகளுக்கு முன்பு (2002) எழுதிய கட்டுரை பிரதமர் நரேந்திர மோடியின் இன்றைய தீர்வுக்கு மாறுபட்டதாக இருந்தாலும் அருட்செல்வர் அன்றைக்கே இதனை மூன்றாகப் பிரிக்க நினைத்தது சிந்திக்கத் தக்கது.

– இ.ஆர்.

காஷ்மீர் பிரச்சனைக்கு
காந்தியப் பாதையில் ஒரு தீர்வு



காந்திஜி

1947–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியா – பாகிஸ்தான் என்ற இரு சுதந்திர நாடுகள் உதயமாயின. இந்தியாவில் இருந்த 500–க்கு மேற்பட்ட சுதேசி மன்னர்களுக்கு பிரிட்டிஷ் அரசு ஓர் அறிவிப்பைச் செய்தது. அந்தச் சுதேசி மன்னர்கள் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ தங்களை இணைத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்தது அந்த அறிவிப்பு.

அதன்படி இந்தியாவிலிருந்த சுமார் 500 சுதேசி மன்னர்கள் பாரதத்தோடு இணைந்து கொண்டனர். ஆனால், பாகிஸ்தானோடு ஒரு சமஸ்தானமும் இணையவில்லை.

காஷ்மீர் ஒரு சுதேச சமஸ்தானமாகத்தான் இருந்தது. அப்போது காஷ்மீரின் மன்னராக ஹரிசிங் இருந்தார். காஷ்மீர் சமஸ்தானம் பாகிஸ்தானுக்குப் பக்கத்தில் இருந்ததால், பாகிஸ்தானோடு சேருவதா, அல்லது மற்ற மன்னர்களைப் போல இந்தியாவோடு சேர்ந்துவிடலாமா என்று ஓர் ஊசலாட்டத்தில் மன்னர் ஹரிசிங் இருந்தார்.

இரு நாடுகளோடும் சேராமல் காஷ்மீர் ஒரு தனி ராஜ்யமாகவே இருக்க வேண்டும் என்பதும் அவர் ஆசை.

அந்தச் சூழ்நிலையில், காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லா காஷ்மீர் மக்களை ஒன்று திரட்டி மன்னர் ஹரிசிங்கிற்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்தார். ஷேக் அப்துல்லாவுக்கு நேருஜியின் ஆதரவு வெளிப்படையாகவே இருந்து வந்தது. அப்போதுதான் பாகிஸ்தானிலிருந்து ஏவிவிடப்பட்ட படைகள் காஷ்மீரைத் தாக்கின. பாகிஸ்தானின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத மன்னர் ஹரிசிங், இந்திய ராணுவத்தின் உதவியைக் கேட்டார்.

1948 ஜனவரி 1–ஆம் தேதி இந்திய ராணுவம் காஷ்மீருக்குள் சென்று பாகிஸ்தான் படைகளை விரட்டி அடித்தது. அதன் பிறகு காஷ்மீரை இந்தியாவோடு மன்னர் ஹரிசிங் அவர்களே விரும்பி இணைத்தார். ஷேக் அப்துல்லாவும் இதற்காக மன்னருக்கு ஆதரவு அளித்தார். பின்னர் ஷேக் அப்துல்லா பிரதமராகக் காஷ்மீர் மன்னரே ஆதரவு தந்தார். அதனால் மன்னர் ஆட்சிமுறை காஷ்மீரில் முடிவுக்கு வந்தது.



டாக்டர் நா. மகாலிங்கம்

பாகிஸ்தான் பிரிந்து சென்றது எப்படி உண்மையோ, அதேபோல காஷ்மீர் இந்தியாவோடு இணைந்ததும் ஓர் உண்மையாகும்.

இதன்பிறகு காஷ்மீரின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசியல் சட்டத்தில் 370–ஆவது பிரிவு சேர்க்கப்பட்டது. அதன் அடிப்படையில், காஷ்மீரின் அபிவிருத்திக்காக இந்திய மக்களின் வரிப்பணம் பல்லாயிரம் கோடி ரூபாய் சென்ற 50 ஆண்டுகளாகச் செலவழிக்கப்பட்டது. சென்ற மாதம்கூட காஷ்மீர் வளர்ச்சிக்கு 6000 கோடி ரூபாய்க்கான அபிவிருத்திப் பணிகளைப் பிரதமர் வாஜ்பாய் அறிவித்தார்.

இவ்வளவுக்குப் பிறகும் காஷ்மீர்ப் பிரச்சனை











இன்னும் தீர்க்கப்பட வில்லை.

காஷ்மீர்ப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக வல்லபபாய் படேல் 1947–ஆம் ஆண்டிலேயே ஒரு வழியைச் சொன்னார். “ஹைதராபாத்தில் 90 சதவிகித இந்துக்கள் இருக்கிறார்கள். ஆனால், அங்கு நவாப்தான் ஆட்சி செய்கிறார். போபாலிலும் 70 சதவிகித இந்துக்கள் இருக்கிறார்கள். அங்கும் நவாப்தான் ஆட்சி செய்கிறார். நவாப்புகள் இந்த இரண்டையும் இந்தியாவுக்குச் சமாதானமாகக் கொடுத்து விடுவார்களேயானால், காஷ்மீரைப் பாகிஸ்தானுக்கே கொடுத்துவிடுவதில் எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை” என்று சர்தார் படேல் கூறினார்.

ஹைதராபாத்தும், போபாலும் இந்தியாவுக்குச் சமாதானமாகத் தரப்படவில்லை. போர் நடவடிக்கை மூலமாகத்தான் இணைக்கப்பட்டன. அதனால் படேல் சொன்னபடி இந்தியாவும் காஷ்மீரைப் பாகிஸ்தானுக்கு வழங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

சுமார் 500 சமஸ்தானங்களை இந்தியாவோடு இணைத்த வல்லபபாய் படேல் அவர்களாலும் காஷ்மீர்ப் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை.

நேருஜி காஷ்மீர்ப் பிரச்சனையை ஐ.நா. சபைக்கு எடுத்துச் சென்றதால், இது இரண்டு நாடுகளின் பிரச்சனை என்ற வரையறையைத் தாண்டி, சர்வதேச சபைக்குச் சென்றுவிட்டது. இன்னும் வாதப் பிரதிவாதங்களிலேயே இப்பிரச்சனை இருந்து கொண்டிருக்கிறது.

பிரதமராக இருந்த நேருஜிக்குப் பிறகு லால்பகதூர் சாஸ்திரி காலத்தில் உருவான தாஷ்கண்ட் ஒப்பந்தப்படியும் காஷ்மீர்ப் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை. தாஷ்கண்ட் சென்ற லால்பகதூர் சாஸ்திரி அங்கேயே காலமாகிவிட்டார்.

1971–இல் நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. கிழக்குப் பாகிஸ்தான் பிரதேசம் முஜிபுர் ரஹ்மான் தலைமையில் சுதந்திர நாடாகியது. பாகிஸ்தான் ராணுவத்தை எதிர்த்துப் போரிட்ட கிழக்கு வங்காள முக்தி வாகினி என்ற விடுதலை வீரர்களுக்கு, இந்திய ராணுவம் பின்புலமாக இருந்தது. தோற்றுப்போன 90 ஆயிரம் பாகிஸ்தான் சிப்பாய்கள் துப்பாக்கிகளைத் தலைக்கு மேலே தூக்கிக் கொண்டு இந்திய ராணுவத்திடம் சரண் அடைந்தனர்.

முஜிபுர் ரஹ்மான் ஜெயித்தார். சரணாகதி அடைந்த பாகிஸ்தான் சிப்பாய்களைத் திரும்ப ஒப்படைக்குமாறு பாகிஸ்தான் அதிபர் தளபதி அயூப்கான் இந்தியப் பிரதமர் இந்திராஜியிடம் கேட்டுக் கொண்டார்.

காஷ்மீர்ப் பிரச்சனைக்கு இந்தியா விரும்புகிற தீர்வை ஒப்புக்கொள்ள அப்போதே ஒரு நிபந்தனை போட்டிருப்போமானால், வேறு வழியின்றிப் பாகிஸ்தானும் அதை ஒப்புக் கொண்டிருக்கும்.

நிபந்தனையின்படி காஷ்மீர்ப் பகுதியை ஆக்கிரமித்துள்ள பாகிஸ்தான் ராணுவம் அப்பகுதியிலிருந்து வெளியேறியும் இருக்கும். பங்களாதேச விடுதலையை நமக்குச் சாதகமாக்கிக்கொள்ள நாம் தவறிவிட்டோம்.

1972–இல் ஏற்பட்ட சிம்லா ஒப்பந்தத்தின் மூலமும் காஷ்மீர்ப் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை. பிரதமர் வாஜ்பாய் காலத்தில் 1999 பிப்ரவரியில் ஏற்பட்ட லாகூர் ஒப்பந்தப்படியும் காஷ்மீர்ப் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை.


சென்ற மாதம் காஷ்மீரில் இந்திய ராணுவத்தினர் 32 பேர்களை காஷ்மீர் பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர். பின்னர் ஹூரியத் மாநாட்டுத் தலைவர் அப்துல்கனி லோனி அவர்களையும் ஐ.எஸ்.ஐ. பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

தொடர்ந்து பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற பயங்கரவாதிகள் எல்லை தாண்டி இந்தியாவுக்குள் புகுந்து மக்களையும், அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிற ராணுவத்தையும் திடீர் என்று படுகொலை செய்துவிடுகிறார்கள். இந்திய நாடாளுமன்றக் கட்டடத்தின்மீது தீவிரவாதிகள் 12 பேர் சென்ற டிசம்பர் 13–ஆம் தேதி தாக்குதல் நடத்தினர். அதற்கு முன்பு கொல்கத்தா நகரத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறை அலுவலகத்தின் மீதும் தாக்குதல் நடத்தினர்.

இவ்வாறு, பாகிஸ்தான் பயங்கரவாதத்திற்கு டெல்லி, கொல்கத்தா, காஷ்மீர் ஆகிய பகுதிகள் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றன.

பாகிஸ்தானில் ராணுவத் தளபதியாக இருந்து அதிபராகத் தன்னை அறிவித்துக் கொண்ட தளபதி பர்வேஷ் முஷாரப் காஷ்மீரில் நடப்பது ஒரு விடுதலைப் போர் என்று கூறுகிறார்.

காஷ்மீர் மன்னரே விரும்பி இந்தியாவோடு இணைந்த காஷ்மீர்ப் பகுதியில், கடந்த 50 ஆண்டுக் காலமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் முறையான ஜனநாயக ஆட்சிதான் நடந்து வருகிறது. ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீர்ப் பகுதி உண்மையில் பாகிஸ்தான் வசம்தான் உள்ளது.


கரன்சிங்

காஷ்மீரில் நடப்பது விடுதலைப் போர் என்றால், அது பாகிஸ்தானை எதிர்த்துத்தான் நடைபெற வேண்டும். இந்தியாவை எதிர்த்து அல்ல. ஏனெனில், இந்தியா ஒரு ஜனநாயக நாடு. காஷ்மீர் மாநிலமும் ஒரு ஜனநாயக மாநிலம்.

இந்தியாவோடு இணைந்த காஷ்மீர், ஜனநாயக அமைப்புக்குள் உள்ளது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் காஷ்மீர் பகுதியோ ஒரு சர்வாதிகாரக் கட்டமைப்புக்குள் சிக்கியுள்ளது.

காஷ்மீர் விடுதலையைக் காஷ்மீரிகள் விரும்புவார்களேயானால், சட்டசபைக்குத் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து சுய ஆட்சியைக்கூட அறிவிக்கலாம். இன்றைய காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா சுய ஆட்சி கோரி ஒரு தீர்மானமேகூட சட்டசபையில் நிறைவேற்றினார் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த அளவுக்கு இந்தியக் காஷ்மீரில் ஜனநாயகம் செயலில் உள்ளது. ஆனால் பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள பகுதியில் இதுபோல இல்லை.

உண்மை இவ்வாறு இருக்க, இந்தியாவை எதிர்க்கும் பயங்கரவாதத்தை பர்வேஷ் முஷாரப் விடுதலைப் போர் என்று வர்ணிக்கிறார்.

இந்திய ராணுவத்திற்கு இந்த ஆண்டு ரூ. 64 ஆயிரம் கோடி ஒதுக்கியுள்ளோம். இதில் பெருந்தொகை காஷ்மீர்ப் பகுதியில் உள்ள எல்லையைக் காக்கத்தான் செலவாகிறது. 50 ஆண்டுகளுக்கு அதிகமாகவே நாம் இப்படித்தான் ராணுவச் செலவைப் படிப்படியாக அதிகரித்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் ஓர் அமைதியான தீர்வை இன்றுவரை நாம் அடையவில்லை.

50 ஆண்டுகளுக்குப் பிறகும் காஷ்மீரிகளுக்கு இந்தியாவிடம் தீவிர ஈடுபாடு ஏற்படவில்லை. இதனை 1947–இல் நான் காஷ்மீருக்குச் சென்றிருந்தபோதே கண்டேன். இப்போதும் அதே நிலைதான் நீடிக்கிறது. இதை இல்லையென்று மறுக்க முடியாது.

அங்குள்ள ஷியா முஸ்லீம்களுக்கும், ஷன்னி முஸ்லீம்களுக்கும் இடையில் ஒற்றுமை இல்லை. ஆனாலும் இரு பிரிவினரும் இந்தியாவை வெறுப்பதில் மட்டுமே ஒற்றுமையாக உள்ளனர்.

அதிபர் தளபதி முஷாரப், ஷியா பிரிவையோ, ஷன்னி பிரிவையோ சேர்ந்தவரல்ல. அவர்களைவிடவும் சிறுபான்மையாக உள்ள முஜாகிதீன்


முஜிபுர் ரஹ்மான்


ஷேக் அப்துல்லா


பர்வேஷ் முஷாரப்


பரூக் அப்துல்லா



தலாய்லாமா

பிரிவைச் சேர்ந்தவர். இந்தச் சின்னப் பிரிவைச் சேர்ந்தவர் பாகிஸ்தான் தலைவராக இருப்பதை ஷியா பிரிவினரும், ஷன்னி பிரிவினரும் விரும்பவில்லை. ஆனாலும் இந்தியாவை எதிர்ப்பதில் இம் மூன்று பிரிவினரும் ஒற்றுமையாய்த்தான் இருக்கிறார்கள்.

ஆகவே, ஒரு மாற்றுப் பாதையில் இதைச் சிந்தித்தால்தான் காஷ்மீர்ப் பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வை உண்டாக்க முடியும்.

காஷ்மீர், ஜம்மு, லடாக் என்ற மூன்று பகுதிகள் ஒன்றுக்கொன்று நெருக்கமானவை. இதில் ஜம்மு பகுதி இந்துக்கள் அதிகம் உள்ள பகுதி. அதனைப் பூட்டான் மாதிரி தனிப் பிரதேசமாக்கிக் காஷ்மீர் மன்னர் ஹரிசிங்கின் குடும்ப வாரிசு கரன்சிங்கிடம் தரலாம்.

லடாக் பகுதி பௌத்தர்கள் அதிகம் உள்ள பகுதி. அதனைப் பௌத்த குரு தலாய் லாமா வசம் ஒப்படைத்துவிடலாம்.

இந்தியாவிலுள்ள காஷ்மீர், பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் இரண்டையுமே ஐ.நா. ஸ்தாபனத்தின் மேற்பார்வையின்கீழ் விட்டுவிடலாம். ஐ.நா. படையைக் காஷ்மீர் எல்லைப் பகுதி முழுவதிலும் தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காக நிறுத்தி வைக்கலாம்.

இந்தியாவையும் சாராமல், பாகிஸ்தானையும் சேராமல் காஷ்மீரை இவ்வாறு செய்வதன் மூலம் காஷ்மீரிகளைச் சுயமாகச் சிந்திக்க வைக்கலாம்.

இவ்வாறு செய்தால்தான் காஷ்மீரிகள் மத்தியில் எழுந்துள்ள இந்திய எதிர்ப்பும் குறையும். பாகிஸ்தான் பக்தியும் குறையும். ஷியா, ஷன்னி பிரிவினர்களுக்கு மத்தியில் உள்ள அதிருப்தியும் அப்போதுதான் பகிரங்கமாக வெளிப்படத் தொடங்கும். அந்தச் சூழலில்தான் இந்திய எதிர்ப்பாகவும் பயங்கரவாதமாகவும் மாறியுள்ள காஷ்மீர் பிரச்சனை, அவை இரண்டிலிருந்தும் விடுபடும்.

அத்தகைய ஒரு புதிய சூழ்நிலையில் காந்திஜியின் கனவுகூட நிறைவேறுவதற்கான வாய்ப்பு ஏற்படலாம். என்ன அந்தக் கனவு என்றால், சுதந்திர இந்தியா இந்து – முஸ்லீம் தேசமாகப் பிரிவதை காந்திஜி விரும்பவில்லை.

“ஈஸ்வர அல்லா தேரே நாம் சப்கோ ஷன்மதி ஏபகவான்” என்ற அவருக்குப் பிடித்த பிரார்த்தனைப் பாடலில், அல்லாவும் ஈஸ்வரனும் ஒன்றே என்று கூறிவந்தார். பாகிஸ்தான் பிரிவினையை காந்திஜி தமது சமய சமநோக்குக்குக் கிடைத்த தோல்வியாகவே கருதினார்.

காந்திஜியின் கனவு நிறைவேறுமானால், ஒன்றுபட்ட ஐக்கிய இந்தியா மட்டுமல்ல, ஐக்கிய ஆசியாவே அமைந்தால், அவருக்கு மேலும் பெருமைதான்.

இந்தியாவிலிருந்து பிரிந்துபோன பாகிஸ்தானையும், பாகிஸ்தானிலிருந்து பிரிந்துபோன பங்களாதேசையும், இந்துமாக் கடலில் ஒரு சின்னஞ்சிறு தீவாக உள்ள ஸ்ரீலங்காவையும் இவற்றுடன் பர்மா (மியான்மர்), மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளையும் இணைத்து ஓர் ஐக்கிய ஆசியாவை (Asian Union) அமைக்கும் முயற்சியைச் செய்யலாம்.

பாக். காஷ்மீரையும், இந்தியக் காஷ்மீரையும் ஐ.நா. சபையிடம் ஒப்படைத்தால்தான் இது சாத்தியமாகும்.

பிரதமர் வாஜ்பாய் அவர்களும் காங்கிரஸ் தலைவி திருமதி சோனியா காந்தி அவர்களும் இணைந்து காஷ்மீர்ப் பிரச்சனைக்கு ராணுவத் தீர்வு காண்பதைவிட, ஐக்கிய ஐரோப்பா போல (European Union) ஐக்கிய ஆசியாவை உருவாக்கிடும் மாபெரும் சாதனையைச் செய்யத் திட்டமிடலாம்.

ஐக்கிய ஆசியா உருவாகிவிடுமானால், காஷ்மீர்ப் பிரச்சனை தீர்வதுடன், இந்திய – பாகிஸ்தான் நாடுகளுக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள ராணுவச் செலவும் மிகக் கணிசமாகக் குறைந்துவிடும். அதுமட்டுமா? ஐக்கிய ஆசிய நாடுகளுக்கு மத்தியில் தடையில்லாத வாணிபமும் அபிவிருத்தி அடையும். அதன் காரணமாக ஐரோப்பா டாலர் போன்று ஆசிய டாலரும் புழக்கத்திற்கு வருவது சாத்தியமாகும்.

இதுதான் எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு மாற்றாக உள்ள காந்தியத் தீர்வு. இந்து – முஸ்லீம் நேயத்திற்கான சமரசத் தீர்வு. ●



விழாவில் என்.ஐ.ஏ. தலைவர் டாக்டர் ம. மாணிக்கம், டாக்டர் சுதா சேஷய்யன், தாளாளர் திரு. மா. ஹரிஹரசுதன், செயலர் முனைவர் சி. இராமசாமி, என்.ஐ.ஏ. நிர்வாக அலுவலர் திரு. ஏ. சின்னசாமி, என்.பி.டி. முதல்வர் திரு. ஆர். மணிவண்ணன், எம்.சி.இ.டி. முதல்வர் முனைவர் ஏ. இரத்தினவேலு, வி.ஐ.ஏ. முதல்வர் முனைவர் சி. சின்னுசாமி ஆகியோர்.

‘அருட்செல்வர் வித்யா சக்தி கல்வி உதவித்தொகை’ வழங்கும் விழா!



விழாவில் ஒரு மாணவிக்கு ‘அருட்செல்வர் வித்யா சக்தி கல்வி உதவித்தொகை’ வழங்குகிறார் முனைவர் சுதா சேஷய்யன். அருகில் என்.ஐ.ஏ. தலைவர் டாக்டர் ம. மாணிக்கம், தாளாளர் திரு. மா. ஹரிஹரசுதன், செயலர் முனைவர் சி. இராமசாமி, எம்.சி.இ.டி. முதல்வர் முனைவர் ஏ. இரத்தினவேலு ஆகியோர்.

பொள்ளாச்சி, டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரியில், “அருட்செல்வர் வித்யா சக்தி கல்வி உதவித்தொகை” (AVS) வழங்கும் விழா, 25.7.2019 அன்று சிறப்பாக நடைபெற்றது.

என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் ம. மாணிக்கம் அவர்கள் தலைமையுரை யாற்றினார். தாளாளர் திரு. மா. ஹரிஹரசுதன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் எம்.எஸ். சுதா சேஷய்யன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். விழாவில், முனைவர் க. சிவமணி அவர்கள் தொகுத்து, முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட ‘அருட்செல்வர் ஆயிரம்’ நூல் வெளியிடப்பட்டது.

விழாவில் தகுதிமிக்க 400 மாணவர்களுக்கு, ஏ.வி.எஸ். உதவித்தொகை ரூ. 1 கோடி வழங்கப்பட்டது. எம்.சி.இ.டி. கல்லூரி முதல்வர் முனைவர் ஏ. இரத்தினவேலு, என்.பி.டி. முதல்வர் திரு. ஆர். மணிவண்ணன், வி.ஐ.ஏ. கல்லூரி முதல்வர் முனைவர் சின்னசாமி, என்.ஐ.ஏ. பள்ளிகளின் நிர்வாக அலுவலர் திரு. சின்னசாமி மற்றும் பேராசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்களின் செயலர் முனைவர் சி. இராமசாமி அவர்கள் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது. ●



கோவை புத்தகத் திருவிழா - 2019

2019–ஆம் ஆண்டு கோவை புத்தகத் திருவிழாவைக் குத்து விளக்கேற்றித் தொடங்கி வைக்கிறார் கோவை மாவட்ட ஆட்சியர் திரு. கு. ராசாமணி, ஐ.ஏ.எஸ். உடன், கொடீசியா நிறுவனக் குழுவின் தலைவர் திரு. ஏ.வி. வரதராஜன், சி.ஆர்.ஐ. பம்ப் நிறுவனத் தலைவர் திரு. சி. வேலுமணி, கோவை தொழில் வர்த்தக சபை முன்னாள் தலைவர் திரு. டி. பாலசுந்தரம், ஆனந்தா பேப்ரிக்ஸ் தொழிலதிபர் திரு. கந்தசாமி, கொடீசியா தலைவர் திரு. ஆர். ராமமூர்த்தி, புத்தகத் திருவிழாத் தலைவர் திரு. விஜய் ஆனந்த் மற்றும் பலர்.

நூலாசிரியர்களுக்குப் பரிசளிக்கப்பட்ட நிகழ்ச்சியில் 'கலைமாமணி' மரபின் மைந்தன் முத்தையா, திரு. விஜய் ஆனந்த், டைனமிக் மல்டி மெட்டல் நிறுவனத்தின் தலைவர் திரு. எஸ். நடராஜன் மற்றும் பலர்.



கோவை கொடீசியா நிறுவனத்தின் சார்பில் ஐந்தாம் ஆண்டு 'கோயம்புத்தூர் புத்தகத் திருவிழா – 2019' கோவையில் சென்ற ஜூலை 19–ஆம் தேதி முதல் 28–ஆம் தேதி வரை 10 நாட்கள் மிகச் சிறப்பாக நிகழ்ந்தது.

சிறப்புக்குக் காரணம், ஆண்டு தோறும் இந்த விழாவில் 'வாழ்நாள் சாதனையாளர்' விருது ஒன்றை மூத்த தமிழ் எழுத்தாளருக்கு ரூ. 1 லட்சம் பணமுடிப்போடு வழங்கிச் சிறப்பிப்பது தான்.

அதனையொட்டி புனைவு நூலுக்கான பரிசு, குணா கந்தசாமி எழுதிய "கற்றாழைப் பச்சை" நூலுக்கும், அபுனைவு நூலுக்கான பரிசு ஆசிரியர்

தொடர்ச்சி 13–ம் பக்கம்

கோவை புத்தகத் திருவிழாவில் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' பெற்ற திரு. வண்ணநிலவன். உடன் தொழிலதிபர் திரு. டி. பாலசுந்தரம்.





சொ.சொ.மீ. சுந்தரம்

தீவினை மாற்றும் திருமந்திரம் 2

ஒரு மாமரத்தில் காய்க்கும் மாங்காய்கள் அனைத்தும் ஒரே மாதிரி சுவையுள்ளனவாக இருக்கின்றன. ஆனால், ஒரு தாய் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்?

இறைவனே அப்படிப் படைத்தான் என்றால், பாரபட்சமாய்ப் படைப்பவன் இறைவனாக இருக்க முடியாதே! அப்படியானால், இதற்கு என்ன காரணம்? அவரவர் செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப இறைவன் உடம்பைக் கொடுக்கிறான். அந்த உடல்களின் மூலம் அவரவர் செய்த நல்வினை, தீவினைப் பயன்களை அனுபவிக்கிறோம்.

நாம் துன்பப்படும்பொழுது கடவுளைக் கண்டவாறு திட்டுகிறோம். 'கடவுளே, உனக்குக் கண்ணில்லையா' என்கிறோம். இது நமக்குத் துன்பத்தால் வந்த அறியாமை. நாம் செய்த தீவினை, மலைபோல் இருக்கும்போது அதை நாம்தான் அனுபவிக்க வேண்டும். அதை விட்டுவிட்டுத் தெய்வத்தைத் திட்டலாமா? வெறும் பானையில் சோறு பொங்குமா? வினையில்லாமல் இன்ப துன்பங்கள் விளையுமா?

இந்த உடம்பு வினையின் வந்தது. வினைக்கு விளைவாவது. அறம் செய்தால் பாவம் நீங்கும் என்பதை உணராது, அக்காலத்தில் அறம் செய்யாதவர்கள் இப்பொழுது வறுமையால் வாடுகிறார்கள். அவர்களுடைய வறுமைக்குக் காரணம் முன் செய்த தீவினையே என்று உணராமல் தெய்வத்தை நோவதால் பயனில்லை.

"செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் / எய்த வருமோ இருநிதியம்? - வையத்து / அறும்பாவம் என்னவறிந்து அன்றிடார்க்கு இன்று / வெறும்பானை பொங்குமோ மேல்"

என்பது நமக்கு நல்வழிகாட்டுவதற்காக ஔவையார் பாடிய நல்வழிப் பாடல். வினையில் பலனை விலக்க முடியாது.

முன்செய்த வினையினால் இப்பிறவி வந்தது. இப்பொழுது செய்யும் வினைகளால் இனிப் பிறவி வரும். இப்படியே போனால் என்ன ஆகும்? இப்பிறவிப் பெருங்கடல் நம்மை நீந்த விடாது. இறைவன் அருள் கிடைத்தால் நீந்தலாம். மனம் கசிந்துருகி வழிபட்டால் இறைவன் வந்து தடுத்தாட்கொள்வான். எப்படி வருவான் இறைவன் என்பதை அழகாக விளக்குகிறார் திருமூலர்.

"விண்ணின்று இழிந்து வினைக்கீடாய் மெய் கொண்டு / தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன் வைத்து / உண்ணின்று உருக்கியொ ரொப்பிலா ஆனந்தக் /கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே" (112) என்பது திருமந்திரம்.

அண்டங்களையெல்லாம் காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடும் அண்ட முதலான் ஆன சிவபெருமான், நம்மைக் காப்பாற்றத் தன்னுடைய மிக உயர்ந்த நிலையிலிருந்து இறங்கி வந்தான். நம்முடைய வினைகளுக்குத் தக்கவாறு அவன் வடிவம் கொண்டான். நாம் வினைக்கேற்பப் பிறவி எடுத்தோம். வினையிலே கிடக்கும் நம்மைக் காப்பாற்ற இறைவன் நம் வினைக்குத் தக்கவாறு காட்சி தந்தான்.

சுந்தரருக்கு ஓலை ஏந்திய அந்தணன் ஆகக் காட்சி தந்தான். மணிவாசகருக்குக் குருந்த மரத்தின் கீழ் இருந்து காட்டினான். அப்பருக்கு ஆணும் பெண்ணுமாகக் கயிலாயக் காட்சி தந்தான். சம்பந்தருக்குத் தோடுடைய செவியனாக அம்மையுடன் அருள் புரிந்தான். சிறுத்தொண்டருக்கு வடநாட்டுப் பைரவக் கோலம் காட்டினான். இதுதான் விண்ணின்று இழிந்து, வினைக்கீடாய் மெய்கொண்ட வித்தகன் திருவிளையாடல்.

அவனுக்குத் திருவடிதான் சக்தி. அந்தத் திருவடிகள் இரண்டும் அருளையும் ஞானத்தையும்

தொடர்ச்சி 16–ம் பக்கம்

கட்டுரை

9

பழகிப் பார்த்ததில் இவர்கள்...

வ.உ.சி. வாலேஸ்வரன்



சமூக ஊடகங்களில் அடிக்கடி வ.உ.சி. வாலேஸ்வரன் புகைப்படம் ஒரு சுற்று வரும். 'கப்பலோட்டிய தமிழரின் மகன் நேற்று இறந்துவிட்டார். ஊடகங்கள் அவற்றைச் சொல்லாது. நீ தமிழனாக இருந்தால் ஷேர் பண்ணு' என்கிற வாசகத்தோடு வரும். உண்மையில் வ.உ.சி. வாலேஸ்வரன் அவர்கள் மறைந்தது



2015 ஜூலை மாதம் 25–ஆம் தேதி. டாக்டர் அப்துல் கலாம் மறைவுக்கு ஒரு நாள் முன்னர் என்று நினைக்கிறேன். அதனாலேயே அவருடைய மறைவு பெரிய அளவில் மக்களைச் சென்று சேரவில்லை.

கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி அவர்களுடைய வாரிசுகளில் மூத்த மகன் திரு. சுப்பிரமணியம் அவர்களை என்னுடைய மாணவப் பருவத்தில் பார்த்து ஒருமுறை பேசியிருக்கிறேன். அதிகம் பழகியதில்லை.

அதன்பின்னர் வ.உ.சி. அவர்களின் புதல்வர் திரு. வாலேஸ்வரன் அவர்களை முதல் முறையாகப் பெரிய லாலா கார்னர் ஸ்வீட்ஸ் திரு.

மரபின் மைந்தன் முத்தையா

மாரியப்பன் அவர்கள் இல்லத்தில் முதல் முறையாகச் சந்தித்தேன். அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு வரும் என்று அப்போது நான் நினைக்கவில்லை.

கோவையில் நண்பர் திரு. கோவை ரமேஷ் 'சுதந்திர வெளிச்சங்கள்' என்னும் தலைப்பில் தொடர் உரைகள் நிகழ்ச்சியை திரு. தமிழருவி மணியன் அவர்களைக் கொண்டு ஏற்பாடு செய்திருந்தார். அந்த வரிசையில் வ.உ.சி. பற்றிய உரையின்போது முன்னிலை வகிக்க திரு. வாலேஸ்வரன் அவர்களை அழைக்க முடிவு செய்தோம்.

அவரும் வருகை தர ஒப்புக் கொண்டார். அப்போது அவர் திண்டுக்கல்லில் இருந்தார். ரயிலில் வந்த அவரை விழாக் குழுவினர் வரவேற்றோம்.

அவர் வந்து சேர்ந்து கொஞ்ச நேரத்தில் கோவை மத்திய சிறையில் வ.உ.சி. இருந்தபோது அவர் இழுத்த செக்கைக் காண்பதற்கு அழைத்துச் சென்றோம். ஒரு குவாலிஸ் காரில் அனைவரும் போனோம். முன்னிருக்கையில் அவர் இருந்தார்.

முன்னதாகவே சிறைத்துறை அனுமதி பெற்று இருந்ததால், காவலர்கள் மரியாதை செலுத்தி அவரை வரவேற்றனர். நான் சற்றே குனிந்து அவரிடம் பேச்சுக் கொடுத்தேன். எனக்குப் பதில் சொல்லத் திரும்பிய அவர்கள் கண்களில் கண்ணீர். "என்னங்கய்யா..." என்றேன்.

"இல்ல... இதே வழியில்தான் எங்க அப்பாவ சங்கிலியில் கட்டி இழுத்துப் போயிருப்பார்கள். நாம ஏ.சி. கார்ல போறோம்" என்றார்.

மதிய உணவுக்கு நண்பர் ரவீந்திரன் இல்லத்தில் ஏற்பாடு செய்திருந்தோம். சாப்பிட அழைத்தபோது கொஞ்சம் தயங்கினார். ஏன் என்று எங்களுக்குப் புரியவில்லை. பின்னர் ஒப்புக் கொண்டு வந்தார். நாங்கள் சாப்பிட்டு முடித்து விட்டு அவர் சாப்பிடும் வரை கை கழுவாமல் காத்திருந்தோம். "எழுந்து போய் கை கழுவுங்க..." என்றார். "இருக்கட்டும் பரவாயில்லைங்க..." என்றோம்.

"இப்ப மரியாதைக்காக உட்கார்ந்து இருப்பீங்க. அங்க போய் வாஷ்பேசின்ல க்யூல நிக்க வச்சுடுவீங்க..." என்றார். அபாரமான நகைச்சுவையாளர் அவர்.

அவரை கோவை அன்னபூர்ணா ஹோட்டலில் தங்க வைத்தோம். அவ்வளவு எளிமையான ஒரு மனிதரை நான் பார்த்ததில்லை. விழா நேரத்தில் அவரை அழைத்துப் போக அறைக்கு நான் வருவதாகச் சொல்லியிருந்தேன். மழை காரணமாக விழா தொடங்கத் தாமதம். எனவே அவரை மெல்ல வந்து அழைத்துக் கொள்ளலாம் என்று சற்றுத் தாமதமாகப் போனேன்.

அதற்குள் அவர் விழா அரங்கிற்கு எப்படிப் போவது, ஆட்டோவில் எவ்வளவு செலவாகும் என்று முழு விவரங்களையும் விசாரித்து வைத்திருந்தார். நான் சென்றதும் "நீங்க வந்திருக்காட்டி ஆட்டோல புறப்பட்டு இருப்பேன். 60 ரூபா ஆகும்னு சொன்னாங்க. என் கையில நூறு ரூபா இருக்கு. அப்புறம் என்ன கவலை" என்றார்.

அவரைப் பார்த்த மாத்திரத்தில் கூடியிருந்த கூட்டத்தினர் உணர்ச்சிவயப்பட்டனர். ஒட்டுமொத்தமாக எழுந்து நின்று வரவேற்றனர். தன் தந்தை குறித்த சில நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்.

இரவு உணவுக்கு அழைத்தபோது மீண்டும் தயங்கினார். விசாரித்தபோது விஷயம் தெரிந்தது. மதிய உணவுக்கும் இரவு உணவுக்கும் அவர் தயங்கியதன் காரணம் இதுதான். அமைப்பாளர்களுக்குத் தொந்தரவும் தரக்கூடாது என்று மதிய உணவுக்கு மோர் சோறும், இரவு உணவுக்கு இட்லி, மிளகாய்ப் பொடியும் கையிலேயே கொண்டு வந்திருந்தார்.

நாங்கள் எங்களுடன் உணவுண்ண அழைத்ததும் இட்லிப் பொட்டலத்தைக் காண்பித்தார். நாங்கள் வற்புறுத்தவே, தன் மனைவியைத் தொலைபேசியில் அழைத்தார். அவர் பேசிய சொற்களை அப்படியே தருகிறேன்.

"எட்டி...! நான் வாலேஸ்வரன் பேசுறேன் சொகமா இருக்கியா...?"

"விழா எல்லாம் ரொம்பப் பிரமாதமாக நடந்தது."

"இவ்வோ என்ன சாப்பிடக் கூப்பிடுதா..."

"அவாள் கூடவே சாப்பிடவா? அப்படிச் சொல்லுதியா..."

"அப்ப நீ கொடுத்த இட்லி இருக்கே அதை என்ன பண்ண....?"

"நாளைக்குக் கொண்டாந்து உன்கிட்டேயே தந்துடவா...?"

"இட்லியும் உன்ன மாதிரியே முறைச்சு முறைச்சுப் பார்க்கு... அதான் கேட்டேன்."

இந்த உரையாடலுக்குப் பிறகு எங்களுடன் உணவு உண்ண வந்தார்.

அரசாங்கம் வ.உ.சி. நூல்களை நாட்டுடமை ஆக்கிக் குடும்பத்தினருக்கு ஒரு தொகை தந்தது பற்றிப் பேச்சு வந்தது. விரக்தியுடன் சிரித்தார்.

மெல்லச் சொன்னார், ‘‘அந்தக் காசோலை யைக் கொடுத்துட்டு ஓர் அதிகாரி என்கிட்ட கமிஷன் எதிர்பார்த்தார். நான் தரலை. அதனால அந்தச் செக்கை பவுன்ஸ் பண்ண என்னை அலை யவிட்டார். எங்கிட்ட பணம் இல்லை. இருந் திருந்தா கேஸ் போட்டு இருப்பேன்’’ என்றார்.

அடுத்த நாள் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார். ரமேஷ் அவரைத் தொலைபேசியில் அழைத்து, ‘‘ஐயா, நல்லபடியா ஊருக்குப் போய்ச் சேர்ந்தீங்களா?’’ என்று கேட்டார்.

அவருடைய பதில் : ‘‘ஆமாம், நல்லபடியாத் தான் வந்தேன். ஏன்? என்ன நோக்கத்தில அனுப் பினீய?’’

சிரித்தபடியே ரமேஷ், ‘‘அய்யா, வீட்டில அம் மாவ விசாரித்ததாச் சொல்லுங்கய்யா...’’ என்றார். ‘‘இப்பம் தூங்கிட்டு இருக்கா. எழுந்த பிறகு சொல்லவா...? எழுப்பிச் சொல்லவா...?’’ என்றார்.

அதன்பிறகு பல சூழ்நிலைகளில் அவரைச் சந்திக்க வாய்த்தது. இடையில் சில நாட்கள் பேசாமல் இருந்துவிட்டால், உடனே ஒரு கடிதம் போடுவார்.

ஒருமுறை நிகழ்ச்சி ஒன்றிற்கு அழைத்து இருந்தபோது உடல்நலக்குறைவால் அவரால் வர முடியவில்லை. உடல்நலம் இல்லை என்பதை ஒரு கவிதை போல எழுதி அனுப்பியிருந்தார். அப் போது அவருக்குக் காதுவலி.

‘மருத்துவரைப் பார்க்கப் போனேன். இருக் கையில் அமரச் செய்தார். சிவபெருமான் போல் நெற்றியில் வெளிச்சக் கண் முளைக்க அருகே வந்தார். ஆசிரியர் போல் என் காதுகளைத் திருகி னார்’ என்பதாக அந்தக் கவிதை இருக்கும்.

அவர் மதுரையில் நாகமலைப் புதுக்கோட் டைப் பகுதிக்குக் குடியேறிய பின்னர் தமிழ் இசைச் சங்கம் விழாவிற்காக மதுரை சென்றிருந் தேன். இவரைப் பார்க்க எண்ணம் வந்தது. என்னுடன் எழுத்தாளர் சுகா இசைக்கவி ரமணன், தங்கை செழியன் ஆகிய நண்பர்கள் அவரைப் பார்க்க ஆர்வத்துடன் கூட வந்தார்கள்.

மகிழ்ச்சியோடு வரவேற்றுச் சிற்றுண்டியும் காப்பியும் கொடுத்தார். வெகு நேரம் பேசிக் கொண்டு இருந்தோம். இசைக்கவி ரமணனைப் பார்த்ததும் ‘‘உங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சி களைப் பார்த்து இருக்கிறேன்’’ என்றார். ரமணன் தன் பாடல்களைப் பாடத் தயாரானார். ‘‘கொஞ்சம் இருங்கள்’’ என்று சொல்லிவிட்டுச் சமைய லறையை நோக்கிக் குரல் கொடுத்தார்.

‘‘எட்டி, அவாப் பாடப் போகிறார். உன் காப்பிக் கடையைச் சாத்திட்டு வா...’’ என்றார்.

பின்னர் ஒரு புகைப்படத்தைக் காட்டினார். வ.உ.சி. அமர்ந்து இருக்க அவர் துணைவியார் நின்று கொண்டிருக்கும் படம் அது. ரமணன் அந்தப் புகைப்படத்தைப் பார்த்து, ‘‘அம்மா உயரமா இருக்காங்க...’’ என்றதும், அடுத்த விநாடி பதில் வந்தது. ‘‘அப்பா உட்கார்ந்திருக்காங்கல்லா...’’

நாங்கள் புறப்படத் தயாரானோம். தன் மனைவியை அழைத்தார். ‘‘இவங்களுக்கெல்லாம் காபி கொடுத்தே பயம் காட்டறியே, சாப்பாடு போட்டுப் பயம் காட்ட வேண்டாமா’’ என்றார்.

ஒவ்வொருவராக விழுந்து வணங்கினோம் ‘‘வயசானப்புறம் எனக்கு ரெண்டே வேலை. லெட் டர் போடறது, ஆசீர்வாதம் பண்றது’’ என்றபடியே திருநீறு பூசினார். இசைக்கவி ரமணன் உணர்ச் சிவயப்பட்ட நிலையில் விழுந்தவர் எழச் சற்றே தாமதமானது. உடனே என்னைப் பார்த்து ‘‘ஒறங்கி விட்டாரோ? எழுப்பி விடணுமோ’’ என்றார்.

இந்தச் சந்திப்புப் பற்றி சுகா ‘‘சுப்பையாவின் மருமகன்’’ என்ற தலைப்பில் அருமையான ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். சுப்பையா என்பது பாரதியைக் குறிக்கும். எங்கள் உரையாடலில் பேச் சுக்குப் பேச்சு பாரதி மாமா என்று வாலேஸ்வரன் அவர்கள் குறிப்பிட்டதுதான் இந்தத் தலைப்புக்குக் காரணம்.

சென்னையில் விழா ஒன்றில் இருந்தபோது, அவருடைய மறைவுச் செய்தி வந்தது. சென்னை யில் புதல்வர் இல்லத்தில் அவர் மறைந்தாரென்று தெரிந்து கொண்டேன். நேரில் சென்று அஞ்சலி செலுத்த வாய்ப்புக் கிடைத்தது.

தன் தந்தையைப் போலவே மன உறுதியும் நேர்மையும் மிகுந்த மனிதர் வாலேஸ்வரன். தன் குழந்தைகளுக்குக் கூட படிப்புக்காகவோ, வேலைக்காகவோ சிபாரிசுக் கடிதங்கள் கொடுத்த தில்லை.

அதிகபட்சமாக அவர்களுக்கு இவர் தந்தவை சான்றிதழ்களே. இன்னார் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.–யின் பெயரன் என்று சான்றளிக்கிறேன் என்பதைத் தாண்டி எதையும் எழுதியதில்லை.

தொழிலாளர் நல அலுவலராக இருந்து பணி ஓய்வுபெற்று எளிமையாகவும் மனநிறைவோடும் வாழ்ந்த வ.உ.சி. வாலேஸ்வரன் அவர்கள் மறக் கவே முடியாத மாமனிதர் !

●

8–ம் பக்கத் தொடர்ச்சி

ஞா. குருசாமிக்கும், சோலை மாயவனின் "விரல்களில் வழியும் விரலற்றவனின் செங்குருதி" எனும் கவிதைத் தொகுப்புக்கும் வழங்கப்பட்டு அவற்றின் ஆசிரியர்கள் சிறப்பிக்கப்பட்டார்கள்.

இந்த ஆண்டின் புத்தகத் திருவிழாவின் தொடக்க விழா, கோவை மாவட்ட ஆட்சியர் கு. ராசாமணி அவர்களால் மேலதிகச் சிறப்புப் பெற்றது. அவர் மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டுமல்லாமல், நல்ல வாசிப்புப் பழக்கம் உள்ளவராகவும் வளர்ந்துள்ளார் என்பதை வாக்குமூலமாகவே அவர் அளித்தார்.

அவருடைய கிராம வாழ்க்கையில் அவருடைய தந்தையார் அவருக்கு வாங்கித் தந்த புத்தகங்களை முறையாகப் படித்து, அதன் தாக்கத்தால் உலகப் புகழ் பெற்ற தத்துவங்களான காந்தியம், மார்க்சியம், ஆன்மிகம் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தார். கூடவே, பள்ளிப் படிப்பையும், கல்லூரிப் படிப்பையும், ஐ.ஏ.எஸ். தேர்வையும் முடித்தார்.

பாடத்திட்டத்திற்கு அப்பால் சென்று படித்த புத்தகங்கள்தான் ஒரு மனிதனை மிகச் சிறப்பாக வடிவமைக்கின்றன என்பதற்கு அவரே உதாரணம். பாடப் புத்தகங்களை மதிப்பெண் வாங்குவதற்காக மாணவர்கள் மனப்பாடம் செய்துகூடப் படித்திருப்பார்கள். புரிந்துதான் படிக்க வேண்டுமென்பதில்லை. தேர்வு வரும்போது அதில் பெறுகிற மதிப்பெண்கள்தான் முதலிடம் பெறுகின்றன. அதனால், பாடத் திட்டத்தைத் தாண்டிச் சென்று படிக்கிற புத்தகங்கள்தான் மாணவப் பருவத்தில் ஒருவனை ஆசைப்பட வைக்கின்றன, கனவு காணச் செய்கின்றன.

அந்த ஆசை ஞானத்தின்மீது ஏற்படுகிற ஆசையாக அமையுமானால், அவருடைய யாத்திரையே ஞான யாத்திரையாக இருக்கும். அது கீழ்த்தரமான காம ஆசையாக இருக்குமானால், அது ஒன்று போதும் மற்ற தீமைகளுக்கு அது கதவு திறந்துவிட. மது, சூது, பொய், பித்தலாட்டம், வஞ்சகம் என அனைத்துக்கும் அந்தக் காம ஆசை கதவு திறந்து விட்டுவிடும்.

ஆனால், அதே ஆசை மடை மாற்றப்பட்டு ஞானத்தின்மீதும், மோனத்தின்மீதும், தியானத்தின்மீதும் செலுத்தப்படுமானால், அதனுடைய விளைச்சல்கள் அமோகமாக இருக்கும். அப்துல் கலாமாக, ஆல்பர்ட் ஐன்ஸ்டீ னாக, ஆர்யபட்டாவாக மாற்றும்.

இதே போலக் கனவு காண்பதும் அப்படித்தான். கலாம் சொல்லுவார், "தூக்கத்தில் வருகிற கனவல்ல நான் சொல்கிற கனவு. தூங்க விடாமல் செய்கிற கனவைத்தான் நான் சொல்கிறேன்" என்பார். ஆகவே, கனவு – அதுவும் இளம்பருவக் கனவு – காதல் கனவாக மாறிவிடக்கூடாது. காதலும் தேவைதான். ஆனால் அது பிரம்மச்சரியத்திற்குப் பிறகுதான்.

ஆதலால், இந்த ஞான ஆசையும் தூங்க விடாமல் செய்கிற கனவையும் தூண்டக்கூடியது எது? நிச்சயமாகப் புத்தகங்கள் அல்லாமல் வேறு அல்ல. அதனால், புத்தகங்கள் என்பவை வாசிப்பவர்களுக்குப் புதுப்புது அகத்தை, புது மனதை, புது நெஞ்சத்தை, புது இதயத்தைத் தருகின்றன.

ஆகவேதான் புத்தகத் திருவிழா, மாரியம்மன் நோன்பைவிட, தைப்பூசத் திருவிழாவைவிட, கிருஷ்ண ஜெயந்தி விழாவைவிட, புனித வெள்ளியைவிட, பக்ரீத் பண்டிகையைவிடப் புத்தகத் திருவிழா உன்னதமானது. 100 சதவிகிதம் அது நலம்தான் தருமே தவிர, தீயதை ஒரு துளியும் தராது.

காந்திஜி, நேதாஜி, நேருஜி, அபுல் கலாம் ஆசாத், ஜே.சி. குமரப்பா, வினோபாபாவே முதலியவர்களையெல்லாம் அவரவர்களின் தாய்மார்கள் பெற்றெடுத்தார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கு ஒரு மறு பிரசவம் நடந்தது. அதனை அவர்கள் வாசித்த புத்தகங்கள்தான் செய்தன.

நம்மில் பலருக்கு ஒரு பிரசவம்தான் நடந்தது. மறு பிரசவத்தை நாம் மறந்து



புத்தகத் திருவிழாவைத் தொடங்கி வைத்துப் புத்தகங்களைப் பார்வையிடும் கோவை மாவட்ட ஆட்சியர் திரு. கு. ராசாமணி

விட்டோம். நடக்காது என்று நம்பியும் விட்டோம். அதனால்தான் புத்தகத் திரு விழாவை நடத்திப் புத்தக வீதிகளுக்குள் இளைஞர்களையும், நடுத்தரமானவர் களையும் நடமாடச் செய்து அவர் களைப் புத்தகங்களை வாங்கி வாசிக்கத் தூண்டுவது ஒரு மகத்தான சேவை. அந்தச் சேவையைத்தான் கோவை மாவட்ட சிறுதொழில்களின் சங்கமான கொடீசியா ஐந்தாவது ஆண்டாகச் செய்துள்ளது.

இதனைத் தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சித்தலைவர் கு. ராசா மணி அவர்கள் பேசுகையில், "ஆக்கப் பூர்வமான ஒரு தலைமுறையை உரு வாக்க வேண்டுமென்றால், அதனை வகுப்பாசிரியர்கள் உருவாக்குவதைவிட, வாசிப்புக்கான புத்தகங்களின் ஆசிரியர் கள்தான் உருவாக்க முடியும்" என்று அவர் குறிப்பிட்டது பொன்னே போல் போற்றத்தக்கது.

இந்த ஆண்டு புத்தகத் திருவிழாவில் 250–க்கும் அதிகமான பதிப்பகங்கள் கலந்து கொண்டன. ரூ. 4.64 கோடிக் குப் புத்தகங்கள் விற்பனையாயின. 3 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் வருகை தந்துள்ளனர். 10 நாட்களும் நடந்த அறிவுக்கேணி, தொழிலுக்கு வந் தனை, பறையிசை, பட்டிமண்டபம், சொற்பொழிவுகள் என எல்லாமே சிறப் பாக அமைந்த நிகழ்ச்சிகளாகும்.

முதலாமாண்டு இது தொடங்கப் பட்ட போது, சி.ஆர்.ஐ. பம்ப் நி றுவனத்தின் அதிபர் திரு. சி. வேலுமணி அவர்கள்தான் இதற்கான சாளரத்தைத் திறந்தவர். உடல்நிலை ஒத்துவராத நிலையிலும்கூட விடா முயற்சியாலும், கோவை மாநகரத்தில் கொடீசியாவை உருவாக்கிய குழுவின் தலைவர் திரு. ஏ.வி. வரதராஜனைப் போலவே, புத்தகத் திருவிழாவை உருவாக்கிய சி.ஆர்.ஐ. பம்ப் நிறுவனத்தின் தலைவர் திரு. சி. வேலுமணி அவர்கள் பாடுபட்டது நினைவுகூரத் தக்கது.

ஆண்டுதோறும் கொடீசியா தலைவர்களே விழாவிற்குப் பொறுப்பேற்கிறார்கள். இந்த ஆண்டு அப்படிப் பொறுப்பேற்றவர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்களும், புத்தகத் திருவிழாத் தலைவர் திரு. விஜய் ஆனந்த் அவர்களும் ஆவர். கொடீசியா அலுவலகப் பொது மேலாளர் திரு. எஸ். ராம்பிரசாத் மற்றும் கொடீசியா சங்கத்தினர் அதிகமாக ஈடுபட்டனர்.

விழாவில் 'இலக்கியக்கூடல்' தலைவர் திரு. டி. பாலசுந்தரம், 'அறிவுக்கேணி'த் தலைவர் இ.கே. பொன்னுசாமி, செயலாளர் தேவராஜன், கவிஞர் கவிதாசன், கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா ஆகியோர் புத்தகத் திருவிழாவின் தூண்களாக அமைந்து துணைநின்றார்கள்.

புத்தகத் திருவிழாவின் புனித நோக்கம் மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை வளர்ப்பதுதான் என்றாலும், ஓர் அரிய முயற்சியாகத் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளர் களின் வாசிப்புப் பழக்கத்தையும்



புத்தகத் திருவிழாவின்
நிகழ்ச்சிக்கு வந்திருந்த வாசகர்கள்.

ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். 'தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற தலைப்பில் இந்நிகழ்ச்சி கள் நடைபெற்றன.

மாலை நிகழ்ச்சிகள் ஜனரஞ்சகமாக அமைக்கப்பட்டிருந்தன. காலை முதல் மாலை வரை புத்தக அரங்குகளுக்குள் சாரை சாரையாகச் சென்று வாசகர்கள் தங்களுக்கு விருப்பமான இலக்கியம், வரலாறு, தத்துவம், நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் எனப் பல்வேறு விதங்களில் புத்தகங்களை வாங்குவதைக் காண முடிந்தது.

இந்த ஆண்டு புத்தக அரங்கிற்கு ஒதுக்கப்பட்ட மண்டபத்திலேயே மாலை நிகழ்ச்சிகளும் ஏற்படுத்தப்பட்டிருந்ததால், வாசகர்கள் அதில் இலகுவாகக் கலந்து கொள்வதற்கு வசதியாக இருந்தது. புத்தகத்தை விலைக்கு வாங்கும் வாசகர்கள் பணம் கொடுத்து வாங்குவதால், அதைப் படிப்பதற்கு நேரத்தைக் கட்டாயம் ஒதுக்கியே தீர்வார்கள். படிக்க முடியாமல் விடுபட்டுப் போன புத்தகங்களை அடுத்த ஆண்டு வாங்கப்படும் புத்தகங்களோடு சேர்த்துப் படிப்பார்கள்.

இவ்வாறு புத்தகங்களை வாங்குகிற பழக்கத்திற்கு இடமளித்துவிட்டால், புத்தகத்தை வாங்கக் கவலைப்படாமல் செலவழிக்கத்தான் செய்வார்கள். ஒன்றை மட்டும் அவர்கள் கடைப்பிடிப்பது நல்லது. தங்களுடைய நண்பர்களுக்கு, அதிலும் குறிப்பாகப் புத்தகத் திருவிழாவிற்கு வராத நண்பர்களுக்குத் தாங்கள் வாங்கிய புத்தகங்களை இரவலாகக் கொடுக்கக்கூடாது.

இரவல் கொடுக்கப்பட்டால் அவர்களுக்கு இலகுவாக இப்புத்தகங்கள் கிடைக்கும் என்பதால், புத்தகத் திருவிழாவின் புனித நோக்கத்தை அது இரண்டாம் நிலைக்குத் தள்ளி விட்டு விடலாம். புதிய புத்தகங்களை வாங்குங்கள். இரவலாகப் புத்தகங்களைத் தராதீர்கள். அதேபோல இரவலாகப் புத்தகங்களை வாங்காதீர்கள் என்றும் வாசகர்களுக்கு அறிவுறுத்த வேண்டிய கடமைப்பாடு இருப்பதாகவே கருதப்படுகிறது.

ஏனெனில், யாரோ ஒரு வாசகர் வீட்டில் ஏராளமான புத்தகங்கள் இருப்பதைப் பார்த்து வியந்த அவருடைய நண்பர், "புத்தகங்களுக்காக நிறையச் செலவழித்திருக்கிறீர்களே!" என்று குறிப்பிட்டாராம்.

அப்போது அந்த நண்பர், "இத்தனையும் விலைக்கு வாங்கிய புத்தகங்கள் அல்ல, இரவலாக வாங்கிய புத்தகங்கள்" என்றாராம்.

ஒரு பள்ளியைக் கட்டுகிற பொழுது பத்துச் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்று ஓர் அறிஞர் சொன்னார். அதேபோலத்தான் ஒரு புத்தகத்தை வாசிக்கிறபொழுது பத்துத் தீய எண்ணங்களை நம்மை விட்டு விரட்டுகிறோம் என்பதும் நிச்சயம்.

புத்தகத் திருவிழா ஆண்டுதோறும் நடக்க வேண்டும். கோவை கொடீசியாவின் புத்தகத் திருவிழா தமிழ்நாட்டிற்குக் கலங்கரை விளக்காக அமையும் காலம் வெகுதொலைவில் இல்லை.

– ந.நி.

9–ம் பக்கத் தொடர்ச்சி

காட்டுபவை. அவற்றை எனக்கு முதன்மையான காவலாக்கினான் என்கிறார் திருமூலர். அவன் திருவடிகள் தண்மை மிக்கவை. நின்னில் சிறந்த நின்தாள் இணையவை என்றது போல, அவனுடைய திருவடிகள் எனக்குப் பெருந்துணையாயின. அவை என் மனத்தை உருக்கி, ஒப்பில்லாத ஆனந்தமயமான அருட்கண்ணைக் காட்டி, என்னோடு கலந்திருந்த ஆணவக் களிம்பை அகற்றி இரும்பைப் பொன்னாக்கின.

அவன் அருள் இரும்பைப் பொன்னாக்கும். செம்பைக் களிம்பு நீக்கிச் செம்பொன்னாக மாற்றும். இந்த அனுபவம் யான் பெற்றேன் என்கிறார் திருமூலர். இப்பாடலில் கண்ணின்று காட்டி என்பதைக் கண் நின்று காட்டி எனப் பிரிக்கலாம். நாம் வினையில் கிடந்தோம். இறைவன் நம்மைக் காப்பாற்ற வந்தான். நாம் அவனைக் கண்டு கொள்ளவில்லை. அவன் நமக்காக நின்றான்.

“வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று / போது நான் வினைக் கேடன் என்பாய் போல / இனையன்யான் என்றுன்னை அறிவித்து / என்னை ஆட்கொண்டு எம்பிரான் ஆனாய்க்கு இரும்பின்பாவை / அனையநான் பாடேன்நின் றாடேன் அந்தோ / அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன் / முனைவனே முறையோ நான் ஆனவாறு / முடிவறியேன் முதலந்தம் ஆயினானே” என்பது மணிவாசகர் பாடிய திருவாசகம். இறைவன் அவனைக் காணக் கண் தந்து காட்டி அருள்புரிந்து, ஞானம் கொடுத்து நமச்சிவாயமாய் நின்றான். இது திருமூலர் பெற்ற அனுபவம்.

“சக்கர வர்த்தி தவராஜ யோகி எனும் / மிக்கதிரு மூலனடி மேவுநாள் எந்நாளோ!” என்று தாயுமானவரால் போற்றப்பெற்ற திருமூலரின் இயற்பெயர் சுந்தரநாதர் என்றும், இவர் மதுரையில் பிறந்தவர் என்றும் கூறப்படுகிறது.

அகத்தியர் அருள் பெற்றவர் இவர். திருக்கயிலையில் சிவபெருமான் திருக்கோயிலுக்கு முதற் பெருங்காவலரான திருநந்தி தேவரிடம் இவர் மாணாக்கராக இருந்தார். இவருடன் பயின்ற பள்ளித் தோழர்கள் ஏழு பேர். இவர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர், சிவயோக மாமுனி, தில்லையில் திருக்கூத்துக் கண்ட பதஞ்சலியார், வியாக்கிரபாதர் எனப்படுவர். இதைத் திருமூலர் திருமந்திரத்தில்,

“நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடின் / நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி / மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர் / என்றிவர் என்னோடு எண்மரும் ஆமே” (6) என்று குறிப்பிடுகிறார்.

இந்தச் சுந்தரநாதர் அகத்திய முனிவரைக் கண்டு வணங்கி, அவரோடு சில நாள் தங்க வேண்டும் என்றெண்ணிக் கயிலையை விட்டுப் புறப்பட்டார். தென்திசை நோக்கி வரும் வழியில் திருக்கேதாரம், பசுபதி நேபாளம், காசி, திருப்பருப்பதம், திருக்காளத்தி, திருவாலங்காடு ஆகிய தலங்களை வழிபட்டார். காஞ்சிக்கு வந்தார். கச்சி யேகம்பனை வணங்கினார். அங்கிருந்த யோகியர் தமைக் கண்டு பேசினார். திருவதிகை சென்று புரமெரித்த பெருமானை வழிபட்டுத் தில்லைக்கு வந்தார். திருநடம் கும்பிடப் பெற்றார். ஆராத காதலுடன் அம்பலத்தான் அடிபோற்றிச் சீரான நடம் கண்டு சில காலம் அங்கிருந்தார்.

அதன்பின் அங்கிருந்து புறப்பட்டார். காவிரிக் கரையோரமாக வந்தார். சிவபெருமானுக்கு விடம் கொடுத்தது என்பதால், உலக மக்களுக்கு நிறையத் தண்ணீரைக் கொடுத்துவிட்டுக் கடல் வயிறு நிறையாத காவிரியின் கரையணைந்து காவிரியில் நீராடித் திருவாவடுதுறைக்கு வந்தார்.

உமையம்மையார் பசுங்கன்றாக இருந்து சிவபிரானை வழிபட்ட திருத்தலமான ஆவடுதுறையில் இறைவனை வணங்கினார். அங்கேயே இருக்கலாமா என்று மனம் நினைத்தது. துறவிகள் ஒரே இடத்தில் இருக்கக்கூடாது. அவர்களுக்கு ஊர்ப்பற்று வரக்கூடாது என்றெண்ணி, அங்கிருந்து புறப்பட்டார். காவிரிக் கரையிலுள்ள ஒரு காட்டுப் பகுதியில் பசுக்கள் கண்ணீர் விடுவதைக் கண்டு இரங்கினார்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடக் கூடிய மனம், பசுக்களின் துன்பத்தை மாற்றத் துடித்தது. துன்பத்தின் காரணம் தெரிந்தது. பசுக்களை மேய்க்கும் மூலன் என்ற ஆய்க்குலத்து மேய்ப்பான் இறந்து கிடந்தான். அவன் உடம்பைச் சுற்றி நின்று பசுக்கள் கதறின. அவன் உடம்பை மோந்து பார்த்து வருந்தின.

இப்பசுக்களின் துயரைப் போக்க வேண்டும் என்ற எண்ணம் இறைவன் திருவருளால் சிவயோகியாருக்குத் தோன்றியது. சிவனருளால் இப்பசுக்களின் துன்பத்தை மாற்றுவேன் என்று எண்ணி, யோக சாதனையால் பரகாயப் பிரவேசம் செய்து, தன்னுடம்பை மறைத்து வைத்துத் தன்னுயிரை அவன் உடம்பில் செலுத்தினார்.

மூலன் உடம்பில் புகுந்ததால், சுந்தரநாதர் திருமூலராய் எழுந்தார். பசுக்களின் துன்பம் தீர, அவை அவருடம்பை நக்கிப் பார்த்து மகிழ்ந்தன. வாலைத் தூக்கித் துள்ளி ஆடின. விருப்பத்தோடு புல் மேய்ந்தன. மாலையில் பசுக்கள் மெல்ல நடந்து சாத்தனூரை அடைந்தன. சிவயோகியான திருமூலர் அவ்வூர் வழியில் தனியே நின்றார்.

இவரைத் தேடி வந்த மூலன் மனைவி, இவரை வீட்டிற்கு அழைத்துச் செல்ல நினைத்து நெருங்கிச் செல்ல, இவர் விலகிச் சென்றார். அவள் புலம்பினாள். ‘‘அன்பு மிக்க மனையாளை

வெறுத்து ஒதுக்கினால், அவள் மனம் என்ன பாடு படும்?'' என்று கேட்டாள். இவர், ''உனக்கும் எனக்கும் உறவில்லை'' என்றார்.

அங்கிருந்த பொது மடத்திற்கு வந்து சிவ யோகத்தமர்ந்தார். அன்றிரவு முழுவதும் மூலன் மனைவி தூங்கவில்லை. விடிந்தது. அவ்வூர்ச் சான்றோர்களிடம் முறையிட்டாள். அவர்கள் வந்து சிவயோகத்திலிருந்த திருமூலர் திருமுகத்தில் சிவனருள் பொழிவதைக் கண்டு திகைத்துத் தெளிந்தார்கள்.

''இது பித்தல்ல, பேயல்ல, பெரும் பெருமான் திருக்கருணை. பற்றறுக்கும் சிவபெருமான் பதம் பெற்றார் இம்முனிவர். ''இனிமேல் மூலன் நம் சுற்றத்தார் இயல்புக்குத் திரும்பமாட்டான்'' என்று கூறி, அவளைத் தேற்றி அழைத்துச் சென்றார்கள். திருமூலர் எழுந்து காட்டுப் பகுதிக்கு வந்து தன் பழைய உடலைத் தேடினார். காணவில்லை. இது ஈசன் அருள் என உணர்ந்தார். சிவபெருமான், தான் கூறிய ஆகமப் பொருளைத் தமிழில் பாடத் திருவருள் கூட்டி, அதற்காகவே உடலை மறைத்தார் என்பது தெரிந்தது.

"தண்நிலவார் சடையார்தாம் தந்தஆ கமப் பொருளை / மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்பக் / கண்ணியஅத் திருவருளால் அவ்வுட லைக் கரப்பிக்க / எண்ணிறைந்த உணர்வுடையார் ஈசர் அருள் எனஉணர்ந்தார்" என்பது சேக்கிழார் திரு வாக்கு. இதன்படி மூலன் உடம்பில், தான் இருக்க வேண்டும் என்பது இறைவன் திருவுள்ளம் என உணர்ந்த திருமூலர், தம்மைத் தொடர்ந்து வந்த ஆயர் குலத்து மக்களுக்கு அறிவுரை கூறினார். அவர்களுக்கும் தனக்கும் தொடர்பில்லை என்று உணர வைத்தார்.

அவர்கள் திரும்பிய பின் இவர் திருவாவடு துறை ஆலயத்திலுள்ள அரச மரத்தின்கீழ் யோகத் தில் அமர்ந்தார். உலகத்தார் வாழ வேண்டும் என்றெண்ணினார். அவர்கள் இறையருள் பெற்று உய்ய வேண்டும் என்றும், ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்றும் நினைத்தார்.

இறைவன், தன்னைப் படைத்தது அவனைத் தமிழால் பாடுவதற்கே என்பதை அறிந்தார். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மலர்களையும் சேர்த்துத் திருமந்திரமாலை கட்டி னார். ''ஒன்றவன் தானே'' என்று தொடங்கி, ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்கள் பாடினார். இவ்வுலகில் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து திருக்கயிலை சேர்ந்தார். இது சேக்கிழார் கூறும் திருமூலர் வரலாறு. இந்த வரலாறு, திருமந் திரப் பாடல்களில் உள்ள அகச் சான்றுகளைக் கொண்டே எழுதப்பட்டது.

"நந்தி யருளாலே மூலனை நாடிப்பின் / நந்திய யருளாலே சதாசிவ னாயினேன் / நந்திய யருளால் மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன் / நந்தி அருளாலே நான்இருந் தேனே" (29) என்றும்,

"பின்னைநின் றென்னே பிறவி பெறுவது / முன் னைநன் றாக முயல்தவம் செய்திலர் / என்னைநன் றாக இறைவன் படைத்தனன் / தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே" (20) என்றும் திருமூலர் குறிப்பிடு கிறார். இவர் பாடிய திருமந்திரம் சிவகதிக்கு வித்தாகக் கருதப்படுகிறது.

திருமந்திரத்தில் கடவுள் வாழ்த்துப் பாடலாக உள்ள விநாயக வணக்கப் பாடல் எல்லோராலும் பாடப்படுகிறது.

"ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை / இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை / நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப் / புந்தியில் வைத்தடி போற் றுகின்றேனே" என்பது அப்பாடல். இதை எழுதியவர் திருமூலர் அல்ல. வேறொரு தமிழறிஞர். அவர் பெயர் தெரியாது. ஏனென்றால்,

1. திருமூலர் வாழ்ந்த காலத்தில் விநாயக வணக்கம் கிடையாது. திருமந்திரத்தில் விநாயக ரைப் பற்றி எங்கும் குறிப்பிடவில்லை. (முருகனைப் பற்றிய குறிப்புள்ளது). விநாயக வணக்கம் 7–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் தமிழ்நாட்டிற்கு வந்தது. திருமூலர் இதற்கு முன்பு வாழ்ந்தவர்.

2. 'ஒன்றவன் தானே' என்று தொடங்கித் திருமந்திரமாலை பாடினார் என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார்.

"ஊனுடம்பில் பிறவி விடம் தீர்ந்து உலகத்தோர் உய்ய / ஞானமுதல் நான்கு மலர் நற்றிருமந் திரமாலை / பான்மைமுறை ஓராண்டுக்கு ஒன்றாகப் பரம்பொருளாம் / ஏன எயிறு அணிந்தாரை 'ஒன்றவன் தான்' என எடுத் துப்" பாடியதாகச் சேக்கிழார் கூறுகிறார். எனவே, இந்த விநாயக வணக்கப்பாடல் திருமந்திரப் பாடல்கள் போலவே, சான்றோர் ஒருவரால் எழுதப் பட்டுப் பின்னால் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

இத்திருமந்திம் ஒன்பது தந்திரங்களாக வகுக் கப்பட்டுள்ளது. 'ஆகமம் ஆகி நின்று அண்ணிப் பான் தாள் வாழ்க' என்று மணிவாசகர் குறிப்பிடும் ஆகமச் செய்திகளைத் திருமூலர் ஒன்பது தந் திரங்களாக வகைப்படுத்தி மூவாயிரம் பாடல் களாகப் பாடினார். இதை, "தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம் / சுந்தர(ன்) ஆகமச் சொல்மொழிந் தானே" (38) என்ற திருமந்திரம் எடுத்துக் காட்டுகிறது. திருமூலர் தில்லையில் திருக்கூத்துக் கண்டபின் நெடுங்காலம் இவ்வுலகில் வாழ்ந்தார் என்பதை,

"செப்பும் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும் / அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றும் / தப்பிலா மன்றில் தனிகூத்துக் கண்டபின் / ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே" (13) என்ற பாடல் எடுத்துக் காட்டுகிறது.



சமையல்

தினைப் பணியாரம்

தேவையானவை : தினை மாவு 400 கிராம், வெல்லம் 1 கிலோ, தேங்காய்த் துருவல் 1/2 டம்ளர், சமையல் சோடா 3 சிட்டிகை, நெய் 5 தேக்கரண்டி, ஏலக்காய் தூள் 1/4 தேக்கரண்டி, எண்ணெய் தேவைக்கு.

செய்முறை :

1. தினை மாவை லேசாக வறுத்து எடுக்கவும்.
2. வெல்லத்தைப் பொடித்து நீரிலிட்டு நன்கு கரைத்து, வடிகட்டிக் கொள்ளவும்.
3. அடிக்கனமுள்ள பாத்திரத்தில் வெல்லக் கரைசலை ஊற்றி, பாகு காய்ச்சவும்.
4. பாகு முக்கால் பதம் வந்ததும், தினை மாவு, தேங்காய்த் துருவல், ஏலக்காய்த் தூள் சேர்த்து இறக்கவும்.
5. நன்கு ஆறினதும், சமையல் சோடாவை இத்துடன் கலந்து, நன்கு பிசைந்து ஐந்து மணி நேரம் வைக்கவும்.
6. பின்னர் இத்துடன் நெய் நன்கு கலந்து கொள்ளவும்.
7. கலவையை எலுமிச்சம் பழ அளவு உருண்டைகளாக உருட்டி, நடுத்தர அளவு வட்டமாகத் தட்டி, நன்குக் காய்ந்த எண்ணெயிலிட்டு வேக வைத்து எடுக்கவும்.

சுவையான 'தினைப் பணியாரம்' தயார். தினையில் தாதுப் பொருட்கள் கணிசமாக உள்ளதால், ஆரோக்கியத்திற்கு நல்லது. குழந்தைகள் முதல் பெரியவர் வரை விரும்பிச் சாப்பிடுவர்.

– ஆர்.ஏ. ரமா, சென்னை.

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 37 செப்டம்பர் 2019 இதழ் : 8

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர்: **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **த. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு.

'ஓம் சக்தி'யில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள் அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர, பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ. 265/-
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423
வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com

கட்டுரை



விண்ணைத் தேடி



நம் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் நீல வானம் – பகலில் கதிரவன், மேகக்கூட்டங்கள். இரவில் வெண்ணிலா, நட்சத்திரக்கூட்டங்கள் விண்ணை அலங்கரிக்கின்றன.

பறவைகளைப் பாருங்கள், சிறகடித்துப் பறக்கின்றன. வானில் வட்டமிடுகின்றன. கூட்டம் கூட்டமாகக் கண்டம் விட்டுக் கண்டம் செல்கின்றன. நமக்குச் சிறகுகள், இறக்கைகள் இல்லை. ஆம்! நம்மால் பறக்க முடியாது! தொன்று தொட்டு மனித இனத்திற்கு வானத்தில் பறக்க ஆசை, விண்ணைத் தொட ஆசை. பலர் முயற்சித்தனர். எல்லோரும் தோல்வி கண்டனர்.

ஆனால், ரைட் சகோதரர்கள் (Wright Brothers) வெற்றி கண்டனர். வட அமெரிக்காவில், 1903–இல் தங்கள் கைகளால் ஒரு விமானம் செய்து, எஞ்சின் பொருத்தி முதல் முறையாக வெற்றிகரமாக ஒரே ஒரு நிமிடம் விண்ணில் பறந்து காட்டினர். மனித சமுதாயத்தின் நீண்ட காலக் கனவை மெய்யாக்கிச் சரித்திரத்தையே மாற்றிய நிகழ்ச்சி இது.

அன்று ஒரு நிமிட விமானப்பயணம், இன்று நினைத்துப் பார்க்கக்கூடாத அளவில் மிக்க முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த முன்னேற்றத்திற்குச் சென்ற நூற்றாண்டில் வளர்ந்த விஞ்ஞானம் முக்கியக் காரணமாக இருந்திருக்கிறது.

பள்ளிப்படிப்பைத் தாண்டாத ரைட் சகோதரர்கள், தமக்கென்று வகுத்துக் கொண்ட விஞ்ஞான முறைகள் இன்றும் விஞ்ஞானிகளை வியக்க வைக்கின்றன. ரைட் சகோதரர்களின் கடின உழைப்பு, கண்டுபிடிப்பு மனித இனத்தின் விண்ணைத் தொடும் முயற்சியில் முக்கியக் கட்டம்.

ரைட் சகோதரர்கள் ஐந்து மக்களில் இருவர். வில்பர் ரைட் (Wilbur Wright), ஆர்வில் ரைட் (Orville Wright) ஆகிய இரு சகோதரர்களுக்கு நான்கு வயது வித்தியாசம். மூத்த வில்பரும், இளைய ஆர்விலும் குணங்களில் மிகவும் மாறுபட்டவர்கள். இருப்பினும் சிறு வயதிலிருந்து இவர்களிடம் தனித்த ஒற்றுமைகள் இருந்தன. ஒருவரை ஒருவர் சார்ந்திருத்தல், கூட்டுறவு, வரம்பில்லாக் கற்பனைகள், வாதாடுதல் முதலியவை

பேரா. டாக்டர் க. பாஸ்கரன்

தெளிவாகத் தெரிந்தன. பல சமயங்களில் ஒன்று போல் சிந்தித்தனர். இணைபிரியாச் சகோதரர்கள் இவர்கள்.

ரைட் சகோதரர்களின் அன்புத் தாய் – தந்தையர் சூசன் ரைட், மில்டன் ரைட் என்ற வெள்ளைக்காரர்கள். கல்லூரியில் படித்திருந்த தாய் சூசன் கைத்திறமை மிக்கவர். குதிரை வண்டி தயாரித்த தனது தந்தைக்குச் சிறு வயதில் உதவியாக இருந்து கற்றதன் மூலம் தனது வீட்டிலுள்ள கருவிகளைச் செப்பனிடுதல், இருப்பதை வைத்துப் புதிய பொருள்கள், கருவிகள் செய்தல் முதலியவற்றில் ஈடுபடுவார், மகிழ்வுடன் செய்வார்.

தந்தை மில்டன் ஒரு கிறிஸ்தவப் போதகர். இயற்கையை உன்னிப்பாகக் கவனிப்பவர். மனித நேயம் மிக்க இவர் அடிமைத்தனத்தை (வெள்ளையர்கள் கருப்பர்களை அடிமைப்படுத்துவதை) வெளிப்படையாக எதிர்த்துப் போராடியவர்.

சூசனும் மில்டனும் ஐந்து மக்களை அன்புடன் வளர்த்தனர். பள்ளியைத் தாண்டிக் கற்றல் (Education beyond School) என்பதை நம்பினர். எதையும் மனம் விட்டுப் பேசுதல், கலந்துரையாடல், விளையாட்டு, கைவேலை செய்தல் எனக் கலகலப்பான குடும்பம். சிந்தனை ஊட்டும், இயற்கையின் மேல் ஆர்வமூட்டும் நல்ல புத்தகங்கள் வீட்டில் நிறைந்திருந்தன.

மில்டன் நிறையப் பயணம் செய்வார். அந்தச் சமயங்களில் தனது குடும்பத்திற்கு விடாமல் கடிதம் எழுதுவார். இயற்கை, புதிய ஊர்கள், மக்கள், சமுதாயம், மனிதாபிமானம், சரித்திரம் எனப் பலவற்றைப் பற்றி நிறையப் புத்தகங்கள் பயணத்தின்போது வாங்கி வருவார். இந்த நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தது.

இந்த நல்ல சூழ்நிலையில் வில்பர், ஆர்வில் வளர்ந்தனர். இவர்களுக்கு 11, 7 வயதிருக்கும் போது ஒரு முறை தந்தை தனது பயணம் முடிந்து வீடு திரும்பும்போது ஓர் எளிமையான அன்புப் பரிசு, ஒரு விளையாட்டுப் பொம்மை வாங்கி வந்தார். மூங்கில் குச்சி, பேப்பர், காற்றாடி, ரப்பர் நாடாவால் செய்யப்பட்ட ஹெலிகாப்டர் பொம்மை அது. பெனாவுட் என்ற புகழ்பெற்ற பிரெஞ்சுக்காரரின் கண்டுபிடிப்பு அது.

ரப்பர் – குச்சியை முறுக்கிவிட்டால், காற்றாடி சுற்றி பொம்மை தரையிலிருந்து மெதுவாக மேலே எழுந்து அந்தரத்தில் சிறிது நேரம் பறக்கும். ஆர்வமிக்க இரு குழந்தைகளை இந்தப் பொம்மை அசத்தியது. இளம் மனங்களில் கற்பனை சிறகடித்துப் பறந்தது.

இந்த மாதிரி பொம்மை செய்து நாம் விண்ணில் பறக்க வேண்டும், அது முடியும் என்ற ஒரு கற்பனை, இரு இளம் மனங்களில் உருவாயின. பொம்மையை வைத்து நிறைய விளையாடினர். பொம்மையை உடைத்தனர். மனம் தளரவில்லை. அதே மாதிரி பொம்மையைத் தாங்களே செய்தனர், இயக்கினர். அதன் இயக்க முறை ஓரளவு இளம் மனதில் பதிந்தது. ஆர்வம் கூடியது.

இதே மாதிரி ஹெலிகாப்டர், ஆனால் கொஞ்சம் பெரியதாகச் செய்தனர். அது தாங்கள் எதிர்பார்த்த மாதிரி பறக்க மறுத்தது. ஏன் என்று புரியவில்லை. இந்தக் கேள்வி அவர்கள் மனதில் ஆழமாகத் தங்கியது. தனது அன்புப் பரிசு சகோதரர்களின் வாழ்க்கைப் பாதையை மாற்றி ஒரு காலத்தில் அவர்களை விண்ணில் பறக்க வைக்கும் என்று தந்தை கற்பனை செய்திருக்க மாட்டார்.

இருப்பினும் தாய், தந்தைக்கு இரு சகோதரர்கள் ஏதோ சாதிக்கப் போகிறார்கள் என்ற உள் நம்பிக்கையை உருவாக்கியது. ஒருமுறை ஆர்வில் ஒரு மாதமாகப் பள்ளிக்கூடம் செல்லவில்லை என்று தெரிய வந்தது. ஏன் என்று கேட்க, ‘நண்பன் வீட்டில் புதிய தையல் மெஷின் சரியாக வேலை செய்யவில்லை. அதைப் பிரித்துப் போட்டு எப்படி வேலை செய்கிறது என்று கற்றுக் கொண்டு, சரி செய்து வருகிறேன்’ என்ற பதில் வந்தது.

தாய் – தந்தையர் ஆர்விலைக் கடிந்து கொள்ளவில்லை. கோபப்படவில்லை. ‘தம்பி, மாலை நேரங்களில் உன் நண்பனின் தாய்க்கு உதவு. தையல் மெஷினைச் சரி செய். ஆனால், பள்ளிக்கூடம் செல்லத் தவறாதே’ என்று அன்பாய்ச் சொன்னார்கள். ஆர்விலும் பணிந்தான்.

இன்னொரு முறை, சிறுவன் ஆர்வில் பெற்றோரிடம் ‘அருகிலுள்ள அச்சாபீஸில் மாலை ஓய்வு நேரங்களில் சிறு வேலை செய்து, அச்சு மெஷின் எப்படி வேலை செய்கிறது என்று கற்றுக் கொள்ளப் போகிறேன்’ என்று அனுமதி கேட்டான். பெற்றோர் மறுக்கவில்லை.

சில மாதங்களில் சகோதரர் இருவரும் வீட்டில் ஒரு தச்சுப் பட்டறை உருவாக்கத் தொடங்கினர். மாலை நேரங்களில் வேலை செய்து சம்பாதித்த சிறு பணத்தை வைத்து, விரைவில் ஒரு இரும்புப் பட்டறையும் வீட்டில் உருவானது. சிறு வயதில் நல்லொழுக்கம் கெடாமல் கற்க முடிந்தவற்றைக் கற்பது அவர்கள் வருங்கால வாழ்க்கைக்கு நல்லது என்று பெற்றோர் நம்பினர். சகோதரர்களின் முன்னேற்றத்தை உற்றுக் கவனித்தனர்.

விரைவில் ஆர்விலுக்கு ஓர் அச்சு இயந்திரம் செய்ய ஆசை வந்தது. இரு சகோதரர்களும் அதைப்பற்றிப் பேசத் தொடங்கி, ஓர் அச்சு இயந்திரம் உருவாக்கும் வேலையில் இறங்கினர்.

முதலில் பலவிதமான மாதிரிகளைப் (Designs) பேப்பரில் வரைந்து கலந்து பேசி, எது நல்லது என்று தேர்ந்தெடுத்தனர். பழைய மரப்பலகையை எடுத்து அதில் எழுத்துக்களை, வடிவங்களைக் கடைந்து, மை தடவிப் பழைய கல்லறைக் கல் ஒன்றை எடுத்து, அதைத் தளமாக வைத்து, இடையில் பேப்பர் அல்லது துணியை வைத்து அழுத்தி வெற்றிகரமாக ஓர் அச்சு மெஷினைச் செய்தனர். பள்ளிப்படிப்பை விடாமல் ஓர் அச்சாபீஸ் தொடங்கினர். மற்றவர்களுக்குத் தேவையானதை அச்சிடுவது மட்டும் இன்றித் தாங்களே ஒரு சிறு செய்தித்தாள் தொடங்கினர்.

இந்தக் காலகட்டத்தில் மூத்தவன் வில்பருக்கு ஹாக்கி விளையாட்டில் ஒரு விபத்து ஏற்பட்டு, மேல் தாடை, பற்கள் நொறுங்கி முகம் விகாரமாகி மிகவும் கஷ்டப்பட்டான். மிகவும் நன்றாகப் படிக்கும் வில்பரின் திட்டம் மற்றும் அவனது பெற்றோர்களின் ஆசை, இந்த ஆண்டு பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு அடுத்த ஆண்டில் புகழ் பெற்ற 'யேல்' (Yale) பல்கலைக் கழகத்தில் சேர்வது.

இந்தத் திட்டம் மாறி, வீட்டிலேயே தங்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது. அந்தச் சமயத்தில் அவனது தாய் காசநோயால் பாதிக்கப்பட்டுப் படுத்த படுக்கையில் இருந்தார்.

நான்கு ஆண்டுகள், தாய் காலமாகும் வரை, தாயை அன்புடன் கவனித்து, அவர்களிடம் நிறைய அறிவுரை, பொது விஷயங்கள் பற்றித் தெரிந்து கொண்டான். இந்த நான்கு ஆண்டுகளும் பள்ளி, கல்லூரியைத் தாண்டிய உயர் படிப்பாக அமைந்தது.

கல்லூரியில் சேர முடியாமல் வீட்டில் வில்பர் இருந்த சமயம், தம்பி ஆர்வில் 10–ஆவது படிக்கும் சமயம், இன்னொரு மாறுதல்! அந்தச் சமயத்தில் அமெரிக்காவிலும், உலகமெங்கும் சைக்கிள் பிரபலமாகிக் கொண்டிருக்கிறது. சைக்கிள் இயங்கும் விதம், கீழே விழாமல் அதை ஓட்டக் கற்றுக் கொள்ளும் முறை இந்தச் சகோதரர்களைக் கவர்ந்தது.


வில்பர் ரைட், ஆர்வில் ரைட் சகோதரர்கள்

பழைய சைக்கிள் ஒன்றை வாங்கி, அது எப்படி இயங்குகிறது என்று முதலில் கற்றுக் கொண்டனர். படிப்படியாகச் சைக்கிள் ரிப்பேர் செய்யக் கற்றுக்கொண்டு ஒரு சைக்கிள் கடை ஆரம்பித்தனர்.

தங்களது இரும்புப் பட்டறையை வளப்படுத்தி, சைக்கிள் பாகங்கள் செய்ய ஆரம்பித்தனர். விரைவில் பல விதமான உதிரி பாகங்கள் சேகரித்து, தாங்களே வடிவமைத்து வித்தியாசமாகச்



பொம்மை ஹெலிகாப்டரை அன்பளிப்பாகக் கொடுத்தபோது அவர்களுக்கு உள்ள அளவு மிகுந்த ஆர்வம், குழந்தைகளுக்கே உரித்தான ஒன்று. விஞ்ஞானியாவதற்கு முதல் படி ஆர்வம்.

மாபெரும் விஞ்ஞானி ஐன்ஸ்டைன் ஒரு முறை தன்னைப் பற்றி, "எனக்குச் சிறப்புத் திறமை எதுவும் இல்லை. நான் உணர்ச்சிப்பூர்வமான ஆர்வம் நிறைந்தவனாய் உள்ளேன்" (I have no special talent. I am only passionately curious) என்று கூறுகிறார்.

குழந்தைப் பருவத்தில் ஓங்கியுள்ள ஆர்வம், வளரும் பருவத்தில் குறைய வாய்ப்புகள் பல உள்ளன. ரைட் சகோதரர்களின் ஆர்வம் வாலிபப் பருவத்திலும் குறையவில்லை. மாறாக, கூடியது என்று சொல்லலாம்.

பொம்மை ஹெலிகாப்டர், தையல் மெஷின், அச்சு இயந்திரம், சைக்கிள் இவற்றைப் பார்த்த போது அளவு கடந்த ஆர்வம் உண்டாகியது. விஞ்ஞானியாவதில், ஆர்வத்துக்கு அடுத்த கட்டம் துருவித் துருவிக் கேள்விகள். ஏன், எப்படி எனக் கேட்பது. இந்தக் கேள்விகள்தான் அவர் களைப் பரிசோதனை முயற்சிகளில் இறக்கின.

பொம்மை ஹெலிகாப்டரை உடைத்துச் சோதனை செய்தனர். தையல் மெஷினைக் கழற்றிப் போட்டுச் சோதனை, அச்சு இயந்திரம் சோதனை, சைக்கிள் செய்து சோதனை எனப் பல சோதனைகள் மூலம் ஓரளவு புரிந்தபின், அடுத்த கட்டமாகச் சிறு மாறுதல்கள் மூலம் புதியவற்றை

சைக்கிள்கள் செய்யத் தொடங்கினர்.

இந்தச் சமயத்தில் இளைய சகோதரன் ஆர்வி லும் தனது பள்ளிப்படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டான். ஒரு காரணம், வெற்றிகரமாக நடந்து வருவாய் ஈட்டிய சைக்கிள் கம்பெனி. இன் னொரு காரணம், அவர்களின் கற்பனைக்கும், திறமைக்கும் ஈடு கொடுக்கும் வாய்ப்புகள் பல வந்தன.

இந்தச் சமயத்தில் சிறு வயதுக் கனவு திரும்ப வந்தது. மனிதனே இயக்கிப் பறக்க ஓர் இயந்திரம் செய்ய வேண்டும் – பறவைகள் போலப் பறக்க வேண்டும்!

கல்லூரிக்குச் செல்லாத வாலிபர் இருவர், மாபெரும் விஞ்ஞான, தொழில் நுட்பக் கண்டு பிடிப்பு ஒன்றுக்கு எப்படித் தங்களைத் தயார் செய்து கொண்டனர்? சிறு பருவத்தில் தொடங்கி வாலிப வயது வரை தாங்களே தங்களுக் கென்று வகுத்துக்கொண்ட விஞ்ஞான வழிமுறைகளைச் சிறிது பார்ப்போம்.

தனது தந்தை தங்களுக்கு ஒரு



உருவாக்குதல். சற்றுப் பெரிய ஹெலிகாப்டர் செய்ய முயன்றனர். அவ்வளவுதான். ஆனால் தோல்வி.

இந்தச் சோதனைகள், கேள்விகள், தோல்விகள் மூலமாக இயற்கையின் விதிகளைப் புரிந்து கொள்ளுதல், விஞ்ஞானியாவதில் அடுத்த கட்டம், ஹெலிகாப்டர் பறக்க விடும்போது தாங்கள் செய்த சைக்கிளை ஓட்டும் போது காற்றின் அழுத்தம், எதிர்ப்பு விசை, உந்தல், ஓட்டம் முதலிய பௌதிக விதிகளையும் புத்தகம் படிக்காமல் உணர்ந்தனர், கற்றுக் கொண்டனர்.

(மீதி அடுத்த இதழில்)

பெருமைக்குரிய கலாம்!

ஐஸ்லாந்து நாட்டின் வரலாற்றிலேயே ஒரு வெளிநாட்டு அதிபருக்காக முதன் முறையாக சைவ உணவு பரிமாறப்பட்டது. அந்தப் பெருமைக்குரிய அதிபர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்!

– நெ.இராமன், சென்னை.



கட்டுரை

எவ்விடத்துக்குச் சென்றனையோ...?

“ஏண்டி... மூஞ்ச ‘உம்’முன்னு வச்சுக்கிட்டு...” கேட்டுக் கொண்டே அருகில் வந்தாள் ராணி.

மகளிர் கல்லூரி உணவு இடை வேளை. மரத்தடியில் நடந்தது அரட்டை அரங்கம்.

காலையிலிருந்தே வாணியின் முகம் வாடிப்போய் இருப்பதைக் கவனித்தாள் ராணி. ‘சரி உணவு இடைவேளையில் விசாரித்துக் கொள்வோம்’ என இருந்துவிட்டாள். வாணியின் நெருங்கிய சினேகிதி ராணி.

“என்னடி சொல்லு. நேத்துதான் உன் ஆளோட அவுட்டிங் போயி சுத்திட்டு வந்தியே, அப்புறம் என்னவாம் அம்மாளுக்கு” என்று கிண்டலடித்தாள் ராணி, “அங்கதாண்டி சிக்கல்” என்றாள் வாணி பதற்றத்துடன். “ஏண்டி வீட்டுல மாட்டிக்கிட்டியா சொல்லு.” ‘ஆமாம்’ எனத் தலை அசைத்தாள் வாணி. “என்னதான் நடந்துச்சி சொல்லி தொலையேண்டி என்று அன்பால் அதட்டினாள் ராணி.


“நேத்து சந்தோஷ் கூட படத்துக்குப் போயிட்டு வீட்டுக்குப் போகும் போது லேட் ஆயிடுச்சி. அம்மா ஏண்டி லேட்டுன்னு கேட்டாங்க.”

“அது வழக்கமா எல்லா அம்மாக்களும் கேக்கிறதுதானேடி.”

“ஆமாம். நான்தான் கொஞ்சம் அவசரப்பட்டுட்டேன். தினமும் இதே கேள்வியே கேட்டுக் கேட்டு மூடு அவுட்டாயி படபடனு என்ன பேசுறோமுன்னு தெரியாமப் பேசிக் கெடுத்துட்டேண்டி.”

“நீ அப்படி என்ன சொன்ன...?”

“நான் என்ன...? காலேஜ் கட் அடிச்சுட்டு லவ்வரோட ப்ரூக்–பீல்டு போயி சுத்திட்டுப் படம் பார்த்துட்டு வர்றேன்னு நெனச்சியா”ன்னு வாய் தவறி நடந்ததை அப்படியே உளறிக் கொட்டிட்



மா. காமராஜ்

டேன்டி அவ்வளவுதான், அம்மா பத்ரகாளி ஆயிட்டா.

"ஏண்டி அவ்வளவு திமிரா உனக்கு. எவன் கூடடி சுத்துன? எனக் கேள்விமேல் கேள்வி கேட்டுத் தொளைச்செடுத்திட்டாங்க..."

"என்னடி இப்படி சொதப்பிட்ட. ஒரு வருசமா மறைச்சு வச்சிருந்த ரகசி யத்தை நீயே போட்டு ஒடச்சிட்டியே. சரியான பைத்தியண்டி" என்று திட் டியபடியே அவள் கையை ஆறுத லாகப் பற்றினாள் ராணி.

"அப்புறம் என்னதான் நடந் துச்சி..."

"அப்பாவுக்கு விசயம் போக, அப்பாவும் அண்ணனும் நீண்ட நாழி பேசிக்கிட்டிருந்தாங்க. என்ன பேசினாங்கன்னும் தெரியல" என்று கலங்கினாள் வாணி.

"ஒன்னு மட்டும் தோணுதடி."

"என்ன...?"

"இனி என்னைக் காலேஜ்க்கு அனுப்ப மாட்டாங்க."

"அப்புறம் சந்தோஷை எப்படி நீ பாப்ப?"

"அதாண்டி எனக்கும் புரியல" என்றாள் கண்ணீரைத் துடைத்தபடி வாணி.

தன், கதையைத் தானே உளறிக் கொட்டித் தாயிடம் சிக்கிக் கொண்ட வாணியைப் போல் ஒரு பெண் மகளைச் சங்க இலக்கியத்திலும் காணலாம்.

நற்றிணைக் காட்சி ஒன்று. பாடல் எண் 147.

'தேன் மணம் பரவுகின்ற மலைச் சாரல் பகுதி. தினை விதைக்கப்பட்ட வயல். அவள் தினைப் புனம் காக்கத் தினமும் வருவாள். அவனும் ஆங்கே "அவள் நலம் பார்க்க" வருவான். கண் ணொடு கண்கள் பேசின. காதல் வலை வீசின. பிறர் அறியாவண்ணம் பகல் பொழுதில் தினைப்புனத்துக்குப் பக்கத்தில் உள்ள அருவியின் அருகே கூடி மகிழ்வர்.'

அன்று அவளின் அன்னை தினைப்புனம் வந்தாள். "அளவில் சிறிதான தினையின் பெரிய நீண்டக் கதிர்களைச் சிவந்த வாய் உடைய பச்சைக் கிளிகள் கொத்திக் கவர்ந்து செல்கின்றனவே. நீ கிளியை விரட்டி ஓட்டாது எங்கே சென்றாய்?" எனக் கோபத்தோடு அன்னை கேட்டாள்.

"தேம்படு சாரற் சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி கவர நீ மற்று
எவ்வாய் சென்றனை அவண்...?"

இதுதான் அன்னையின் கேள்வி.

அதற்கு ஏற்றவாறு மறுப்புக் கூறாது தலைமகள் உரைத்தாள்.

"அருவி ஆரவாரிக்கும் பெருமலை நாட்டைச் சார்ந்த தலைமகனைப் பற்றிப் பிறர்கூற நான் கேட்டதில்லை. கண்ணால் அவனை நேரே கண்டது மில்லை. கிளியை விரட்டுவதற்காக மூங்கிலால் ஆனக் கருவியைக் கை யிலே வைத்துள்ள நான், மலைப்புறத் தில் பூத்துக் கிடக்கும் மலர்க்கொத் துக்களைப் பறிக்கவும் இல்லை. கொய்த மலர் கொண்டு கோமக னோடு சேர்ந்து அருவியிலே நீந்திக் கொஞ்சி விளையாடவுமில்லை."

"அருவி ஆர்க்கும் பெருவரை நாடனை
அறியலும் அறியேன். காண்டலும் இலனே
வெதிர்புனை தட்டையேன் எதிர்மலர் கொய்து
சுனை பாய்ந்து ஆடிற்றும் இலன்"

எனக் கூறினாள். "எங்கே சென்றாய்" என அன்னை கேட்ட மாத்திரத்தில் நிலைகுலைந்தவளாய்ப் பொய் உரைக்க மறந்து, உண்மை நடப்பை அப்படியே உளறிக் கொட்டிவிட்டாள் தலைமகள். தன் மகளின் காதல் விளையாட்டை அவள் சொன்ன வாக்குமூலத்தின் வழியாகவே கேட் டறிந்த அன்னை, என்ன பேசுவது



என்று அறியாது சினம் கொண்டு தலைகுனிந்தாள். "தலை இறைஞ்சினளே அன்னை."

இக்கதையைத் தலைமகனின் காதில் விழுமாறு உண்மையில் நடந்தது போலப் புனைந்து தலைமகளுக்கு உரைத்தாள் தோழி.

மேலும் தோழி உரைப்பாள் : "சினம் கொண்ட உன் அன்னை இனி என்ன செய்வாளோ? ஒன்று மட்டும் உறுதி. இனி உன்னைத் தினைப்புனம் காக்க அனுப்ப மாட்டாள். உன்னை வெளியே வரவிடமாட்டாள். வீட்டுக் காவலில் வைப்பாள். முன்புபோல எளிதாக அவன் உன்னைக் காண இயலாது. உமது காதல் வெற்றிபெற வேண்டுமாயின், தலைமகன் விரைந்து முறைப்படி வந்து பெண் கேட்டு மணம் முடித்துக் கொள்ளுவது தவிர வேறு வழியில்லை" என்று தலைமகனின் நெஞ்சில் ஆழமாகப் பதியும் படியாகத் தோழியின் பேச்சு அமைகிறது.

தலைவியிடம் பேசிய தோழியின் கூற்றாக அமைந்த பாடல் :

"யாங்கு ஆகுவமோ அணிநுதற் குறுமகள்!
தேம்படு சாரல் சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி கவர நீ மற்று
எவ்வாய்ச் சென்றனை அவண்? எனக்கூறி
அன்னை ஆனாள் கழற முன்நின்று

அருவி ஆர்க்கும் பெருவரை நாடனை
அறியலும் அறியேன்; காண்டலும் இலனே
வெதிர்புனை தட்டையேன் மலர்பூக் கொய்து
சுனை பாய்ந்து ஆடிற்றும் இலன் என நினையலை
பொய்யலை அந்தோ வாய்த்தனை அதுகேட்டு
தலை யிறைஞ்சினளே அன்னை
செலவு ஒழிந்தனையால், அளியை நீ, புனத்தே"

இப்பாடலின்கண் உள்ள நுட்பமானதொரு செய்தி : 'இளமகளின் உள்ளத்தில் முகிழ்த்த பெருங்காதலைக் காக்க வேண்டியது தலைமகனின் கடமை. ஊர்மக்கள் அலர் பேசிக் காதலைக் கலைத்துவிடக் கூடும். வேற்றுநாட்டான் பெண் கேட்டு வந்து இவளை மணம் செய்து கொண்டு போய் விடவும் கூடும். இதற்கெல்லாம் இடம் தராது விரைந்து வந்து ஊரறிய இவளை மணம் முடித்து, இளமகள் காதலைக் காத்தல் தலைமகன் கடமை.'

இக்கருத்தைச் சொல்லும் நுட்பமான பாடல் வரி.

".... .... சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி கவர"

சிறுதினைக் கதிரை, கிளி பறித்துக் கொண்டு போவதை அன்னை விரும்பவில்லை. அதைக் காக்க வேண்டும் என்பது அவள் நோக்கு. அதுபோலக் குறுமகளின் உள்ளத்துக் காதலைக் காத்தல் தலைமகன் கடமை என்பதை இப்பாடல் வரிகள் வலியுறுத்துகின்றன.

நற்றிணைப் பாடலை மீண்டும் மீண்டும் படித்து இன்புறுக. இப்பாடல் ஆசிரியர் பெயர் கொல்லம் பாக்கனார். அவர் பாடிய ஒரே பாடல் இது. வேறு பாடல் பாடியதாகத் தெரியவில்லை. இது குறிஞ்சித் திணைக்குரிய பாடல் ஆகும். ●

சிறுகதை — அகரம் செ. தர்மலிங்கம்



இன்னொரு பிள்ளை!

கல்லூரி முதல்வர் பிரபாகர், ஏ.சி. அறையில் அமர்ந்து கொண்டு தனது பணிகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். அப்போது கைப் பேசியில் வந்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார். சுப்புராமன் இறந்துவிட்ட செய்திதான் அது. மேனேஜரை அழைத்துப் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டுப் புறப்பட்டார்.

தமிழாசிரியர் சுப்புராமன் நல்ல மனிதர், நேர்மையானவர், சொல்லொணாத் துயரங்கள் வந்தாலும் தன்மையை விட்டுக் கொடுக்காதவர். அடுத்தவர் உதவியை எதிர்பார்க்காத கறைபடியாக் கரம்.



அவரிடம் பயின்ற மாணவர்கள் இன்று உயர் பதவியிலும், தொழிலதிபர்களாகவும், அரசியல் பிரமுகர்களாகவும் வலம் வருகின்றனர். அதில் ஒருவர்தான் பிரபாகர். சிறு வயதில் தந்தையை இழந்தவர். தாயின் உழைப்பில் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தார். தீயவர்களின் நட்பால் படிப்பில் நாட்டமில்லாமல் போனது. மதிப்பெண் குறைந்தது.

பிரபாகரின் தாய், சுப்புராமனைப் பார்த்து, "ஐயா... என் மகனுக்கு நீங்கள்தான் நல்லவழி காட்டணும்..." என்று கண்ணீர் வடித்தாள். சுப்புராமன், பிரபாகரை அழைத்து, "உன் தாய் எப்படி அழுதுவிட்டுப் போகிறார்கள் பார்த்தாயா...? பிற்காலத்தில் நீ உயர்ந்த பதவிக்கு வரவேண்டுமென்பது அவர்கள் ஆசை. உன் தாயின் ஆசையை நிறைவேற்ற வேண்டியது உன் கடமை. இப்போது சிரமம் பார்க்காமல், நன்றாகப் படித்து அதிக மதிப்பெண் பெற்றால்தான் பிற்காலத்தில் உன் வாழ்க்கை சிறப்பாக அமையும். உன் தாயின் ஆசையும் நிறைவேறும்..." என்று புத்திமதிகள் கூறினார்.

அதைத் தாரக மந்திரமாக ஏற்றுக் கொண்டு படித்து முன்னேறினார் பிரபாகர். மாலைநேரக் கல்லூரி தொடங்கி மாணவ – மாணவியர்க்கு நல்ல கல்வியைப் பயிற்றுவித்தார். படிப்படியாக முன்னேறி அரசு அனுமதி பெற்று, இன்று ஒரு கல்லூரி முதல்வராக உயர்ந்துவிட்டார்.

பிரபாகரின் வளர்ச்சியைக் கண்டு பெருமையடைந்த சுப்புராமன், அடிக்கடி கல்லூரிக்கு வந்து நல்ல ஆலோசனைகளை வழங்கிச் சென்றார்.

தமிழாசிரியர்

> **"நீங்கள்லாம் வெளியூரில் இருக்கீங்க... உங்கம்மா பக்கவாதம் வந்து, படுக்கையில் இருக்காங்க, இதுவரை சுப்புராமன்தான் அவங்களைப் பார்த்துக்கிட்டாரு... இப்ப அவரும் போய்ச் சேர்ந்துட்டார். இனி உங்கம்மாவைப் பார்த்துக்கப் போவது யார்?"**

சுப்புராமனுக்குக் கிருஷ்ணன், முத்து ராமன், புனிதா என்று மூன்று பிள்ளைகள். மூவரையும் நன்றாகப் படிக்கவைத்துத் திருமணமும் முடித் தார். புனிதா கணவன் வீடு சென் றாள். மகன்கள் இருவரும் பெட்டி யைக் கட்டிக் கொண்டு மனைவி யுடன் பெங்களூரு சென்றுவிட்டனர். அவ்வளவு பெரிய வீட்டில் இரண்டு ஜீவன்கள்தான்.

மகன்கள் வீட்டில் ஒரு வாரம் தங்கி, பேரப்பிள்ளைகளைக் கொஞ்சி விளையாடிவிட்டு வரலாமென்று, வீட்டைப் பூட்டிவிட்டு ரயிலேறிச் செல்லும் சுப்புராமனும், அவரது மனைவி பூங்கோதையும் மூன்றே நாளில் வீடு திரும்பி விடுவார்கள். மரு மகள்களின் முகஸ்துதியும், கவனிப்பும் அப்படி இருக்கும்.

பூங்கோதைக்குப் பக்கவாதம் வந்து பெட்டில் படுத்துவிட்டாள். மகன்கள் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வந்து தாயைப் பார்த்துச் செல்வார்கள். பூங்கோதையைச் சுப்புராமன்தான் கவனித்துக் கொண்டார்.

“ஐயா… நீங்கள் ஏன் சிரமப்படு கிறீர்கள்…? பூங்கோதை அம்மாவைக் கவனிக்க ஒரு நர்சை நான் ஏற்பாடு செய்கிறேன். அவங்களுக்குண்டான ஊதியத்தை நானே கொடுத்துவிடு கிறேன்…” என்று கூறினார் பிரபாகர். “வேண்டாம் பிரபாகர்… என் மனைவியை நானே பராமரிக் கிறேன்…” என்று மறுத்துவிட்டார் சுப்புராமன்.

பிரபாகர் கடைவீதி சென்று, பூமாலை வாங்கிக்கொண்டு சுப்பு ராமன் வீட்டை அடைந்தார். ஊர்ப் பெரியவர்களும், உறவினர்களும் அமர்ந்திருந்தனர். கண்ணாடிப் பெட்டிக்குள் சுப்புராமன் கண்மூடிப் படுத்திருந்தார். மாலையைக் கண் ணாடிப் பெட்டி மீது வைத்துவிட்டு, அறைக்குள் கட்டிலில் முடங்கிக் கிடக்கும் பூங்கோதையம்மாவின் அருகில் சென்றார். அவரது கரத்தைப் பற்றிக் கொண்டு கதறினாள் பூங்கோதை.

சுப்புராமன் ஐயா இருக்கும்போது, இந்தம்மாவை நல்லபடியாகக் கவனித்துக் கொண்டார். இனி இந்தம்மாவின் நிலை என்னாகுமோ… என்று நினைக்கும்போது, பிரபாகரின் கண்கள் கசிந்தன.

மகன்களும், மகளும் வந்தனர். தந்தையைப் பார்த்து அழுது புரண் டனர். அவரவர் குடும்பத்தைச் சேர்ந் தவர்கள் அவர்களை அரவணைத்து ஆறுதல் கூறினர்.

ஒரு பெரியவர், கிருஷ்ணனையும், முத்துராமனையும் அழைத்து, “நீங்கள் லாம் வெளியூரில் இருக்கீங்க… உங்கம்மா பக்கவாதம் வந்து, படுக் கையில் இருக்காங்க, இதுவரை சுப்பு ராமன்தான் அவங்களைப் பார்த்துக் கிட்டாரு… இப்ப அவரும் போய்ச் சேர்ந்துட்டார். இனி உங்கம்மாவைப் பார்த்துக்கப் போவது யார்?”

கிருஷ்ணன் மௌனமாக நின் றான். காரில் வரும்போது, மனைவி சுசீலா அவன் காதுக்குள் ஊதியது நினைவுக்கு வந்தது.

“இதப் பாருங்க… உங்கம்மாவை நம்ம வீட்டுக்கு அழைச்சிட்டு வந்துரா திங்க… என்னால் பீ, மூத்திரம் அள்ள முடியாது…”

மூத்த மருமகள் இப்படின்னா… இளையவள் லேசுப்பட்டவளா…? அவர்கள் இங்கு வந்ததிலிருந்து கண வன் முத்துராமனின் காதிலிருந்து வாயை எடுக்கவே இல்லை. எதையோ ஊதித்தள்ளிக் கொண்டிருந்தாள்.

கிருஷ்ணன் வாய்திறந்து பேசினான்.

“நானும், என் மனைவியும் வேலைக்கிப் போறோம். என் மகன் தினேஷ் ஸ்கூலுக்குப் போறான். காலையில் போறவங்க, மாலையில்



தான் வீடு திரும்புவோம். அம்மாவைத் தனியே விட்டுட்டுப் போறதுக்கு மனசில்லை...”

“தம்பி முத்துராமனுக்குப் பிறந்த பெண் குழந்தை மூளை வளர்ச்சியில்லாமல் இருக்கு. அந்தக் குழந்தையோட அவங்க ரெண்டு பேரும் படும் சிரமம் எனக்குத்தான் தெரியும். அதனால்... இந்த வீட்டை வித்துட்டு, அம்மாவை

முதியோர் இல்லத்தில் சேர்க்கலாம்னு இருக்கோம்...”

“அதுக்கு நான் சம்மதிக்கமாட்டேன்... அம்மா இந்த வீட்டில்தான் இருக்கணும்...” என்று குரல் எழுப்பினாள் புனிதா.

“அப்படிச் சொல்லுடி என் ராசாத்தி... பொட்டப்புள்ளெயாச்சே... பெத்தவளை விட்டுக்குடுப்பாளா...” – ஒரு மூதாட்டியின் குரல்.

“பெத்தவ மீதுள்ள பாசத்தில் அப்படிச் சொல்லிபுட்ட தாயீ... இதுக்கு உன் மாமியார் வீட்டில் சம்மதிக்கணும்...”

“இப்பக்கூட கேதத்துக்கு வந்த என் மாமியார், என்னைத் தனியா அழைச்சிட்டுப் போய், உங்கம்மாவைப் பார்க்கணும்னு இங்கே இருந்துறாத... காரியம் முடிஞ்சதும் வீட்டுக்கு வந்துருன்னு சொல்லிட்டுப் போறாங்க... அவங்க சொல்றதுக்காக, என்னைப் பெற்றவளை இந்த நிலையில் விட்டுட்டுப் போக எனக்கு மனசில்லை.”

“இங்க பாரு புனிதா... அம்மா வாழ்ந்து முடிச்சவங்க... நாம மூணு பேரும் வாழ வேண்டியது இன்னும் நிறையவே இருக்கு... நம்மைவிட முதியோர் இல்லத்தில் அம்மாவை நல்லாவே பார்த்துக்குவாங்க...”

“நீங்க என்ன சொன்னாலும் என் மனம் ஏத்துக்கல... மூணு பிள்ளைகள் இருந்தும், அம்மாவை அனாதையா விடுறதா? நான் பக்கத்தில் இருந்து அம்மாவைப் பார்த்துக்கத்தான் போறேன்.”

சகோதரர்கள் மௌனமாய் நின்றனர்.

அப்போது பிரபாகர் குறுக்கிட்டார்.

“உங்கள் குடும்ப விஷயத்தில் மூக்கை நுழைப்பதாக நினைக்கக் கூடாது... எனக்கொரு யோசனை தோணுது... சொல்லலாமா...?”

“சொல்லுங்க தம்பி... நல்ல யோசனையா இருந்தால் ஏத்துக்கறோம்...” என்றார் ஒரு முதியவர்.

“சுப்புராமய்யாக்கிட்டப் படித்தவன் நான். ஐயாவின் வழிகாட்டலின் பேரில்தான் நான் உயர்ந்த நிலைக்கு வந்திருக்கிறேன். பூங்கோதையம்மாவை அழைச்சுட்டுப் போய், என் தாயைப் போல் வைத்துப் பராமரிக்க முடியும். அதை ஐயாவின் ஆத்மா ஏத்துக்காது. ‘நீங்க சிரமப் படாதீங்கய்யா... அம்மாவைப் பராமரிக்க ஒரு நர்சை ஏற்பாடு செய்கிறேன். அதற்குண்டான செலவையும் நானே ஏத்துக்கிறேன்’ என்று கூறினேன்.அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. என் மனைவிக்கு நானே பணிவிடை செய்கிறேன் என்று கூறிவிட்டார்.

“ஐயாவின் மகன் கிருஷ்ணன் கூறியபடி, யாருக்கோ விற்கப் போகிற இந்த வீட்டை நானே வாங்கிக்கிறேன். ஐயாவின் நினைவாக இங்கு நர்சரிப் பள்ளி ஆரம்பிக்கிறேன். பூங்கோதையம்மாவின் ஆயுள்காலம் முடியும் வரை இங்கேயே வைத்து என் தாயைப் போலப் பராமரிக்கிறேன். இங்கு வரும் பிஞ்சு முகங்களைப் பார்த்து அம்மாவின் மனசு ஆறுதலடையுமென்று எண்ணுகிறேன்” என்று கூறினார் பிரபாகர்.

“கிருஷ்ணா... பிரபாகர் தம்பி சொல்றது நல்ல யோசனையாத் தெரியுது... வீட்டை இவர்கிட்ட கொடுக்கலாம். இனி பெத்தவளைப் பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம். இந்தத் தம்பி பார்த்துக்கும். உங்கள் விருப்பப்படி, உங்க குடும்பத்தைக் கவனிக்கலாம். எப்பப் பார்க்கணும்னு தோணுதோ, அப்ப வந்து பார்த்துட்டுப் போகலாம்... உங்களுக்குச் சம்மதம் தானே?” என்று கேட்டார் பெரியவர்.

மூவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

“அவர்கிட்டப் படிச்ச புள்ளெக்குள்ள அன்பும், பாசமும் பெற்ற புள்ளெகளுக்கு இல்லாமல் போயிடுச்சு...” சிலரின் முணுமுணுப்பு.

பிரபாகரின் கையைப் பற்றிக் கொண்டு கண்ணீர் வடித்தான் கிருஷ்ணன். ●

கே.ஆர். கிருஷ்ணமாச்சாரி

கொங்குநாட்டில் மத்வர் கோவில்

108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றுகூடக் கொங்குநாட்டில் இல்லை (கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டம்). பகவத் ஸ்ரீராமானுஜர் ஸ்ரீரங்கத்திலிருந்து கர்நாடக தேசம் மேல் கோட்டை திருநாராயணபுரத்திற்குச் சத்தியமங்கலம் வழியாகச் சென்றதால், சத்தியமங்கலம் ஸ்ரீவேணுகோபால சுவாமி திருக்கோயில் அபிமான க்ஷேத்ரமாகக் கொள்ளத் தக்கதாகும்.

வைணவ திவ்யதேசம் இல்லாத குறை நீங்க, மத்வ க்ஷேத்ரம் ஒன்று கொங்குநாட்டில் இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

சுதந்திரத்திற்கு முன்பு தமிழகத்தின் பழமையான முனிசிபாலிட்டிகளில் வடக்கே வாலாஜாபேட்டையும், தெற்கே தாராபுரம் என்றும் கூறுவர். இந்தத் தாராபுரம் முன்பு கோவை மாவட்டம், பின்பு ஈரோடு, இன்று திருப்பூர் மாவட்டத்தில் அமைந்திருக்கிறது.



ஸ்ரீ காடு அனுமந்தராய சுவாமி திருக்கோவில் நுழைவுவாயில்

வைணவத்தில் *108* திவ்யதேசம், சைவத்தில் *12* ஜோதிர்லிங்கத் திருக்கோயில்கள் நம் தேசம் முழுவதும் பரவி விளங்குகின்றன. அதுபோன்று மத்வ சம்பிரதாயத்தில் ஒன்பது மத்வ க்ஷேத்ர திருக்கோயில்கள் தென்னிந்தியாவில், அதாவது ஆந்திரத்தில் மந்திராலயம், கர்நாடக தேசத்தில் உடுப்பி, சுப்பிரமணியம், தர்மஸ்தலம், முளபாகல்

ஆகிய நான்கு க்ஷேத்ரங்களும், தமிழகத்தில் ஸ்ரீமுஷ்ணம், திருக்கோவிலூர் கோளங்கிபுரம், தாராபுரம் என நான்கு க்ஷேத்ரங்களும் அமைந்துள்ளன.

இதில் வடக்கே மந்திராலயமும், தெற்கே தாராபுரமும் தேச வரைபடத்தில் ஒரே நேர்கோட்டில் அமைந்திருப்பது ஓர் ஆச்சரியப்படத்தக்க விஷயமாகும்.

மந்திராலயத்தில் ஸ்ரீராகவேந்திரர் பிருந்தாவனமும் அடுத்து பஞ்சமுக அனுமார் கோவிலும் அமைந்துள்ளன. தாராபுரத்தில் ஸ்ரீஅனுமந்தராய சுவாமி திருக்கோவிலும், ராகவேந்திரர் மிருத்திகா பிருந்தாவனமும் குறிப்பிடத் தக்கவை.

துங்கபத்ரா நதிக்கரையில் மந்திராலயமும் அமராவதி நதியினை ஒட்டிய பகுதியில் தாராபுரமும் அமைந்துள்ளன. இக்காரணங்களால் மந்திராலயத்திற்கு இணையான மத்வ ஸ்தலம் தாராபுரம் எனக் குறிப்பிடப் பெறுகின்றது. இக்கருத்தினை மந்திராலய க்ஷேத்ரத்தினர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.


ஸ்ரீ காடு அனுமந்தராய சுவாமி, தாராபுரம்

மத்வ சம்பிரதாயத்தினருக்கு முக்கியப் பிரானரான ஆஞ்சநேயருக்குப் பிரதானமான சன்னிதி ஒன்பது மத்வ க்ஷேத்திரங்களில் தாராபுரத்தில் மட்டும்தான் இருக்கின்றது என்பதும் ஒரு முக்கியக் காரணம்.

வியாசராயர் நிறுவிய மூலமூர்த்தி : பிரகலாதன் அவதாரமாக விளங்கியவர் ஸ்ரீ வியாசராய சுவாமிகள். இவர் தமது வாழ்நாளில் தென்பாரதம் முழுவதும் யாத்திரை செய்து 732 ஆஞ்சநேயர் மூர்த்திகளை ஸ்தாபிதம் செய்தார். இதில் 89–வது மூர்த்திதான் தாராபுரம் ஆஞ்சநேயர்.

திருப்பதி வேங்கடவன் போன்று மூர்த்தி 7 அடி உயரம், 3 அடி அகலம், இரு பாதங்கள் வடக்கு நோக்கியும், இடுப்பில் மணி சலங்கைகள் கட்டப்பட்டும், வலதுபுற இடுப்பில் பிச்சுவாக் கத்தியும், கழுத்தில் சுதர்சன சாளக் கிராம மாலைகளும், வலதுகை அபய ஹஸ்தமாகவும், இடதுகை சௌகந்திகா மலர் தாங்கியும், முகம் வடகிழக்குத் திசை நோக்கியவராகவும், முகத்திற்கு வலதுபுறம் சக்கரம், இடதுபுறம் சங்கும் கொண்டவராகவும், வால் மேல் நோக்கித் தலையின் பின்புறத்திலிருந்து வலது கையைத் தொட்டு மேல்நோக்கித் தலையின் மேற்புறத்திற்குச் சென்று பின், கீழ்நோக்கி வந்து இடது கையைத் தொட்டு முடிவடைகிறது. வாலில் மூன்று மணிகள் உண்டு. இந்த மணிகள் (காடு) காரணமாக இவர் காடு (Khadu) அனுமந்தராயர் என அழைக்கப்படுகிறார். இவரது சன்னிதியே பிரதான சன்னிதியாகும்.

துவஜஸ்தம்பத்திக்கு அடுத்து வரும் மண்டபப் பகுதியில் இடதுபுறம் ஸ்ரீராமர் சன்னதி உள்ளது. மூலமூர்த்தி சீதாதேவி, ஆஞ்சநேயர் சகிதம் இங்குக்

காட்சியளிக்கிறார். உற்சவ மூர்த்திகள் ஆஞ்சநேயர் சன்னதியில் உள்ளனர். ராமருக்கு அர்ச்சனை செய்தபின் ஆஞ்சநேயருக்குச் செய்யப்படுவது சிறப்பாகும்.

லட்சுமி நரசிம்மர் சன்னிதி : கோயிலில் உள்ள லட்சுமி நரசிம்மர் மூர்த்தி வெகுகாலம் பவானி – காவிரி ஆறுகள் சங்கமத்தில் ஜலவாசம் செய்ததாகவும், பின்னர் ஒரு சமயம் பக்தர் ஒருவருக்குத் தரிசனமளித்ததில் அங்கிருந்து கொண்டு வரப்பட்டு நிறுவி மூலமூர்த்தியாகத் தனிச் சன்னிதியில் அருள்பாலிக்கிறார்.

ஸ்ரீ டீகாசார்யா பிருந்தாவனம் : கர்நாடகா – மைசூர் மாவட்டத்தில் துல்பர்க்கா என்னுமிடத்திலிருந்து மத்வ


திருக்கோவில் முகப்பு

மகான் ஜெயதீர்த்தர் மூல பிருந்தாவனத்திலிருந்து மிருத்திகை (மண்) கொண்டுவரப்பட்டு உருவானது மிருத்திகா பிருந்தாவனம். இவர் மத்வரின் மூல நூல்களுக்கு டீகா (விளக்கவுரை) எழுதியதால், டீகாசார்யா என அழைக்கப்படுகிறார்.

ஸ்ரீராகவேந்திரர் பிருந்தாவனம் : மத்வ மடாதிபதிகளில் பிரசித்தமானவர் ராகவேந்திரர். ஆந்திரம் துங்கபத்ரா நதிக்கரையில் உள்ள இவரது மூல பிருந்தாவனத்திலிருந்து மிருத்திகை கொண்டு வந்து ஸ்ரீராமர் சன்னிதியில் பிருந்தாவனம் அமைக்கப்பட்டுள்ளது. இரு மத்வ மகான்களின் பிருந்தாவனங்கள் இக்கோயிலில் அமைந்திருப்பது சிறப்பான அம்சம்.

இங்குத் தனிக் கோபுரம் கிடையாது. மழை பெய்தால் நனைவார். வெயிலில் சூரியக் கதிர்கள் விழும். காற்றின் தாக்கம் எப்பொழுதும் இருக்கும். மூலவரின் சிரசிற்கு மேல் கட்டடப் பகுதி திறந்த நிலையில் உள்ளது.

உற்சவம் : ஒவ்வோர் ஆண்டும் வைகாசியில் ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி தேர்த் திருவிழா ஒரு வாரம் கொண்டாடப்படுகிறது. ஸ்ரீராமநவமி, அனுமன் ஜெயந்தி வைபவங்களும் கொண்டாடப்படுகின்றன.

தீர்த்தம், விருட்சம் : இக் கோயிலில் நரசிம்ம தீர்த்தக் குளம் உள்ளது. கோயிலுக்கு முன்புறம் உள்ள அரசமரம் 150 வருடக் காலமாக இருந்து வருகிறது.

அடியார்களுக்கு அருளும் ஆஞ்சநேயர் : கல்யாணம், நோய் நிவர்த்தி, உத்யோக விஷயம் மற்றும் பக்தர்களின் பிரார்த்தனைகள் அனுமந்தராயரைப் பூஜிப்பதால் நிறைவேறுவது கண்கூடு.

நரசிம்ம ஜெயந்தி உற்சவத்தில் அங்கப்பிரதட்சணப் பிரார்த்தனை முக்கிய அம்சம். மேலும் இதே உற்சவத்தில் கொடியேற்றத்தின் போது பக்தர்கள் புதுத்துணி கொடிக் கம்பத்தில் கட்ட – காணிக்கையுடன் பிரார்த்தனை செய்து கொண்டு வழங்கிய பின் கொடியிறக்கத்திற்குப் பின், அதனைத் திரும்பப் பெற்றுப் பலன் பெறுகின்றனர்.

ஸ்ரீராகவேந்திரரின் மூல பிருந்தாவனமான மந்திராலயம் செல்ல இயலாதவர்கள், மத்வ க்ஷேத்ரமான இத் திருக்கோயிலில் உள்ள மிருத்திகா பிருந்தாவனத்தினைத் தரிசித்து அருள் பெறலாம்.

அமைவிடம் : திருப்பூரிலிருந்து 48 கி.மீ., கோவை – ஈரோட்டிலிருந்து 80 கி.மீ., பழநியிலிருந்து 32 கி.மீ. தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. ●

மகாகவி பாரதியின் 'பொன்வால் நரி' என்ற ஆங்கிலப் புனைவு டாக்டர் ஜீவாவால் மொழிபெயர்க்கப்பட்டு, ஜூலை மாத 'ஓம் சக்தி' இதழில் வெளியிடப்பட்டது. ஆகஸ்ட் மாத இதழில் அறிஞர் பெ.சு. மணி அவர்கள் பாரதியின் 'பொன்வால் நரி' என்ற புதினத்திற்கு எழுதியுள்ள வரலாற்றுப் பின்னணியின் முதல் பகுதி வெளியிடப்பட்டது.

இந்த செப்டம்பர் மாத இதழில் அதன் நிறைவுப்பகுதி வெளியாகிறது. அறிஞர் பெ.சு. மணி அவர்களின் வியாக்கியானம் இல்லாமல் பொன்வால் நரி என்ற புதினத்தை வாசகர்கள் புரிந்து கொள்வது மிகவும் சிரமம்.

ஈரோடு டாக்டர் ஜீவாவின் மொழிபெயர்ப்பு சிறப்பாக இருந்தாலும், இந்தப் புதினத்தில் உள்ள தொன்மத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், அதற்குச் சரியான உரையாசிரியரின் உதவி தேவை. அது இல்லாமல் இதனைப் புரிந்து கொள்ளவே முடியாது.

தேசியக்கவி பாரதி, மொழிபெயர்ப்பாளர் ஜீவா, உரை கண்ட பெ.சு. மணி இம்மூவரின் முயற்சியினால்தான் பொன்வால் நரி என்ற ஆங்கிலப் படைப்பை நாம் அனுபவித்துப் புரிந்து கொள்ளலாம்.

திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரை தெளிவு தருவதைப்போல, பொன்வால் நரிக்கான அறிஞர் பெ.சு. மணியின் வியாக்கியானம், நமக்கு நல்ல புரிதலை உண்டாக்குகிறது.


வாசகர்கள் ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய மூன்று இதழ்களையும் ஒன்றாகப் படித்து, அதுவும் நன்றாகப் படித்துப் புரிந்து கொள்வது, பொன் வால் நரி எழுதப் பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றும்.

– இ.ஆர்.

'பொன் வால் நரி' ஒரு வரலாற்றுப் பின்னணி

பாரதியாரின் இந்நூல் பெசண்ட் எதிர்ப்பு இயக்கப் போர்க்களத்தில் தோன்றிய அற்புத இலக்கியமாகப் புகழ் கொண்டது.

இந்திய ஆன்மிகச் சிறப்புகளை ஆங்கிலம் படித்த வர்க்கத்தினரில் சிலர் சுயமாகச் சிந்திக்க மறுத்து "வெள்ளையர் பாராட்ட" அந்தப் பாராட்டை அப்படியே கண்மூடித்தனமாக ஏற்றதைக் கண்டித்துள்ளது இந்த நூல். திரு. நாராயணய்யா என்பவர் தமது புதல்வர்களான ஜே. கிருஷ்ணமூர்த்தி, நித்யா என்பவர்களுக்கு பெசண்ட் அம்மையாரைப் பொறுப்பாளராக (Gaurdian) ஏற்றதும், பின் மனம் மாறி ஒப்பந்தத்தை விலக்கிக் கொள்ள வழக்குத் தொடுத்ததும் இந்த நூலில் விதந்தோதப்பட்டுள்ளது.



பெ.சு.மணி

இந்த வழக்கிற்கான உள்நோக்கத்தில் அரசியல் கலந்துள்ளது என லெட்பீட்டர் என்பவர் லேடி எமிலி என்பவருக்கு 1912 அக்டோபரில் அடையாற்றில் இருந்து எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

("The truth is that the man is a tool of the political party here in India which is disaffected to the British Government, and he is simply being used as a weapon of attack upon Mrs. Besant and upon the Thesopical Society. Because that organization has always stood for law and order. Mrs. Besant has specially roused the enmity of that section of the people because she refused to allow the pre aching of seditious doctrines to the students in the Central Hindu college.")

பாரதி, ‘பொன்வால் நரி’ கதையை எழுதி அரவிந்தரிடம் படித்துக் காண்பித்ததாகவும், கதையைக் கேட்டு அரவிந்தர் மிக வியந்து பாராட்டியதாகவும் ஒரு செய்தி உள்ளது. (பக். 91, சித்திர பாரதி முதல் பதிப்பு, 1957. ஆசிரியர் ரா.அ. பத்மநாபன்).

ஆன்மிகப் பின்னணி : தியோசபி இயக்கத்தின் ‘‘மகாத்மாக்களின் கட்டளைகள்’’, ‘‘அற்புதங்கள்’’, ‘‘ரகசிய உட்குழு நடவடிக்கைகள்’’ முதலானவை பலத்த கண்டனத்திற்குரியனவாகக் கருதப்பட்டன.

சுவாமி விவேகானந்தர், இந்த ‘‘மகாத்மாக்கள்’’, ‘‘அந்தரங்க உட்குழு’’வைப் பற்றிச் சென்னை விக்டோரியா மன்றத்தில் ‘‘எனது போர்முறை’’ எனும் முதல் சொற்பொழிவில், சிகாகோ வீரராக 1897–இல் சென்னை திரும்பிய பொழுது, பின்வருமாறு குறிப்பிட்டார்.

‘‘அவர்களுடைய சபையின் அந்தரங்க சட்ட திட்டங்களில் கண்டிருக்கும் பிரசாரம் அவ்வந்தரங்கப் பகுதியிற் சேர்ந்துள்ள அங்கத்தினர் எவராயினும், அவர்களின் (மகாத்மாக்கள்) குதுமி, மோரியாவிடமிருந்து மாத்திரமே எவ்வித போதனைகளையும் பெறவேண்டும் என்பதாம். ஆகவே, அவ்வந்தரங்கப் பகுதியில் சேருவதென்றால், ஒருவன் தனதெல்லாச் சுதந்திரத்தையும் ஒப்படைத்து விடுதல் என்று பொருள்படுகிறது. நிச்சயமாக இப்படிப்பட்ட காரியமெதுவும் நான் செய்ய முடியாது. யாரேனும் இங்ஙனம் ஏதாவது செய்தாலும், அவனையொரு ஹிந்துவென்று அழைக்க மாட்டேன்.’’


அன்னி பெசன்ட்

தேசபக்த – மெய்ஞ்ஞானி எனக் கொண்டாடப்பெற்ற சுவாமி விவேகானந்தர், பாரதி, வ.உ.சி., சிவாவின் உள்ளங்களைக் கவர்ந்தவர். ‘‘மிஸஸ் அன்னி பெசண்டும், அவள் வகையாரும் இந்திய ஜாதியின் வேரையெடுக்க வந்திருக்கிறார்களென்று ஸ்ரீ விவேகானந்த சுவாமி முதலிய ஞானிகள் கூறியிருந்தும் நம்மவர்களுக்குச் சிறிதும் ஞானமில்லாமல் இவளது மாய வலையில் சிக்குண்டு இவளைப் பெருமைப்படுத்தி வருகிறார்கள்’’ என பாரதியாரின் ‘இந்தியா’ பத்திரிகையில் ‘கல்கி’ எனும் புனைபெயரில் எழுதியவரின் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

சிவாவின் வந்தே மாதரம் கட்டுரையில் அன்னிபெசண்ட், குதுமி, மோர்யாவைப் பற்றிப் பின்வரும் ஏளனக் குறிப்பு உள்ளது.

‘‘அடையாற்றிலே யிருந்து கொண்டு கூட்டுமி, முரியா முதலான மகாத்மாக்களுடனே அந்தரங்க சம்பாஷணை செய்து கொண்டு சும்மா யிருக்கலாம்.’’

பாரதியாரும் இந்த மகாத்மாக்களைப் பற்றி ஒரு செய்தியளவில் ‘இந்தியா’ பத்திரிகையில் (ஜனவரி 26, 1907) பின் வருமாறு எழுதியுள்ளார்.

‘‘தியாசபிகல் சங்கத்தார் இந்தியாவுக்கு வந்த ஆரம்பத்தில் தமது சபைக்கு இமயமலைப் பிரதேசத்தில் சிவஜீவிகளும் சித்தர்களுமாகிய மகாத்மாக்கள் இருந்து உதவி செய்து வருவதாகச் சொல்லி வந்த விஷயமும் இந்த சபைத் தலைவர்களே சில ஜால வித்தைகள் காண்பித்துக் கொண்டிருந்த விஷயமும் நேயர்களிலே சிலருக்குத் தெரிந்திருக்கலாம்.’’

‘பொன் வால் நரி’யில் ‘‘இந்தக் கால கட்டத்தில் மிகப் பிருமாண்டமான ஆன்மிக மோசடி என மிகச் சரியாகவே கணிக்கப்பட்ட ஒன்றை’’ என பாரதி குறிப்பிட்டிருப்பது ஜே. கிருஷ்ணமூர்த்தியை உலக குருவாக ஆக்குவதில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைக் குறிப்பதாகும். இந்த நடவடிக்கைகள் முற்கூறப்பட்ட ‘‘மகாத்மாக்களின்’’ வழி காட்டுதலின் பேரிலேயே நிகழ்ந்தன.

‘இந்து’ பத்திரிகையில் 1911 ஜனவரி 24 இல் டாக்டர் எம்.சி. நஞ்சுண்டராவ் இந்த

“மகாத்மாக்கள்” பற்றிய பெசண்டின் பிரசாரத்தை வன்மையாக மறுத்து எழுதிய கடிதம் வெளி வந்தது. இதைத் தொடர்ந்து ஆதரவாகவும், எதிராகவும் பல மாதங்கள் ‘இந்து’வில் கடிதப் போர் நிகழ்ந்தது.


‘பொன் வால் நரி’யின் உள்ளடக்கத்தோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டது, தியாசபி ‘மகாத்மாக்கள்’ பற்றிய விமர்சனமாகும்.

குதுமி, மோர்யா எனும் “மகாத்மாக்களைப்” பற்றிய விவரங்கள் சார்லஸ் வெப்ஸ்டர் லெட் பீட்டரின் “The masters and pam” எனும் நூலில் உள்ளன.

குதுமி, மோர்யா வீடுகள் திபெத்தில் ஒரு மலைக் கணவாயில் எதிரெதிரே உள்ளனவாம். இவர்களது தோற்றங்கள் லெட்பீட்டர் நூலில் பின்வருமாறு வருணிக்கப்பட்டுள்ளன.

“The Master Kuthumi wears the body of a Kashmiri Brahman and is as fair in complexion as the average Englishman. His eyes are blue - His hair and beard are brown... He (Morya) is a Rajput King birth and has a dark beard divided into two parts. Dark almost black hair falling to His shoulders, and dark and piercing eyes......!”

ஜே. கிருஷ்ணமூர்த்தி விவகாரங்கள் காரண மாக பெசண்ட் மீது தொடுக்கப்பட்ட பரபரப்பான வழக்கிற்கு மூலாதாரமானவரே இந்த லெட்பீட்டர் தான். இவர் ‘செக்ஸ்’ (Sex) சம்பந்தமாகக் கொண்ட கொள்கைகள் இங்கிலாந்தில் 1906–இல்



தியோசாபிகல் சங்கத்தில் மிகுந்த நெருக்கடி களைத் தோற்றுவித்தன. சிவாவின் ‘வந்தே மாதரம்’ துண்டறிக்கையிலும் லெட் பீட்டரின் பால் உணர்ச்சி பற்றிய வக்கிரமான கொள்கைகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுக் கண்டனம் செய்யப்பட்டுள்ளன.

“இவருடைய (பெசண்ட்) சஹாவும், ஆப்த நண்பரும் அசுவபாவீகப் புணர்ச்சி ஆசிரமத்தின் தலைவருமான லெட் பீட்டர் செய்த அநாகரிக அறி வற்ற மிருகங்களும் செய்யாத துர்ச்செய்கைகளை முழு மனதுடன் ஆதரித்து மன்னியில் அத்துர்ச் செய்கைகளை ஸ்தாபிப்பதற்காக அளவற்ற செலவு செய்து ஹைகோர்ட்டுத் தீர்மானங்களை யும் மாற்ற முயன்றார்.”

பொன்வால் நரியில் பின்வரும் பகுதியும் நினைவு கூரத்தக்கது.

“ஒரு முறை தகப்பன் கழுதை பொன் நரியிடம் தனது குட்டிகளை அவளுடைய கூட் டாளியின் தகாத உறவில் இருந்து பிரித்துத் தன்னிடம் ஒப்படைக்கும்படி வேண்டியது.”

இங்கு “தகப்பன் கழுதை” என்பது திரு. நாராயணய்யாவையும்; “குட்டிகள்” என்பது ஜே. கிருஷ்ணமூர்த்தி, ஜே. நித்தியானந்தாவையும், “பொன் நரி” என்பது அன்னிபெசண்டையும், “அவளுடைய கூட்டாளி” என்பது லெட் பீட்டரை யும் குறிப்பனவாகும். இவ்வாறே பல குறியீட்டுச் சொற்களைப் பின்வருமாறு அறிய வேண்டும்.



பாரதியார்

“நரிகளின் தேசம்” – இங்கிலாந்து. பொன் வால் – தியோசாபிகல் சொசைடி; கழுதை – குரங்குகளின் பழம் பெரும் பூமி – பாரத நாடு; நரிகள் – ஆங்கிலேயர்கள்; கிழக் கழுதை – டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயர்; காளையார் – டாக்டர் எம்.சி. நஞ்சுண்டராவ்.

இவ்வாறே குறியீட்டுச் சொற்களை அறிந்து கொள்வதோடு, பெசண்ட் மீது தொடுக்கப்பட்ட வழக்கின் விவரத்தையும் அறிவோமாயின், ‘பொன் வால் நரி’யின் நையாண்டித்தன இலக்கியச் சுவையை நுகர முடியும்.

நாராயணய்யா எனும் வைதிக ஆந்திர அந்தணர் தாசில்தாராக இருந்த காலத்திலேயே 1882 முதல் தியோசாபிகல் சொசைடியில் உறுப் பினராக இருந்தார். 1907–இல் பதவியில் இருந்து ஓய்வு பெற்றதும் அடையாறு தியோசாபிகல் சொசைட்டியில் சேர்ந்தார். இந்த சொசைட்டியில் ரகசிய உட்குழுப் பிரிவிலும் (Eloteric Section) பணியாற்றினார். பூர்வ ஜன்ம விவரங்களைப் பதிவு செய்வதிலும் இந்த ரகசிய உட்குழுவிற்குப் பங்குண்டு.

இவருடன், இவருடைய இரு புதல்வர்கள் ஜே. கிருஷ்ணமூர்த்தியும், ஜே. நித்தியானந்தாவும் வசித்து வந்தனர். 1909–இல் லெட் பீட்டர் அடை யாறு வந்தார். ஒரு நாள் கடற்கரையில் நாராயணய் யாவின் இரு புதல்வர்களையும் கண்டார். எலும்பும் தோலுமாய் பலவீனமாய்க் காணப்பட்ட பதினான்கு வயதான இளைஞர் கிருஷ்ணமூர்த்தியிடம் ஓர் அலாதியான ஒளி வீசுவதாக லெட் பீட்டர் கருதினார்.

அவரது மகாத்மாவான குதுமி, “நாராயணய் யாவின் குடும்பம் இங்கு தங்கியிருப்பதில் ஒரு குறிக்கோள் உள்ளதென்றும், இரு சிறுவர்களுக் கும் விரைவில் பயிற்சி அளிக்க வேண்டும்” என லெட் பீட்டரிடம் கூறினாராம். இரு சிறுவர்களும் இனி அவர்களுடைய தந்தைக்குரியவர்கள் அல்லர். உலகத்திற்குரியவர் எனும் மகாத்மா குதுமியின் செய்தியைப் பெசண்டிடம் தெரிவித் தாராம் லெட் பீட்டர்.

தியோசாபிகல் சொசைடியின் துணைத் தலைவரான நீதிபதி எஸ். சுப்பிரமணிய ஐயர், நாராயணய்யாவிடம் பேசி இரு சிறுவர்களையும் பெசண்டின் பொறுப்பில் (Legal Guardianship) விட ஒப்பந்தத்தை எழுதினார். 1910 மார்ச் 6 – பெசண்டிற்கும் – நாராயணய்யாவிற்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. பிள்ளைகள் மேலைநாட்டுக் கல்வி முறையில் பயிற்சி பெற்று முன்னுக்கு வருவதற்கான வாய்ப்பாக நாராயணய்யா, இந்த ஒப்பந்தத்தைப் பற்றிக் கருதினார். ஆனால் அவருக்கு லெட் பீட்டரிடம் நம்பிக்கையில்லை. பெசண்டை நம்பியே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

லெட்பீட்டர்தான் இரு சிறுவர்களுக்கும் பயிற்சியளித்தார். மகாத்மா குதுமியிடம் அவ்வப்பொழுது இந்த இரு சிறுவர்களைச் சூட்சம சரீரிகளாக லெட்பீட்டர் கொண்டு போய்ச் சந்திப்பு களுக்கு ஏற்பாடு செய்தாராம். லெட்பீட்டர் இதன் விளைவாக எழுதியதாகக் கூறப்படுகிறது. இந்த நூல் உலகத்தின் இருபத்தேழு மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்ட பெரும் சிறப்பை எய்தியது.

டாக்டர் எம்.சி. நஞ்சுண்டராவ், இந்த நூலை சின்னஞ்சிறு இளைஞரான கிருஷ்ணமூர்த்தி இயற்றியிருக்க முடியாது எனும் ஒரு விவாதத்தை ‘இந்து’வில் எழுப்பினார். லெட்பீட்டர் எழுதியிருக் கலாம் என்றும் அப்போது பேசப்பட்டது.

ஆன்மிகத்தின் பெயரால், கிருஷ்ணமூர்த்தி தெய்வாம்சம் பெற்றவரென்றும், உலக குரு வென்றும் (Messab) செய்யப்பட்ட பிரசாரத்தை எதிர்த்து ‘இந்து’ ஒரு போராட்டத்தையே நடத்தியது.

பாரதியாரும் தமது ‘சின்ன சங்கரன்’ கதை யில் கிருஷ்ணமூர்த்தியின் ‘அவதார மகிமை’ பிர சாரத்தைப் பின் வருமாறு கேலியும் கிண்டலு மாகக் குறிப்பிட்டார்.

“...முப்பத்து முக்கோடி தேவர்களிலே எனக் குத் தெரிந்தவரை நம்முடைய மகாவிஷ்ணுவுக் குத்தான் சிரமம் அதிகம். பன்றி, விஷ்ணுவின் அவதாரம்; ஆமை விஷ்ணுவின் அவதாரம்; கவுண்டனூர் ஜமீன்தார் விஷ்ணு அவதாரம்; அன்னிபெசண்டு வளர்க்கிற (நாராயணய்யா இடங்கொடாத) கிருஷ்ணமூர்த்தி பையன் அதே அவதாரம்.”

தமது பிள்ளைகள் லெட்பீட்டர் சகவாசத்தால் இழிவு படுத்தப்பட்ட பிரசாரத்திற்கு ஆட்பட்டதை யும் கண்டு நாராயணய்யா மனம் நொந்தார். இவ ருடைய நொந்த உள்ளத்தை பாரதியார் பின் வருமாறு ‘பொன்வால் நரி’யில் சித்தரித்துள்ளார்.


விவேகானந்தர்


அரவிந்தர்

'மற்றவர்களைக் காட்டிலும் குட்டிகளுடன் பழகும் வாய்ப்புப் பெற்ற தந்தைக்கு மட்டுமே அவற்றின் உண்மை நிலையின் ரகசியம் தெரிய வந்தது. தனது குட்டிகள் சகிக்க முடியாத இழி நிலைக்குத் தள்ளப்பட்டு வாலிழந்து நிற்கும் நிலைகண்டு வெதும்பிக் கொதித்தது. எந்த இழிந்த விலங்குகளுக்கும் இழைக்கப்பட முடியாத சொல்லுக்கடங்காத இழிவுகள் தம் குட்டிகளுக்கு இழைக்கப்படுவதை அறிந்து மனம் நொந்தது."

பெசண்ட் பொறுப்பில் இருந்த தமது பிள்ளைகளை விடுவிக்க நாராயணய்யா முடிவெடுத்தர். டாக்டர் நஞ்சுண்டராவிடம் ஆலோசனை கேட்டார். நீதி மன்றத்தில் வழக்குத் தொடர ஆலோசனை கூறப் பட்டது.

1912 ஜனவரியில் பெசண்டிற்கு எழுதப்பட்ட கடிதத்தில் தமது பிள்ளைகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு நாராயணய்யா கோரினார். அடையாறு வாசஸ்தலத்தில் இருந்து வெளி யேறுமாறு நாராயணய்யாவிற்குப் பதில் கடிதம் எழுதினார் பெசண்ட். 1912 ஜூலையில் மீண்டும் எழுதிய பதிவுத் தபாலில் ஒப்பந்தத்தை விலக்கிக் கொண்டதாக நாராயணய்யா அறிவித்தார். இந்தக் கடிதத்தை முழுமையாக 'இந்து' வெளியிட்டு நாராயணய்யாவிற்கு ஆதரவாகக் கிளர்ச்சியை வலுப்படுத்தியது.

தந்தை இவ்வாறு போர்க்கோலம் கொள்ள, மகன் கிருஷ்ணமூர்த்தி பெசண்ட்டிடம் தமது ஆழ்ந்த விசுவாசத்தை வெளிப்படுத்தி அயல் நாட்டிலிருந்து கடிதம் எழுதினார்.

1913–இல் சென்னை உயர்நீதிமன்றத்தில் பெசண்ட் தாமாகவே வாதாடினார். சி.பி. ராம சுவாமி ஐயர், நாராயணய்யாவிற்காக வாதாடினார். சென்னை உயர்நீதிமன்றம், 26, மே 1913 அல்லது அதற்கு முன்பு கிருஷ்ணமூர்த்தியையும், நித்யா வையும் நாராயணய்யாவிடம் ஒப்படைக்கும்படி தீர்ப்பளித்தது. பாரதியார் இதை நீதிபதி குட்டி களைத் தகப்பன் கழுதையிடம் நரிச்சி ஒப்படைக்க வேண்டுமென உத்தரவிட்டார் எனக் குறிப்பிட் டுள்ளார்.

வ.உ.சி. சிவாவைப் போல பாரதி, பெசண்ட்டிடம் கடைசிவரை விரோத உணர்ச்சியைக் கொள்ளவில்லை. பெசண்ட்டின் நியூ இந்தியாவில் பாரதியின் கட்டுரைகள், கடிதங்கள் வெளியிடப்பட்டன. கடலூரில் சிறை வாசத்தில் இருந்து மீள பெசண்ட்டும் உதவியதை பாரதியே குறிப்பிட் டுள்ளார்.

பொன்வால் நரியில் அறிந்து கொள்ள வேண்டியதைப் பற்றி பாரதியே முன்னுரையில் தெளிவாகக் குறிப்பிட் டுள்ளார். ஆதிக்கத்தை எந்த வடிவிலும் ஏற்க மறுத்து எதிர்க்கும் பாரதியை, பொன்வால் நரியிலும் காண்கிறோம்.

ஏனைய நரிகள் கழுதைகளின் தேசத் திலிருந்தும் வெறும் பொருளாதார லாபங்களையே குறிவைக்கையில், நானே அவற்றின்மீது ஆன்மிக ஆதிக்கத்தையே எளிதில் பெற்றுவிட்டேன் எனப் பொன்வால் நரி எக்காளமிட்டதை பாரதி அம்பலப்படுத்தினார்.

பாரதி அன்பர் ஈரோடு டாக்டர் ஜீவானந்தம் "The Fox with the Golden Tails" எனும் ஆங்கில நூலைத் தமிழாக்கம் செய்து வெளியிட முன் வந்தது பாராட்டுதலுக்குரியது. இதுவரை நிறைவு. டாக்டர் ஜீவாவின் மொழியாக்கத்தில் கவனிக்கத் தக்க ஓர் அம்சம், பாரதி எழுத்துக்களில் அவருக்குள்ள ஆழ்ந்தகன்ற பயிற்சியாகும். இதன் காரணமாக, இந்நூலில் பாரதி வழியை ஒட்டியே பெயர்கள் முதலானவற்றைத் தமிழாக்கம் செய்துள்ளார். 'நரிச்சி' என்ற சொற்பிரயோகத்தை பாரதியின் நவதந்திரக் கதைகளில் காண்கிறோம். இந்த நூலிலும் பார்க்கிறோம். இவ்வாறே கழுதை யினப் புத்தெழுச்சி முதலிய தமிழாக்கங்களும் நூலிற்குச் சுவை சேர்ப்பனவாகும்.

அறிதோறும் அறியாமை கண்டற்றால் எனும் குறள் உணர்த்தும் உண்மை பாரதிக்கும் பொருந்தி நம்மை வியப்புறச் செய்கிறது. இந்த வியப்பைப் 'பொன் வால் நரி' மேலும் எடுத்துக் காட்டுகிறது. இந்த நூலில் பாரதியின் ஆங்கில மொழி நடையின் எழிலைக் கண்டுகளிக்க ஆங்கில மொழி மூலக் கதையும் தரப்பட்டுள்ளது, போற்றுதலுக்குரியது.

டாக்டர் ஜீவாவின் இவ்வகைப்பணி பாரதி அன்பர்களின் தனிக் கவனத்திற்கும், பாராட்டு தலுக்கும் உரியதாகும். ●



கு.ப.ரா.-வும் கரிச்சானும்



இந்தக் கரிச்சான் குருவி இலக்கியத்திற்கு ஒரு புது விருந்தாளி; பட்டுக் கருப்பு; நல்ல அழகு; சுறு சுறுப்பே வடிவம். நிமிஷத்தில் நூறு முறை கழுத்தைத் திருப்பி அது எட்டுத் திக்கும் பார்ப்பதிலேயே, ரொம்ப 'சூடிகை'யான பிரகிருதி என்று தெரிந்துவிடும். சன்னமான சாரீரம். சங்கீதத்தில் தேட்டையான ஞானம். சம்பிரதாயத்தையும் இலக்கணத்தையும் உண்டு பிழைத்துக் கொண்டிருந்த கவிமகாசயர்களுக்குக் குயிலோடு சங்கீதமே அற்றுப் போய்விட்டது போல் தோன்றிற்றோ என்னவோ, மேதைகளைப் போல, பிரகிருதியின் சில பெரிய பாடகர்களும் தங்களுக்கு உரித்தான புகழைப் பெறவில்லை; இந்தத் துரதிருஷ்டக் கோஷ்டியில் கரிச்சான் ஒன்று.

ஆனால், அது புகழைப் பற்றி, கவலைப் பற்றிக் கவலைப்படவில்லை. வெறும் இனிமைக்காக, ஆத்மார்த்தமாக, தன்னுடைய ஆனந்தத்திற்காகவே நாதோபாசனை செய்கிறது.

இந்தக் கரிச்சானுக்குப் பாரத்வாஜம் என்று சம்ஸ்கிருதப் பெயர். வால்மீகி இதைப் பார்த்துவிட்டு மற்ற பக்ஷிகளோடு இதுவும் பாடிற்று என்று சொல்லிக் கொண்டே போவார். ஆனால் அவர் ஆதி கவி. குயிலைப் போல இது அவருடைய கவனத்தை அவ்வளவாக இழுக்கவில்லை. பின்னால் வந்த கவிகள் கவனித்திருக்கலாம். ஆனால் கவனிக்கவில்லை.

அலுக்காமல், சலிக்காமல் குயிலைக் கூப்பிட்டுப் பாடச் சொல்லி, தாங்களும் பாடி வேடிக்கைப் பாடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆயுசில் ஒரு தரமாவது அதை நேரே பார்த்திராவிட்டாலும் அது மாம்பூவைத் தின்று கம்மல் குரலில் பாடிற்று, அதற்கு அஜீர்ணம் என்று அதன் போஜனத்தைக் கூடப் பாடினார்கள். இந்த அதிஸ்தோத்ரத்தில் இன்னும் பல பெரிய பாடகர்கள் அவர்களுடைய கண்ணில் படவில்லை. அதிர்ஷ்ட கலம் பூஜ்யமாகி இருளில் விழுந்துகிடக்கும் பல சங்கீத

காரணம்? கரிச்சானின் கவிதைகளை ஒருவரும் கேட்கவில்லை என்று தோன்றுகிறது. அது பாடும் நேரத்தில் – பஞ்ச பஞ்ச உஷக் காலத்தில் – உலகம் முழுவதும் தூங்குகிறது. கதை எழுதுவோருக்குக் கேட்பானேன்? இராக்கண் விழித்து நடுநிசியில் பேனாவை மூடி வைத்துப்

படுக்கையை விரிக்கிறார்கள்!


ஒருசமயம் கவிகள் கேட்டிருக்கலாம். ஆனால், வெளியே சொல்ல சங்கோசப்பட்டிருப்பார்கள். குயில் மாதிரி இது பாடுகிறதோ, இது நல்ல பாட்டோ என்று அவர்களே குழம்பி இருக்க வேண்டும். மயிலையும் குயிலையும் கமலப் பொய்கையையும் சந்திரனையும் போற்றிய பழமையின் கூச்சலுக்குப் பயந்துவிட்டார்களோ என்னவோ!

குடியானவர்கள் மூன்றாம் ஜாமத்தில் வயலுக்குச் செல்லும்போது, அதைக் கேட்பார்கள். ஆனால், அவர்களுக்கு ஒரு கடிகாரம்தான் அது. ஓரிரண்டு பேர் ரசித்தாலும் ரசிக்கலாம். இறுதியாக, கரிச்சானின் புகழ் மிகவும் சிறிய எல்லைக்குட்பட்டது தான். குடவிளக்கு.

தாளர்களுக்கு அவர் பெரிய ஆதரவாக இருந்தவர். அவர்கள் எழுதி வாசித்துக் காட்டிய ஆயிரக் கணக்கான கட்டுரை, கதைகளை, அலுப்பில்லாமல், சுணங்காமல் கேட்டு, திருத்தங்களைச் சூசித்துக் கொண்டே இருப்பார். இந்த இளம் இருதயங்களை முன்னுக்குக் கொண்டு வந்த ஆர்வம் கரிச்சானையும் முன்னுக்குக் கொண்டு வந்தது. ஆனால் கரிச்சானைத் திருத்த வேண்டிய அவசியம் மட்டும் இருக்கவில்லை. அது பிறக்கும் போதே மகாவித்வானாகத்தான் பிறக்கிறது.

பழமைக்கும் புதுமைக்கும் 'ராஜி' செய்துவைக்க கு.ப.ரா. செய்த பல முயற்சிகளின் முத்திரையாகக் கூடத் தோன்றுகிறது, இந்தக் கரிச்சான் காதல்.

தி. ஜானகிராமன்



இலக்கியச் சோலையில் புதுவிதை நடப்போன கு.ப.ரா., பிச்சமூர்த்திகளின் காதில் அது விழுந்தபோது அதற்கு அதிர்ஷ்டம் பிறந்தது. ந. பிச்சமூர்த்தி பஞ்சமகா கவிகளில் ஒன்று என்று அதில் லயித்துவிட்டார். கு.ப.ரா. அதன் பெயரையே சம்ஸ்கிருதம், தமிழ் இரண்டு பெயர்களையும் – சுவீகரித்துக் கொண்டார்.

இந்த மனுஷ்ய கரிச்சான் பல காதற் கவிதைகளையும், கட்டுரை கதைகளையும் பாடிற்று. யதுநாத சர்க்காரின் கையில் கருகிப் போன சிவாஜியின் புகழ், வீரம், தூய்மைகளுக்கு இந்தப் பாரத்வாஜம்தான் புத்துயிர் அளித்தது.

கு.ப.ரா.–வின் ஒரு பெரிய குணத்திற்கும் இந்தக் கரிச்சான் காதலுக்கும் சம்பந்தமுண்டு. இளம் எழுத்

இலக்கியக்காரர்களின் வழக்கம் கு.ப.ரா.–விடம் பூரணமாக இருந்தது. இரா முழுவதும் பேசுவார்; படிப்பார்; சிந்திப்பார்; தீராப் பறியாகத் தூங்கின தூக்கம் மூன்றாம் ஜாமத்தில் கலைந்துவிடும். கரிச்சானின் உஷக்கால கீதத்தை அவர் கேட்காமல் இருந்ததில்லை.


ஒரு நாள் இரவு. நான்கு மணி வரையில் பேசிக் கொண்டே இருந்தோம்.

"சிரமமாயிருக்குமே, படுத்துக் கொள்ளலாமே" என்று ஆரம்பித்தேன்.

"என்ன சார்... வந்தி பாடகன் ஆரம்பித்து விட்டானே, இனி மேலா?" என்று சொன்னவர் சற்றுப் பெரிதாகவே சிரிக்க ஆரம்பித்தார்.



கரிச்சான் அந்த நிசப்தத்தில் ஒரு மெட்டைத் திருப்பித் திருப்பிப் பாடிக் கொண்டிருந்தது சாதகம் செய்பவன் வரவர அபிவிருத்தி காண்கிறது போல, அதன் மெட்டு போகப் போகத் தெளிவு படவே, அது உயிர் முழுவதையும் செலுத்திப் பாடத் தொடங்கிற்று.



ந.பிச்சமூர்த்தி

“இப்பொழுதுதான் சூடு ஏறி மேளம் கட்டியிருக்கிறது” என்றார் அவர். அதன் புதுப்புது மழலையைக் கேட்டு அவருக்குச் சிரிக்காமல் இருக்க முடியாது.

ஓர் இம்மிகூட மறதி, மாறுதல் இல்லாமல் அது, ஒரே மெட்டை அனுபவித்துப் பாடும்போது, ‘பெரிய ஜீனியஸ்’ என்று சொல்லி விட்டுக் கேட்டுக் கொண்டே இருந்தார்.



எழுத்தில் கோபம்

காந்திஜி தமது கடிதம், கட்டுரைகளை உதவியாளரிடம் சொல்லி எழுதச் செய்வார். ஒருநாள் அவ்வாறு எழுதப்பட்ட தாளைப் பார்த்த காந்திஜி, உதவியாளரிடம், “இன்று கோபமாக வந்தீர்களா?” என்று கேட்க, “அதெப்படி உங்களுக்குத் தெரியும்?” என்று உதவியாளர் கேட்க, “உங்கள் எழுத்தில் கோபம் கொப்பளிக்கிறதே” என்று பதிலுரைத்தாராம் காந்திஜி.

– வரதன், திருவாரூர்

சற்றுக் கழித்துப் பறவை ஓய்ந்து விட்டது.

“இனிமேல் படுத்துக் கொள்ளலாம். இனிமேல் கோழி கத்தும். வெயில் வந் ததும் ஒரு நிகழ்ச்சி உண்டு. நாம் எழுந்து கொள் வதற்கும் அதற்குச் சரியாக இருக்கும்” என்று அவர் யோசனை சொன்னார்.

கரிச்சானைக் கேட்கும் போதெல்லாம் கு.ப.ரா. சொல்லுவார் : “நல்ல இருட்டில் வெளிச்சத்தினாலே கோடு எழுதுகிறாற் போல இருக்கு – மின் னல் மாதிரி, என்ன சன்னமான சாரீரம் பார்த்தேளா?”

இரட்டையர்கள் – கு.ப.ரா.–வும் ந.பி.–யும் கடைசி முறையாகச் சந்தித்த போதுகூட, கரிச்சானைப் பற்றித்தான் பேசினார்கள். தஞ்சாவூர் மொட்டை மாடியில் தேய்பிறை ஒளியில் படுத்துக் கொண்டிருந்த போது பறவை பாடிற்று.

“ஒவ்வொரு வார்டுக்கு ஒரு குருவி உண்டு போல் இருக்கு” என்றார் கு.ப.ரா.

வானம்பாடி, மைனா, கரிச்சான் இன்னும் இரண்டு பேரைச் சேர்த்து, “பஞ்ச மகா கவிகள்” என்று ஒரு பாட்டைப் பாடிக் கொண்டிருந்தார் பிச்சமூர்த்தி.

கடைசி முறையாக, இரட்டையர்கள் சேர்ந்து கேட்க வேண்டுமென்று ஒரு கவிதையைப் பாடிவிட்டுக் கரிச்சான் பறந்து போயிற்று. இப்பொழுது அதற்கே பெரிய நஷ்டம்!

– கட்டுரையை அனுப்பியவர் :

உபாலி

விவாதம்

காஷ்மீருக்கு இவர்கள் காட்டும் தீர்வுதான் என்ன?

இந்தியாவில் காஷ்மீர் மாநிலம் தனிநாடு போலவே கருதப்பட்ட மாநிலம். அதற்காகச் சிறப்புத் தகுதி தரப்பட்ட அரசியல் சாசனத்தின் 370–வது பிரிவும் 35ஏ என்ற மற்றுமொரு சிறப்புப் பிரிவும் அரசியல் சாசனத்தி லிருந்து நீக்கப்பட்டுவிட்டன. நீக்கப்பட்ட பிறகு ஜம்மு – காஷ்மீர் ஒரு யூனியன் பிரதேசமாகவும், லடாக் இன்னொரு யூனியன் பிரதேசமாகவும் செய்யப்பட்டுள்ளன. இதற்கான ஒப்புதலை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தந்ததால், அது சட்டமாகிவிட்டது.



அதற்குப் பிறகுதான் இந்தச் சட்டம் மாநிலங்களவையிலும் அதற்குப் பிறகு மக்களவையிலும் அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.



மசோதா அளவில் உள்ளதை வழக்கமாக இரண்டு அவைகளிலும் நிறைவேற்றிய பிறகுதான், ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்புவது அரசியல் சாசன மரபு. ஆனால், தலைகீழாக இது நடந்துள்ளது.

இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், இது சட்டமாவதற்கு ராஜ்ய சபாவில் ஆதரவு தெரிவித்தவர்களில் இதனை எதிர்த்து வந்த காங்கிரஸ் கட்சியின் எம்.பி.க்கள் எட்டுப் பேர் இதனை எதிர்த்து வாக்களிக்கவே வரவில்லை. அதேபோல டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் இதனை ஆதரித்தது ஆச்சரியம்தான்.

இதற்கு ஆதரவுக் குரல் கொடுத்தவர்களில் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவி மாயாவதி, பிஜு ஜனதா தளம் பட்நாயக், ஆந்திராவின் முதலமைச்சர் ஜகன்மோகன் ரெட்டி ஆகியோரும் உள்ளனர்.

இவற்றையெல்லாம்விட, காஷ்மீரில் பாகிஸ்தான் படைகள் பிரவேசித்தபோது அதை எதிர்த்துப் போராட முடியாத காஷ்மீர் சமஸ்தானத்தின் மகாராஜா ஹரிசிங்கின் மகன் காங்கிரஸ் தலைவர் கரன்சிங் இச்சட்டத்தின் அம்சங்கள் சிலவற்றை ஆதரித்தார்.



பிரதமர் நரேந்திர மோடி

இந்திய மாநிலங்களில் ஒன்றான காஷ்மீர் மீது எடுக்கப்பட்ட இந்தச் சட்ட நடவடிக்கையைப் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், ‘ஜனநாயகப் படுகொலை’ என்றார். பாகிஸ்தான் எதிர்க்கட்சிகளும் இதனை வரவேற்கவில்லை.

அதுமட்டுமல்ல, இதற்கு உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்ட இம்ரான்கான், அமெரிக்க அதிபர் டிரம்ப்பை நாடினார். அவர், இந்தியாவின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா எதிர்க்கப்போவதில்லை என்று கூறிவிட்டார். ஐ.நா.வும் இதனை எதிர்க்கவில்லை.

இஸ்லாமிய நாடான சவுதி அரேபியா, பாகிஸ்தானுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சவுதியில் பணியாற்றிக் கொண்டிருக்கிற பாகிஸ்தானின் 40 டாக்டர்களை வெளியேறுமாறு உத்தரவிட்டது. இவற்றையெல்லாம்விட, போர் விமானங்கள் விற்பனை செய்யும் ராணுவ வல்லமை மிக்க ரஷ்ய தேசம் இந்தியாவின் நடவடிக்கையை ஆதரித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில்தான் ராஜ்யசபையில் இந்தச் சட்டத்தின் விவாதத்தில் கலந்து கொண்ட, தி.மு.க. சார்பில் வெற்றிபெற்ற ம.தி.மு.க. தலைவர் வைகோ, இது ஜனநாயகப் படுகொலை என்று உரக்கப் பேசினார். சென்னையில் வழக்கமாக மதச்சார்பற்ற கட்சிகள் என்று அழைத்துக் கொள்கிற தி.க., தி.மு.க., ம.தி.மு.க., இ.கம்யூனிஸ்ட், மார்க்சிய கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் என்பவை இதனை எதிர்த்துக் குரல் கொடுத்தன.

இந்தப் பிரச்சனையில் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சம், காஷ்மீர் மாநிலம் பாகிஸ்தான்



எல்லையிலுள்ள இஸ்லாமியர் அதிகம் வசிக்கின்ற மாநிலம்.

காஷ்மீர் மக்கள் இஸ்லாமியர்களாக இருப்பதால், அந்த மக்களை இணைத்துக் கொள்ளப் பாகிஸ்தான் விரும்புவதில் ஆச்சரியமில்லை. அம்மக்களை மட்டும் இடம்பெயரச் செய்திருக்கலாம். அந்த மக்கள் வசிக்கிற மண்ணையும் சேர்த்தே இணைத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் பாகிஸ்தான் திடீரென்று படையெடுத்தது. அதற்குப் பதிலடி கொடுக்க முடியாத பலவீனத்தால்தான் சுதந்திர இந்தியாவின் ராணுவ உதவியை மகாராஜா ஹரிசிங் நாடினார்.

இந்தியா, ராணுவ உதவியைச் செய்ய வேண்டுமானால், அது ஓர் இந்திய மாநிலமாக இருந்தால்தான் செய்ய முடியும். அப்படித்தான் அந்த மண் இந்திய மாநிலமாகியது.

சுதந்திரம் பெற்ற பிறகு இரும்பு மனிதர் சர்தார் வல்லபபாய் படேல் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு மட்டும்தான் சுதந்திரத்தைப் பெற்றார். பிரிட்டிஷ் இந்தியாவைவிடப் பெரிய இந்தியாவாக இருக்க வேண்டுமானால், இந்தியாவிலுள்ள மற்ற சமஸ்தானங்களையெல்லாம் இதனோடு இணைக்க வேண்டும் என்று படேல் திட்டமிட்டார்.

அப்போது இந்தியாவில் திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை, பிகானிர் என 601 சமஸ்தானங்கள் இருந்தன. இவற்றில் 552 சமஸ்தானங்கள் இந்தியாவோடும், 49 சமஸ்தானங்கள் பாகிஸ்தானோடும் இணைந்தன.

இவை இரண்டிலும் இணையாத மூன்று சமஸ்தானங்களில் ஒன்று, மத்தியப்பிரதேசத்திலுள்ள ஜுனாகத். மற்றொன்று, தெலுங்கானாவிலுள்ள ஹைதராபாத். மூன்றாவது, பாகிஸ்தான் எல்லையோரத்தில் இருந்த காஷ்மீர் சமஸ்தானங்கள்.

ஜுனாகத், ஹைதராபாத் சமஸ்தானங்கள் பாகிஸ்தானோடு சேரத்தான் இருந்தன. ஆனால், அந்த சமஸ்தானங்களில் இந்துக்கள் அதிகம் என்பதால் அது நிறைவேறவில்லை.

இந்தப் பின்புலத்தில் முஸ்லிம்கள் அதிகமுள்ள காஷ்மீர் சமஸ்தானம் பாகிஸ்தானோடுதான் சேர்ந்திருக்க வேண்டும். சேர விரும்பவில்லை, இந்தியாவோடும் சேர விரும்பவில்லை. தனி நாடாக இருக்க விரும்பியது. அது

இந்தியாவிற்கும் ஆபத்து, பாகிஸ்தானுக்கும் ஆபத்து என்பதால் இரண்டு நாடுகளும் அதை ஏற்கவில்லை.

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீரின் பரப்பளவு 2.5 பங்கு. 45 லட்சம் மக்கள். இந்தியாவின் வசமுள்ள காஷ்மீரின் பரப்பு 1.5 மட்டும்தான். இந்தியாவைவிட, பாக். காஷ்மீர்தான் பரப்பளவில் பெரியது.

இங்கே நாம் கவனிக்க வேண்டிய விஷயம், இந்தியாவோடு சேர்ந்த காஷ்மீர் மாநிலத்தில் சட்டசபை இருக்கிறது. அச்சட்டசபை, காஷ்மீரிலும் ஜம்முவிலும் மாறி மாறி நடக்கும். கவர்னர் இருக்கிறார். இந்தியாவில் ஏனைய மாநிலங்களிலுள்ள ஜனநாயக ஆட்சிக்குரிய தேர்தல்களும் அங்கு நடந்தன.

இதேபோல, பாக். காஷ்மீரில் இப்படித் தேர்தல் நடக்கிறதா? சட்டசபை இருக்கிறதா? முதலமைச்சர் இருக்கிறாரா? எதுவுமே இல்லை. முழுக்க முழுக்க ராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியாகத்தான் அது நீடிக்கிறது.

இந்தியாவிலுள்ள காஷ்மீரிகள் மதத்தால் இஸ்லாமியர்களாகவும், குரான் ஓதுபவர்களாகவும் இருந்தாலும், அவர்கள் பாகிஸ்தானிலுள்ள உருது பேசுகிற ஷியா, ஷன்னி பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அல்ல. பர்வேஷ் முசாரப் போன்று சிறுபான்மை குர்திஷ் முஸ்லிம்களும் அல்ல.

காஷ்மீரின் கலாச்சாரம் தனித்துவமானது. 'காஷ்மீரியத்' என்று அதனை அழைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் இஸ்லாமின் ஸூஃபி பிரிவைச் சேர்ந்தவர்கள். நமது சித்தர் பரம்பரையைப் போன்றவர்கள் இந்த ஸூஃபிகள். அவர்கள் இறை நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தாலும், நட்ட கல்லும் பேசுமோ? என்று நாத்திகர்களைப் போலவும் பேசுகிற சித்தர்களைப் போன்றவர்கள் இச் ஸூஃபிகள்.

இவர்களின் சிறப்பு அம்சம் என்னவென்றால், மற்ற மதங்களையும் சமமாக மதிக்கின்ற மனப்பான்மை உள்ளவர்கள். இந்தியாவின் உத்தரப் பிரதேசம் முதலிய மாநிலங்களில் மதக்கலவரங்கள் நடப்பது போல, காஷ்மீர்ப் பள்ளத்தாக்கில் மதக் கலவரங்கள் நடப்பதில்லை. காரணம், அவர்கள் சமய நல்லிணக்கவாதிகள்.

1947–இல் நடந்த நவகாளி மதக்கலவரம்



மகாராஜா ஹரிசிங்


நமக்குத் தெரியும். அதுபோலக்கூட காஷ்மீர்ப் பள்ளத்தாக்கில் மதக்கலவரம் நடக்கவில்லை. இந்தக் காஷ்மீர் கடந்த 70 வருடங்களாக ராணுவத்தால்தான் கண்காணிக்கப்படுகிறது. அங்குள்ள புகழ் பெற்ற 'தால்' ஏரியைச் சுற்றிலும் எப்போதும் ராணுவம்தான் காவலுக்கு நிற்கிறது. காஷ்மீரிகளுக்கு இது ஒரு வகையில் அருவெறுப்பை உண்டாக்கியது. அதனாலேயே அவர்கள் இந்தியாவை வெறுத்தார்கள். ஆனாலும், பாகிஸ்தான் பக்கம் நகரவில்லை.

காஷ்மீர் மாநிலம் எல்லைப்புற மாநிலமாக இருப்பதால், பாகிஸ்தானின் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் காஷ்மீரைப் பயன்படுத்திக்கொண்டு இந்தியக் கரன்சியையும் கள்ளத்தனமாக அச்சிட்டு இந்தியாவுக்குள் புழக்கத்தில் விட்டனர். நமக்கு உயிர்ச் சேதத்தையும், உடமைச் சேதத்தையும் பல முறை உண்டாக்கினார்கள்.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது நாடாளுமன்றக் கட்டடத்தையே தகர்க்க வந்தார்கள். அதேபோல, மும்பையில் தாஜ் ஓட்டலைத் தாக்கினார்கள். இப்படிப் பல சம்பவங்கள். மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்குக் காரணமான தாவூத் இப்ராஹிம், பாகிஸ்தானில்தான் தஞ்சமடைந்

தான். அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத்தைத் தகர்த்து 5 ஆயிரம் அமெரிக்கர்களைக் கொன்ற பின்லேடன் வசித்து வந்தது பாகிஸ்தானின் ராணுவ நகரத்திற்குப் பக்கத்தில்தான்.

பாகிஸ்தான் தொடர்ந்து இந்தியாவிற்கு எதிராகப் பயங்கரவாதத்தைத் தூண்டிக்கொண்டே இருக்கிறது. இந்தியாவின் அமைதியான வளர்ச்சிக்குத் தொடர்ந்து குறுக்கீடுகள் செய்து வருவதைக் கொள்கையாகவே பாகிஸ்தான் கொண்டிருக்கிறது.


சர்தார் வல்லபாய் படேல்

இந்தியாவில் ஜனநாயக ஆட்சிதான் மாறி மாறி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்படுகிறது. ஆனால், பக்கத்திலுள்ள பாகிஸ்தானிலோ, ராணுவத் தளபதிகள் யாஹியாகான், அயூப்கான், ஜியா உல் ஹக், பர்வேஸ் முஷாரப் முதலிய ராணுவத் தளபதிகளும் அங்கு அதிபர்களாகின்ற துரதிருஷ்டம் நடந்தது.

இந்தியாவில் ஒருமுறைகூட ராணுவத் தளபதி அதிபராகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா தனது நாட்டைப் பாதுகாப்பதற்காக இந்திய ராணுவத்தைப் பலப்படுத்துகிறது. போபோர்ஸ் பீரங்கி, ரஃபேல் விமானம் முதலியவற்றை விலைக்கு வாங்குகிறது. ரஷ்யாவிடமிருந்து ‘விக்ரம்’ என்ற போர்க்கப்பலை வாங்குகிறது. இந்தியாவில் ராணுவத்தைப் பலப்படுத்த நமது வரி வருமானத்தில் மத்திய அரசு பட்ஜெட்டில் ரூ. 4.5 லட்சம் கோடியை ஒதுக்கீடு செய்தது.

இந்தியா எப்போதும் ஆக்கிரமிப்பு நாடல்ல. ஆனால் நமது ராணுவம் பலப்படுத்தப்படுகிறதென்றால், எந்த நாட்டின்மீதும் படையெடுப்பதற்கல்ல. சொந்த நாட்டைப் பாதுகாப்பதற்குத்தான்.

அப்படியென்றால், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எங்கிருந்து வருகிறது?

ஒரு பக்கம் சீனா. சீனாவோடு நமக்கு எல்லைப்புற மோதல் அதிகமாக இல்லை. இன்னொரு பக்கம் இலங்கை. அங்கும் நமக்கு மோதலில்லை. பாகிஸ்தான் எல்லையில் உள்ள காஷ்மீர்தான் நமக்கு அதிகமாகத் தொல்லை தருகிற பிரதேசம்.

பாகிஸ்தான் பொருளாதாரப் பின்னடைவுள்ள தேசம். அங்கு பிரதமராகப் பதவியேற்பவர் கூட, ராணுவத் தளபதியின் விருப்பப்படி நடந்தால்தான் பதவியைத் தக்க வைக்க முடியும். பிரதமராக இருந்த பெனாசிர் பூட்டோ, எப்படி மர்மமாகக் கொலை செய்யப்பட்டார் என்பதை நாம் அறிவோம்.

அதனால், நாம் ராணுவத்திற்குச் செலவழிக்கக்கூடிய ரூ. 4.5 லட்சம் கோடித் தொகையானது, அநேகமாகப் பாகிஸ்தானை எதிர்த்துத்தான்.

பாகிஸ்தான் பகை நாடாக இல்லாமல், நட்பு நாடாகுமானால், குறைந்த பட்சம் காஷ்மீர் மீது நாம் தற்போது எடுத்திருக்கிற நடவடிக்கையைப் பாகிஸ்தான் எதிர்க்காமல்கூட இருந்திருக்கலாம். நட்பு நாடாகவும் மாற முடியும். அப்படி ஆகும் பட்சத்தில், நாம் ராணுவத்திற்குச் செலவழிக்கும் ரூ. 4.5 லட்சம் கோடித் தொகையில் பெரும் பகுதியை மருத்துவமனை, கல்விக்கூடங்கள், சாலைகள், ரயில் போக்குவரத்து இவற்றிற்குத் தாராளமாகச் செலவழிக்கலாம். இந்த யோசனை ஏனோ, பாகிஸ்தான் தலைவர்களுக்குத் தோன்றுவதே இல்லை.

இந்தியா மீது பாகிஸ்தானுக்கு ஓர் ஆத்திரம் உண்டு. நேருஜிக்குப் பிறகு லால்பகதூர் சாஸ்திரி காலத்தில் ஏற்பட்ட பாகிஸ்தான் படையெடுப்பை இந்தியா தகர்த்தது. பாகிஸ்தான் படுதோல்வி அடைந்தது. அதன்பிறகு இந்திராஜி பிரதமராக இருந்தபோது பங்களாதேஷ் யுத்தத்தில், இந்திய ராணுவத்திடம் 90 ஆயிரம் பாக். சிப்பாய்கள் வெட்கமில்லாமல் சரணடைந்தார்கள். இது இரண்டாவது படுதோல்வி.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது, கார்கில் போரில் பாகிஸ்தான் படுதோல்வி அடைந்தது. பிரதமர் நரேந்திரமோடி காலத்தில் புல்வாமா தாக்குதலுக்குப் பதிலடியாக பாலகோட் பகுதியில் இந்தியா நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் விமானப்படை தோல்வியடைந்தது.

தொடர்ந்த தோல்விகளால் பாகிஸ்தான் அவமானப்பட்டே வந்து கொண்டிருக்கிறது. இந்தியாவை எப்படியாகினும் ஒரு முறையாவது ஜெயிக்க வேண்டும் என்பதுதான், பாக். அதிபர்களுக்கு அல்ல, பாகிஸ்தான் ராணுவத் தளபதி

களுக்கு ஒரு நோக்கமாகவே உள்ளது.

இவற்றையெல்லாம் புரிந்து கொண்டால்தான், பிரதமர் மோடி அவர்கள் எடுத்துள்ள காஷ்மீர் சிறப்புத் தகுதி நீக்கத்தையும் 35ஏ சலுகைகளைக் கைவிட்டதையும், சரியாகப் புரிந்து கொள்ள முடியும். ஆதரிக்கவும் முடியும்.

இப்போது என்ன நடந்துவிட்டது? காஷ்மீர் மாநிலம் ஜம்மு – காஷ்மீர், லடாக் என்ற இரண்டு யூனியன் பிரதேசங்களாக ஆகியுள்ளன. லடாக் கிலும் ஜம்முவிலும் இந்த நடவடிக்கைக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. வரவேற்கவும் செய் கிறார்கள்.

காஷ்மீரிகளுக்கு மத்தியில் காஷ்மீரிகளை மட்டுமே வைத்துக் கொண்டு அரசியல் செய்து வந்த ஷேக் அப்துல்லாவின் மகன் பரூக் அப்துல் லாவும், அவருடைய மகன் உமர் அப்துல்லாவும் இன்னொரு குடும்பத்தைச் சார்ந்த முப்தி முகமது சயீத் குடும்பத்தாரும், மூன்றாவதாக காஷ்மீரி யான குலாம் நபி ஆசாத் குடும்பத்தாரும் ஆகிய மூன்று குடும்பத்தார் மாறி மாறிக் காஷ்மீர் மக் களைக் கைவசம் வைத்துக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தார்கள்.

இதற்குப் பொருத்தமாக 'தினமணி' தலை யங்கத்தில் "நீங்கள் உங்கள் எல்லைகளை இந்தியா பாதுகாக்க வேண்டும் என்கிறீர்கள். உங்கள் பகுதிகளில் நாங்கள் சாலைகளை அமைக்க வேண்டும் என்கிறீர்கள். உங்களுக்கு உணவுப் பொருள்களை வழங்க வேண்டும் என் கிறீர்கள். இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்கு நிகரான அந்தஸ்தைக் காஷ்மீர் பெற வேண்டும் என்கிறீர்கள். அதே நேரத்தில், இந்திய அரசுக்கு உங்கள் பகுதியில் எந்தவித அதிகாரமும் இருக் கக்கூடாது, இந்திய மக்களுக்குக் காஷ்மீரில் எந்த உரிமையும் இருக்கக்கூடாது என்று வற்புறுத்து கிறீர்கள். இதற்கு ஒத்துக்கொண்டால், இந்தியா வுக்குத் துரோகம் இழைத்தவனாகக் கருதப்படு வேன். இந்தியாவின் சட்ட அமைச்சர் என்கிற முறையில் அதை நான் ஒருபோதும் செய்ய மாட் டேன் என்று ஷேக் அப்துல்லாவின் முகத்திற்கு நேரே சொன்னவர் யார் தெரியுமா? பாபா சாகேப் அம்பேத்கர்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது" எனக் கூறியதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

சிறப்புத் தகுதி தரப்பட்டதால், காஷ்மீருக்கு எந்தப் பொருளாதார வளர்ச்சியும் ஏற்படவில்லை. தொழிற்சாலைகள் வரவில்லை. சுற்றுலாத்துறை விரிவடையவில்லை. இவற்றையெல்லாம் தடுப் பதற்காகவே காஷ்மீரில் பிற மாநிலத்தவர் சொத்து வாங்கக் கூடாது, வியாபாரம் செய்யக் கூடாது, தொழிற்சாலைகள் நடத்தக்கூடாது என்பதாக அதன் ஷரத்துக்கள் உள்ளன.

இவற்றை இப்போது நீக்கிவிட்டதால், நிச்சய மாகக் காஷ்மீர் யூனியன் பிரதேசம் தேசிய நீரோட் டத்தில் இணைந்து தொழிற்சாலைகளைப் பெருக் கும். சாலை வசதிகளைப் பெருக்கும். போக்கு வரத்து வசதிகளை உருவாக்கும். சுற்றுலாத்துறை வளரும். சுற்றுலா, பாதுகாப்புள்ளதாகவும், சுக மானதாகவும் அமையும். இந்தியாவின் வளர்ச் சிக்கு அது மிகப் பெருந்துணையாக இருக்கும்.

இதைச் செய்யாமல், கடந்த 70 ஆண்டு களாக இருந்த அதே காஷ்மீரை அப்படியே பராமரித்துவிட்டுச் செல்வதற்கு மோடியின் மத்திய



இம்ரான்கான்

அரசு தேவையில்லை. மாறுதல், வளர்ச்சி, அபி விருத்தி இந்திய விவசாயிக்கு இரண்டு மடங்கு ஊதியம், வெளிநாட்டு மூலதன வருகை, தொழிற் சாலைப் பெருக்கம் என்பதற்குத்தான் மோடி ஆட்சி. அதற்குத்தான் அமோக வெற்றியைத் தந்து வலுவான ஒரு மத்திய அரசை இந்திய மக்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

அந்த மத்திய அரசு காஷ்மீரைப் பற்றிக் கண்டு கொள்ளாமல் விட வேண்டுமென்று கம்யூ னிஸ்ட்டுகள், தி.மு.க. முதலிய கட்சிகள் தமிழ் நாட்டில் போராடுவதைப் பார்த்தால், இவர்களை என்ன சொல்வது?

இதைப்பற்றி வாசகர்களாகிய நீங்கள் என்ன எண்ணுகிறீர்களோ, அதை எழுதுங்கள் செப்டம்பர் 15–க்குள்.

– பி.சி.


உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE
MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES
Derived Engine மற்றும் Gear Box
FORCE
GURKHA E.O.V. 4.4.4
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு
ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின்
செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE
MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை–18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940

குற்றங்கள் செய்து நீண்ட காலத்திற்குச் சிறைப்பட்டவர்கள், சிறையில் பல வேலைகள் செய்கின்றனர். அவர்கள் எல்லோரும் வசதியானவர்கள் என்று கூறமுடியாது. ஏழைகளும், சாதாரணமான குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர். அவர்கள் தண்டனைக் காலம் முடிந்து வெளியே வரும்போது, அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு ஏதேனும் தொழில் அல்லது வேலை தெரிந்திருக்க வேண்டும். அவ்வாறு தெரிந் திருந்தால் அவர்கள் அத்தொழிலையோ, வேலையையோ செய்து வாழலாம்.

அவ்வகையில் சிறைச்சாலையில் செய்யும் பல்வேறு பணிகளுடன், சிறைக்கு வெளியிலும் சில வேலை களைச் செய்வர். இதற்காக ஏற்கனவே திறந்தவெளிச் சிறைச்சாலைகளும் உண்டு.

ஏதோ உணர்ச்சி வேகத்தில் குற்றங்கள் புரிந்து, தண்டனை பெற்றுச் சிறையில் இருக்கும் சிறை இல்லவாசிகளில் நன்னடத்தையுள்ளோருக்கு, அவர்கள் தண்டனை முடிந்து வெளியே வந்தால் வேலை வாய்ப்பைப் பெறும் வகையில், அவர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சியாக, அதேவேளை அதற்கு ஊதியம் பெறும் வேலையாகத் தமிழக அரசு சிறைத்துறை சார்பில் பெட்ரோல் விற்பனை நிலையங்களைத் தொடங்கி யுள்ளது. அத்துடன் சிறையில் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனை செய்யும் கடைகளையும் அமைத் துள்ளது.

இவை சிறை வளாகத்திற்கு வெளியே செயல்படுகின்றன. அரசின் இந்தத் திட்டம், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதாகும். இது பற்றி அறிந்து கொள்ள கோவை மத்திய சிறையின் சார்பில் நடத்தப்படும் 'ஃபிரீடம் ஃபில்லிங் ஸ்டேஷன்' என்னும் இந்தியன் ஆயில் நிறுவன பெட்ரோல் விற்பனை நிலைய மேலாளர் திரு. கே. இளவரசன் அவர்களை 'ஓம் சக்தி' சார்பில் அணுகினோம்.

திரு. இளவரசன் அவர்கள், காவல் துறையில் துணை சிறை அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சிறை இல்லவாசிகள் பற்றி ஆய்வு செய்து 'ஆய்வியல் நிறைஞர்' (எம்.ஃபில்) பட்டம் பெற்றவர். அவர் 'ஓம் சக்தி'க்கு அளித்த பேட்டி...

நேர்காணல்

சிறை இல்லவாசிகளுக்கு அரசின் மறுவாழ்வுப் பணிகள்!

கேள்வி : "சிறைத்துறை சார்பில் பெட்ரோல் விற் பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளது மற்றும் அதில் சிறை இல்லவாசிகளைப் பணி செய்ய வைப்பதன் நோக்கம் பற்றிக் கூறுங்கள்...

பதில் : தமிழ்நாட்டில் சிறைத்துறை சார்பில் 11 பெட்ரோல் விற்பனை நிலையங்கள் அமைக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. முதல் கட்ட மாகத் தற்போது ஐந்து நிலையங்கள் சென்னை, கோவை, பாளையங்கோட்டை, வேலூர், புதுக் கோட்டை ஆகிய இடங்களில் அமைக்கப் பட்டுள்ளன. இதன் நோக்கம் சிறை இல்லவாசி களின் மறுவாழ்வு.

சென்ற பிப்ரவரி 2019–இல்தான் முதல மைச்சர் காணொளிக் காட்சி மூலமாக இந்தப் பெட்ரோல் விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்தார். இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறு வனம்தான் இந்த நிலையத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறது.

இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனப் பணியாளர்கள் இவர்களுக்குப் பயிற்சிகள் தந் துள்ளனர். கோவையிலேயே சிறைத்துறை மூலம்



திரு. கே. இளவரசன்

இன்னொரு பெட்ரோல் விற்பனை நிலையமும் அமைக்கப்பட உள்ளது.

அவர்களுக்கு இம்மாதிரி வேலைகளில் பயிற்சியளித்துச் சான்றிதழ் வழங்கி தண்டனைக் காலத்திற்குப் பின்னர் வெளியில் அனுப்புகிறோம். வேலை தெரிந்தவர்கள் வேலை செய்வர். தெரி யாதவர்கள் கற்றுக் கொள்கின்றனர். இது அவர் களின் எதிர்கால வேலைவாய்ப்பிற்கு உதவும்.



அவ்வகையில், இது ஒரு பயிற்சி மையமாக விளங்குகிறது.

கேள்வி : இங்கே எத்தனை பேர் பணியில் உள்ளனர்? அவர்களைக் கண்காணிப்பது யார்?

பதில் : இந்த பங்க் 24 மணி நேரமும் செயல்படுகிறது. இதில் மூன்று ஷிப்டுகளிலும் சேர்த்துச் சிறை இல்லவாசிகள் 34 பேர் வேலை செய்கின்றனர். காலை 6 மணி முதல் பகல் 2 மணி வரையும், பகல் 2 மணி முதல் இரவு 10 மணி வரையும், இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரையும் என இந்தப் பணி நேரங்கள் அமைகின்றன. அந்தந்த ஷிப்ட் முடிந்ததும், அவர்கள் பாதுகாவலர்கள் மூலம் மத்திய சிறைக்கு அனுப்பப்படுகின்றனர்.

இங்கே சிறைக் காவலர்களும் பணியாற்றுகின்றனர். இவர்கள் விற்பனைப் பணத்தை ஷிப்ட் முடிந்ததும் பெற்றுக் கொண்டு, வங்கிக்குக் கொண்டு செல்வது, பணியாற்றும் சிறை இல்லவாசிகளின் பாதுகாப்பு ஆகியவற்றைப் பார்த்துக் கொள்கின்றனர்.

கேள்வி : எத்தனை ஆண்டுச் சிறைத்தண்டனை பெற்றவர்கள் இங்கே பணி செய்கிறார்கள்?

பதில் : இங்கே ஆயுள் தண்டனை, பத்தாண்டுத் தண்டனை, ஏழு ஆண்டுத் தண்டனை, ஐந்தாண்டுத் தண்டனை என அதிக காலம் பெற்றவர்கள் பணி செய்கிறார்கள். மிகக் குறுகிய காலத் தண்டனை பெற்றவர்களைப் பணியில் சேர்ப்பதில்லை.

கேள்வி : எந்த மாதிரியான குற்றங்களைச் செய்து தண்டனை பெற்றவர்கள் இங்கே பணி செய்கிறார்கள்?

பதில் : திருட்டுக் குற்றங்கள், ஏமாற்றுதல் முதலான பொருளாதாரக் குற்றங்கள் செய்பவர்களை இந்த வேலைகளுக்கு எடுத்துக் கொள்வதே இல்லை. மற்றபடி கொலைக்குற்றம் உள்படப் பெரிய தண்டனைக்குரிய குற்றங்கள் செய்து சிறைப்பட்டோரையும் வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம். அவர்களின் நடத்தையைக் கண்காணிக்க ஒரு குழுவே உள்ளது. அவர்களின் கண்காணிப்பில் நன்னடத்தை உள்ளவர்களே பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

கேள்வி : இங்கே வேலை செய்வதற்காகச் சிறை இல்லவாசிகளுக்கு ஊதியம் உண்டா?

பதில் : இங்கே வேலை செய்பவர்களுக்கு ஊதியம் உண்டு. அது அவர்களின் கணக்கில் செலுத்தப்படுகிறது. அதனை அவர்கள் அன்றாடச் செலவுகளுக்கோ அல்லது சேமிப்பிற்கோ, வீட்டிற்கு அனுப்பவோ பயன்படுத்திக் கொள்ளலாம். மாதம் இவ்வளவுதான் செலவு செய்யலாம் என அவர்களுக்குக் கட்டுப்பாடு உண்டு. அதற்கென வழங்கப்படும் டோக்கன்களைக் கொண்டு அவர்கள் வேண்டிய பொருள்களை வாங்கிக் கொள்ளலாம்.

வேலை செய்பவர்களுக்கு ஸ்கில்டு லேபர், செமி ஸ்கில்டு லேபர், அன்ஸ்கில்டு லேபர் என மூன்று தகுதிகள் உள்ளன. இங்கு பெட்ரோல் விற்பனை நிலையத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு, ஸ்கில்டு தொழிலாளர்களுக்கான ஊதியம் கொடுக்கப்படுகிறது.

கேள்வி : சிறை இல்லவாசிகள் சிறையிலிருந்து தப்பிச் செல்ல முயற்சிப்பது அவ்வப்போது நடைபெறுகிறது. அப்படியிருக்கும்போது அவர்களை இங்கே பொது இடத்தில் வேலை செய்ய வைத்தால் அவர்கள் தப்பிச்செல்ல வாய்ப்பாகாதா?

பதில் : எந்த மாதிரிச் சிறை இல்லவாசிகளை வெளியே பணிக்குக் கொண்டு செல்வது என்பதற்கு நாங்கள் பல தகுதிப்பாடுகள் வைத்திருக்கிறோம். நீண்ட நாள் சிறைத்தண்டனை பெற்றவர்கள், அத்தண்டனைக் காலத்தில் பாதியைச் சிறையில் கழித்திருக்க வேண்டும். அவர்களுக்குக் குடும்பம் இருக்க வேண்டும். அவ்வாறு குடும்பம் இல்லாத தனி ஆட்களை இவ்வேலைக்கு

எடுத்துக்கொள்ள மாட்டோம். இடையில் விடுப்பு எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்று திரும்பியவர்களாகவும் நன்னடத்தை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

அத்துடன் இங்கே வேலை செய்பவர்களுக்குத் தண்டனையில் கழிவு கொடுக்கிறோம். ஒரு மாதத்திற்கு 4 அல்லது ஐந்து நாட்கள் தண்டனை குறையும். இதுவே, திறந்தவெளிச் சிறையில் வேலை செய்பவர்களுக்கு, ஒரு நாள் வேலை செய்தால், ஒரு நாள் தண்டனைக்காலம் குறையும். எனவே, இம்மாதிரி வசதிகள் இருப்பதால், இங்கே வந்து பணி செய்தால் தப்பிச் செல்லும் எண்ணம் வராது.

கேள்வி : இந்தத் திட்டம் தமிழகத்தில்தான் தொடங்கப்பட்டுள்ளதா?

பதில் : இந்தியாவில் முதலில் ஆந்திர மாநிலத்தில்தான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. அடுத்ததாகத் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ளது. இதை எப்படி நடத்துகிறார்கள் என்று ஆந்திர மாநிலத்திற்குச் சென்று நமது சிறைத்துறை அலுவலர்கள் அறிந்து வந்தார்கள். தற்போது, தமிழகத்தில் நடத்துவதைக் கேரள மாநில சிறைத்துறை அலுவலர்கள் கோவைக்கு வந்து பார்த்துச் சென்றுள்ளனர். இனி கேரளத்திலும் இம்மாதிரி சிறைத்துறைப் பெட்ரோல் நிலையங்களை அம்மாநில அரசு அமைக்கும்.

கேள்வி : பெட்ரோல் விற்பனை நிலையம் மட்டும்தான் செயல்படுகிறதா, வேறு விற்பனையகங்களும் உள்ளனவா?

பதில் : பெட்ரோல் நிலையத்துடன், 'ஃபிரீடம் பிரிசன் பஜார்' (Freedom Prison Bazaar) என்ற பெயரில் சிறையில் செய்யும் பொருள்கள் அங்காடி செயல்படுகிறது. இதில், சிறை இல்லவாசிகள் சிறையில் தயாரிக்கும் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், பேக்கரியும் செயல்படுகிறது. இதில் சிறையில் தயாரித்த பிஸ்கட்டுகள், கேக்குகள் முதலியனவும், பெண்கள் சிறையில் தயாரிக்கப்படும் சணல் பைகளும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த விற்பனை நிலையம் கோவை மத்திய பஸ் நிலையத்திற்கு எதிரே உள்ளதால், வெளியூர் செல்பவர்கள் இரு சக்கர வண்டிகள் நிறுத்திச் செல்லும் 'வண்டிகள் நிறுத்தமும்' செயல்படுகிறது.

கோவை மத்திய சிறையினுள் ஆடைகள் உற்பத்தி செய்யும் ஆலையும் செயல்படுகிறது. இதில் காக்கி உடைகள் தயாரிக்கப்படுகின்றன. தமிழகத்தின் காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர் அனைவருக்கும் இங்கேயே சீருடைத் துணிகள், தயாரிக்கப்படுகின்றன. மேலும் சிறை இல்லவாசிகளுக்கான சீருடைகள், போர்வைகள், விரிப்புகள் முதலியனவும் தயாரிக்கப்படுகின்றன.

கேள்வி : இங்கே வேலை செய்யும் சிறை இல்லவாசிகளை, அவர்களது உறவினர்கள் இங்கு வந்து சந்தித்துப் பேச முடியுமா?

பதில் : உறவினர்கள் இங்கே சந்திக்க அனுமதியில்லை. அவர்கள் சிறையில் முறைப்படி விண்ணப்பித்துத்தான் சந்திக்க முடியும். இங்கே கண்காணிப்புக் கேமராக்கள் உள்ளன. எனவே, முறையற்ற வகையில் யாரும் சந்திக்க இயலாது.

கேள்வி : சிறை இல்லவாசிகளுக்காக எதிர்காலத்தில் வேறு தொழில்கள் ஏதேனும் தொடங்கும் திட்டம் உள்ளதா?

பதில் : தற்போது உள்ளவற்றிலேயே ஆன்லைனில் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் திட்டம் உள்ளது. இங்கே உற்பத்தி செய்பவற்றை, வெளியே விநியோகம் செய்து வரும் நிறுவனத்தினர் உரியவர்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். மேற்கொண்டு ஏதேனும் செய்வது என்பது அரசு எடுக்கும் முடிவுகளைப் பொறுத்து அமையும்.

கேள்வி : இந்தத் திட்டம் இங்கே கொண்டுவரக் காரணமாக இருந்தவர் யார்?

பதில் : இது தமிழக அரசின் திட்டம். இது கொண்டு வரப்பட்டபோது இங்கே சிறைத்துறை அதிகாரியாக இருந்தவர் திரு. அசுதேவ் சுக்லா ஆவார்.

கேள்வி : சிறை இல்லவாசிகள் விடுதலை பெற்ற



பின் இதே பணியை வெளியே போய்ச் செய் வதற்கு ஆர்வத்துடன் இருக்கிறார்களா?

பதில் : நிச்சயமாக. தற்போதே அவர்கள் இப் பணியை முழு ஈடுபாட்டுடன் மகிழ்ச்சியாகச் செய் கிறார்கள்.

கேள்வி : பெட்ரோல் நிரப்புவதில் இவர்கள் அளவைக் குறைக்கும் வாய்ப்பு உள்ளதா?

பதில் : அதற்கு வாய்ப்பே இல்லை. அப்படிச் செய்து இவர்கள் பணம் ஈட்ட வழியில்லை. கணக் கில் குறைவோ, அதிகமோ செய்வதற்கு வாய்ப் பில்லாமல் கண்காணிக்க அதற்கென இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் ஓர் இயந்திரத்தை நிறுவி யுள்ளது. இதன் மூலம் இங்கு பெட்ரோல் வந்து டேங்க்கில் நிரப்புவதையும், விநியோகிப்பதையும் மும்பையிலுள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவன அலுவலகத்திலிருந்தே கண்காணிக் கிறார்கள். அதனால் கலப்படம் செய்வதோ, அளவில் குறைபாடுகள் செய்வதோ இயலாது.

மேலும், இங்கு வரும் வாடிக்கையாளர் களிடம் இப்பணியாளர்கள் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ள இயலாது. எப்போதும் கண் காணிப்புக் கேமராவில் அனைத்து நிகழ்வுகளும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. இங்கு வண்டி களுக்குக் காற்று நிரப்புவதற்குக் காசு வாங்க மாட்டார்கள். பெட்ரோல் நிரப்பும் அளவு சரியாக இருப்பதால்தான் வாடிக்கையாளர்களிடையே இந்தப் பெட்ரோல் நிலையத்திற்கு நல்ல பெயர் கிடைத்திருக்கிறது. வாடிக்கையாளர்கள் தொடர்ந்து இங்கு வருகிறார்கள்.

கேள்வி : சிறை இல்லவாசிகளான பெண்களுக்கு இம்மாதிரி வேலைவாய்ப்புகள் உள்ளனவா?

பதில் : பெண் சிறை இல்லவாசிகளை வெளி வேலைகளுக்கு அனுப்புவதில்லை. அவர்களுக் குச் சிறைச்சாலையின் உள்ளேயே வேலைகள் தரப்படுகின்றன. சணல் பைகள், கைப் பைகள், நாப்கின்கள் தயாரித்தல், தையல் வேலை முதலி யன செய்கிறார்கள். பெண் சிறை இல்லவாசி களை வெளி வேலைக்கு அனுப்பக்கூடாதென்று சிறைத்துறை விதிகள் உள்ளன."

சிறைச்சாலையின் அடிப்படைக் கொள்கையே, சிறைப்பட்டோரை நல்வழிப்படுத்துவது, தொழில் கற்றுக் கொடுப்பது, திரும்பவும் சமூகத்தில் இணைந்து வாழ்வதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது ஆகிய மூன்று. அதன்படி இந்தப் பெட்ரோல் விற்பனை மற்றும் பொருள்கள் விற்பனைப் பணிகள் சிறை இல்லவாசிகளுக்கு ஒரு வரமாக அமைந்துள்ளன.

பேட்டி : **இரா. வேணுகோபாலகிருஷ்ணன்**

வாசகர் கழதம்

'**ஓ**ம் சக்தி' ஆகஸ்டு இதழ் அட்டையில், காஞ்சி அத்திவரதரின் அற்புத தரிசனம் அருமையாக இருந்தது. அத்தி வரதரைப் பற்றிய அரிய தகவல்களும் வியக்கும்படி இருந்தன.

– **ஏ. பாஸ்கர்,** சேலம்.

'**அ**த்தி வரதரின் அற்புத தரிசனம்' கட்டுரையில் அத்தியையும், வரதரையும் நேர்த்தியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ராபர்ட் கிளைவ் அத்தி வரதரைத் தரிசித்தது அரிய செய்தி.

– **மு. அங்கமுத்து,** இடைப்பாடி.

'**கி**ரீமிலேயர்' இட ஒதுக்கீடு பற்றி 'சுரங்கம்' பகுதியில் வெளியாகியுள்ள அருட்செல்வரின் கருத்துக்கள் வரவேற்கப்பட வேண்டியவை. உச்ச நீதிமன்றம் இவற்றைக் கவனித்து நல்ல தீர்ப்பை வழங்க வேண்டும்.

– **வரதன்,** திருவாரூர்.

ஆகஸ்டு மாத 'ஓம் சக்தி' இதழில் வெளியாகியிருந்த 'தீவினை மாற்றும் திருமந்திரம்' கட்டுரையின் ஆரம்பமே அருமையாக இருந்தது. கட்டுரையாளர் சொ.சொ.மீ. சுந்தரம் பாராட்டப்பட வேண்டியவர்.

– **அ. முரளீதரன்,** மதுரை.

வேத வடிவில் இராமாயணம் வழங்கியவர் 'வால்மீகி' என்றால், வெண்திரையில் தத்ரூபமாகக் கண்ணுற வைத்தவர் ஏ.பி. நாகராஜன் எனில் மிகையில்லை. ஏ.பி.என். பற்றி அருமையான படைப்பை வழங்கியிருந்தார் கோ. எழில்முத்து.

– **எஸ்.ஜி. இசட்கான்,** திருப்பூர்.

பொள்ளாச்சி வாமனன் படைத்திருந்த 'முள் மூஞ்சிக்காரி' சிறுகதை, படிப்பவர் மனத்தைக் கவரும் என்பதில் சந்தேகமில்லை. தலைமையாசிரியையின் பாத்திரப் படைப்பு சிறப்பு.

– **முத்து. வள்ளிமயில்,** திருமங்கலம்.

வெள்ளித்திரை இயக்குநர் ஏ.பி. என். பற்றிய கட்டுரையும், டாக்டர் க. பழனித்துரையின் 'குடிமக்களா, குடி படைகளா' எனும் கட்டுரையும் மிகச் சிறப்பாக இருந்தன. கட்டுரையாசிரியர்களுக்குப் பாராட்டுகள்!

– **ப. மூர்த்தி,** பெங்களூரு.

'**வா**ஸ்து சாஸ்திரம்' கட்டுரை நல் ஆலோசனை. வீடு கட்டுவோர்க்கான அனைத்து மனை சாஸ்திர நுட்பங்களையும் வழங்கியுள்ள கட்டுரையாசிரியருக்கு நன்றி!

– **த. நாகராசன்,** சிவகாசி.

எஸ். ஸ்ரீதுரை படைத்திருந்த 'கண்ணொளி அருளும் எம்பார்' கட்டுரை, ராமானுஜரின் சீடரான எம்பார் எனும் மகா புண்ணியவானின் வரலாற்றினை நன்கு எடுத்துரைத்திருந்தது.

– **இரா. வளையாபதி,** தோட்டக்குறிச்சி.

உழவனின் உயர்வையும், உழைப்பையும் உயர்த்திக் காட்டும் தங்கமகனின் 'உ(ப)யிர் வளர்ப்பு' கவிதை ஆழமான பொருளோடு அருமையாக இருந்தது.

– மேலை. **தமிழ்க்குமரன்,** மேலைச்சிவபுரி.

'**போ**தும் திரும்பி வாருங்கள்' என்ற கவிஞர் புவியரசுவின் கட்டுரை, அருமையான வாழ்க்கை நலப் படைப்பு. படைத்த கவிஞருக்கும், வெளியிட்ட 'ஓம் சக்தி'க்கும் பாராட்டும், வாழ்த்தும் உரித்தாகுக!

– **ப. மணிமேகலை,** தேவகோட்டை.

வடலூர்ப் பெருமானின் வாழ்க்கைப் போதனைகளான 43 கருத்துகளும் இன்றைய நடைமுறைக்குப் பொருத்தமான கருத்துகள்.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.

'**கை**ம்மாறு' கதை, எம் போன்று பென்சன் பெறுபவர்களுக்கு ஒரு பாடமாக உள்ளது. பென்சனும் ஒரு 'சன்' தான் என்பதை முதுமையில்தான் உணர முடிகிறது. கதாசிரியர் பாஞ்சசன்யா பாராட்டுக்குரியவர்.

– **என். ஆர். ஜெயசந்திரன்,**
காவேரிப்பட்டணம்.


LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கண்டிஷ்னர், வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.
Easy Finance Options BAJAJ Finance
Exchange offer
Gift Coupons Available
*Free gift with every purchase
*Free delivery with in city Limits
Open on Sundays
வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!
NM
*For purchase above RS.8000/- condition apply
LG
SAMSUNG
SONY
PHILIPS
ONIDA
Godrej
Whirlpool
SIEMENS
IFB
VIDEOCON
Prestige
ELGI ULTRA
Preethi
V-GUARD
BOSCH
micromax
VOLTAS LIMITED
Butterfly
TATA Sky
CG Crompton Greaves
USHA
HAVELLS
BPL EMERGENCY LIGHT
Preethi INDUCTION COOK TOP
EUREKA FORBES Your friend for life
CASCADE
VENUS WATER HEATER
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

ஒரே... ஒரே... ஒரே...

விவாதக் கடிதங்களில் சில... சில... சில...

இந்தியா ஒரு பரந்த, விரிந்த நாடு. பல்வேறு இன, மத, மொழிகள் கொண்ட பன்முக மக்கள் வாழும் நாடு. இதில் ஒரே தேர்தல், ஒரே ரேஷன் கார்டு, ஒரே ஆதார் கார்டு என்ற முழக்கமெல்லாம் ஒத்து வராத ஒன்று. இதை அமல் படுத்தினால், ஜனநாயக மானது படுகுழி தோண்டி, அதில் புதைக்க வேண்டியது ஒன்றுதான், 'ஒரே' என்ற வார்த்தை. இதை நம் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மக்கள் தேவைகள் மாண்டு போய்விடும். சர்வாதிகார ஆட்சி மலர்ந்துவிடும். நம் உதடுகளில் 'ஒரே' என்ற வார்த்தையை முணுமுணுக்கக்கூடாது.

– **சு. இலக்குமணசுவாமி,** மதுரை.

அன்று இந்திரா காந்தியின் எதேச் சதிகாரத்தை எதிர்த்த ஜெயப்பிரகாஷ் நாராயணன் 'விநாச காலே விபரீத புத்தி' என அடிக்கடி கூறுவார். அந்தச் சுலோகத்தை மோடி அவர்கள் மனதி லெண்ணி இந்த ஒரே, ஒரே, ஒரேக்கு ஒரேயடியாக முழுக்குப் போட வேண்டு மென்று வேண்டுவோம்.

– **இரா. கல்யாணசுந்தரம்,** மதுரை.

ஒரு காலத்தில் பேருந்துகளுக்கும், சரக்கு உந்துகளுக்கும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனி ரூட் பெர்மிட் முறை இருந்தது. முன்னாள் முதலமைச்சர் காமராஜர் மாநிலம் முழு மைக்கும் ஒரே பெர்மிட் முறையை அமல்படுத்தினார். பின்னர் இந்தியா முழுமைக்கும் 'ஆல் இந்தியா பெர்மிட்' முறை வந்தது. அதுபோல உத்தியோகம், வியாபாரம், தொழில் முதலியவற்றிற்கு மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந் தோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. அவர்களுக்கு 'ஒரே ரேஷன் கார்டு' முறை தேவை. தனி மனி தனை இந்தியா முழுமைக்கு அடை யாளம் காண ஆதார் கார்டு. எனவே, 'ஒரே, ஒரே, ஒரே' என்பது வீட்டிற்கும் நல்லது, நாட்டிற்கும் நல்லது.

– **த. நாகராஜன்,** சிவகாசி.

தேர்தலில் பெரும்பான்மையுடன் வென்று ஆட்சியில் அமர்ந்த பிரதமர் மோடி நல்லதே செய்வார். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களைக் காப்பார். இருந்தாலும், மகாத்மா காந்தி யின் கொள்கைப்படி நடப்பதே நல்லது. இந்திக்கு முக்கியத்துவம் கொடுப்பது போல், மாநில மொழிகளுக்கும் முக்கி யத்துவம் தரவேண்டும்.

– **தி.ஈ.தி. ஈசுவர் மூர்த்தி,**
திருவில்லிப்புத்தூர்.

மக்கள் அளித்துள்ள அசுர பலத் துடன் கூடிய மெஜாரிட்டியை பா.ஜ.க.–வின் மத்திய அரசு ஆக்கப் பூர்வமான செயல்களுக்குப் பயன் படுத்திவிட்டு, இயற்கைக்கு விரோத மான ஒரே, ஒரே கோஷத்தினைக் கையி லெடுத்து ஆட்டம் போடுவது நாட்டின் துரதிருஷ்டம் என்றே சொல்லலாம்.

– **இரா. வளையாபதி,**
தோட்டக்குறிச்சி.

வீட்டுக்கு வீடு வாசல்படி போன்று எவ்வளவோ உள்ளன. அந்த அடிப் படையிலேயே இந்த ஒரே, ஒரே, ஒரே...வை நோக்க வேண்டும். சிலவற் றுக்கு இது பொருந்தும்படியாக இருந் தாலும், பலவற்றுக்கு ஏற்புடையதா காது. இப்போது ஒரே தேசம், ஒரே அட்டையை ஆந்திரா, தெலுங்கானா, மகாராஷ்டிரம், குஜராத்தில் நடை முறைப்படுத்தியிருக்கிறார்கள். இதன் விளைவினைப் போகப் போகத்தான் காண முடியும். நாடாளுமன்றத்தில் தனி பலம் இருக்கிற தைரியத்தில் செயல் படுவதை மற்றவர்கள் கட்டுப்படுத்து வதற்குள், தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்வது கட்சிக்கும், ஆட்சிக்கும், நாட்டுக்கும் நல்லது.

– **வரதன்,** திருவாரூர்.

ஒரே! ஒரே! ஒரே! தொடர்பாக இதழில் நான்கு பக்கங்களில் வெளி யிடப்பட்டுள்ளவற்றை நான் வழி மொழிந்து முழுமையாக அங்கீகாரம் செய்கிறேன்.

– **ப. மூர்த்தி**, பெங்களூர்.

இந்தியா பல மதங்கள், பல இனங் கள், பல மொழிகள், பல்வேறு பண்பாடு கள் கொண்ட ஒரு மாபெரும் நாடு. இன்றைய பா.ஜ.க. அரசு நாட்டை ஒரு மதம், ஓர் இனம், ஒரு மொழி, ஒரே பண்பாடு என உருவாக்க நினைக்கிறது. இச்செயல் நாட்டு மக்களிடையே கொந் தளிப்பைத்தான் ஏற்படுத்தும். ஒரு மொழி என்ற கோட்பாடு, ஐந்தாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த நம் தமிழ் மொழியை மெல்ல, மெல்ல அழித்து விடும். முழு பலத்தோடு நாட்டை ஆளும் பா.ஜ.க. அரசு, ஒரே, ஒரே, ஒரே என்ற பாதையில் சென்றால், அது விபரீதங்களுக்கு வித்திடும்.

– **தி. குமாரராஜா,**
உடுமலைப்பேட்டை.

ஏற்கனவே இந்தியா வகுத்திருந்த சட்ட திட்டங்களுள் குறைபாடுகள் இருப்பது அறியவர, அவற்றை ஆய்ந்து, விவாதப் பொருளாக்கி முறையான தீர்வு காண்பதே சிறப்பாகும். அரசி யலோ, மதமோ, இன்ன பிறவோ எது வாயினும், மனிதமும், மனிதாபிமான முமான அடிப்படையில்தான் அமைய வேண்டும். சுதேசியைப் பேசிக் கொண்டே விதேசியைப் பின்பற்றுவது முரண்பாடாகவே உள்ளது. விவே கானந்தரை முதன்மைப்படுத்திய மைய அரசு, அவரது எண்ணங்கள் கொண்ட இந்தியாவாக்க முன்வர வேண்டும்.

– **எஸ். ஜி. இசட்கான்,** திருப்பூர்.

ஒரே, ஒரே, ஒரே. ஒரே அடியாக ஒதுக்க வேண்டிய கொள்கை! ஒற்றை வரிப் பாராட்டு – கருத்துக்களின் கர்ஜனை!

– **சீத்தலைச் சாத்தன்,** திருப்பத்தூர்.

பல மதங்கள், பல கடவுள்கள், பலவித வழிபாடுகள், பல மொழிகள், பல இனத்தவர்கள், பல வகையான உடைகள், உணவுகள், பழக்கவழக்கங் கள் கொண்ட மக்களைக் கொண்டது நம் நாடு. இதைக் குலைக்கும்படியாக ஒரே நாடு, ஒரே மொழி முதலிய சித்தாந்தம் மக்களுக்கு எதிரானதும், சுதந்திரத்தைப் பறிப்பதுமாகும். இத னால் மக்களிடையே குழப்பத்தையும், சச்சரவுகளையும், அச்சத்தையும் ஏற் படுத்தும். ஆகவே, பிரதமர் இவ்விஷயத் தில் பொறுமையுடனும், கவனமுடனும் செயல்படுவது நல்லது.

– **மு. கணபதி,** பெருந்துறை.

பலதரப்பட்ட மக்களினம் கொண்ட இந்தியாவில் ஒரே, ஒரே, ஒரே என்பது ஓரங்கட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த ஒரேதான் வேண்டும் என்றால், அது சர்வாதிகாரப் போக் காகவே முடியும்! உதாரணமாக, தற்

போது ஒவ்வொரு நாள் காலை 6.55 மணிக்கு 5 நிமிடம் சமஸ்கிருதத்தில் செய்தி கூறப்படுகிறது ஏன்? அது என்ன பெரும்பான்மை யான மொழியா? உத்தர கண்ட் மாநிலத்தில் இருபதா யிரம் மக்கள் மட்டுமே கொண்டாடும் அதை, ஒட்டுமொத்த இந்திய மக்கள் கேட்குமாறு செய்வதே சர்வாதிகாரச் சாயல்தானே! இந்த விவகாரத்திலேயே பிரிவினைவாதம் தலை தூக்கும் நிலை உள்ளதால், ஒரே இந்தியா எப்படிச் சாத் தியமாகும்?

– தெ. முருகசாமி,
புதுச்சேரி.

ஒரே என்ற இரண்டெ ழுத்து எல்லாவற்றிற்கும் பொருந்தவே பொருந்தாது. ஐந்து விரல்களும் ஒரே அளவு நீளம் இருந்தால் நாம் எப்படி உணர்வோம். இப்பொழுது போல வேகமாக எந்தச் செயலையும் செய்யவே முடியாது. அது போலத்தான் ஒரே குடும்ப அட்டை இந்தியா முழுவதும் என்றால், அதைச் சரிவர நிர்வகிக்க முடியாது. ஒரே மதம், ஒரே கடவுள் என்பது எப்படி வர முடியாதோ, அது போல ஒரே என்ற இந்த வார்த்தையினை எல்லாவற்றிற்கும் பயன்படுத்த முடியாது.

– உஷா முத்துராமன்,
திருநகர்.

ஒரே! ஒரே! ஒரே! என்ற வார்த்தையை அகராதியில் எடுத்துவிட வேண்டும். ஒரே

திரு. மன்மோகன் சிங் முன்னுதாரணமாக இருக்க வேண்டாமா...?



முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங், ஒருமுறை கூட நாடாளுமன்றத் தேர்தலில் போட்டி யிடாதவர். ஒவ்வொரு முறையும் ராஜ்யசபா உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவர். அவர் நிதியமைச் சராகவும், பிரதமராகவும் இருந் தவர்.

திரு. மன்மோகன்சிங் சிறந்த பொருளாதார நிபுணர். பொறுப் போடு பேசக்கூடியவர். திருமதி இந்திரா காந்தி கொலையால் சீக்கிய சமயத்தார் ஆயிரக்கணக்கானோர் டெல்லியில் கொலை செய்யப்பட்ட பிறகும், காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகாதவர். காங்கிரஸ் தலைவர் சோனியாவின் மிகுந்த நம்பிக்கைக்குப் பாத்திரப்பட்டவர். ஒரு வகையில் இளைஞர் ராகுல் காந்தியை உருவாக்கியதில் இவருடைய பங்களிப்பும் உள்ளது.

இருதய அறுவைச் சிகிச்சையைச் செய்துள்ளவர். பூரண ஆரோக்கியத்தோடு இருந்தாலும், வயது காரணமாக அவருக்கு ஏற்படுகிற தளர்ச்சியை நாம் மறக்கலாகாது.

இந்தப் பின்புலத்தில் 2019-இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கட்சி, 75 வயது நிரம்பிய வயதானவர்களைத் தங்கள் கட்சி வேட்பாளர்களாகப் போட்டியிட அனுமதிப்பதில்லை என்று கொள்கை முடிவெடுத்தது.

அதன்படி, 80 வயதைக் கடந்த திரு. எல்.கே. அத்வானிஜி, முரளி மனோகர் ஜோஷிஜி, அதேபோல மேனாள் நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா ஆகியோருக்கு பா.ஜ.க. கட்சி தேர்தலில் போட்டி யிட வாய்ப்புத் தரவில்லை.

இதேபோல காங்கிரஸ் கட்சியில் 75 வயது கடந்த முதிய அரசியல்வாதிகளுக்குத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பைக் காங்கிரஸ் கட்சி தருவதில்லை என்று ஏனோ அறிவிக்கவில்லை.

காங்கிரஸ் கட்சியே அறிவிக்காவிட்டாலும், மூத்த காங்கிரஸ் தலைவர்கள் இதைப்பற்றிச் சிந்தித்திருக்கலாம். அப்படிச் சிந்திக்கக் கடமைப்பட்டவர்களில் ஒருவர் உண்டென்றால், அவர் வேறு யாருமல்ல, முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங்தான்.

அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து ராஜ்யசபைக்கு அவர் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போன பிறகும், ராஜஸ்தான் மாநிலத்தில் போட்டியிட மனுச் செய்திருக்கிறார் என்றால், அவரல் லவா இதைத் தவிர்த்திருக்க வேண்டும்.

– ந.நி.

மதம், ஒரே கல்வி, ஒரே உணவு என்று முயற்சி செய்தால், தேசம் அழிவின் விளிம்பில் செல்லும். ஆயிரக்கணக் கான மொழிகள் கலந்து பேசும் நாட்டில் ஒரே மொழியைப் பேச வைக்க முடியாது. ஒவ்வொரு மதமும் அவரவருக்குட்பட்ட தெய்வங்களைக் கும்பிட்டு வருகிறார்கள். ஒரே மதத்தின் கீழ் எப்படி வர முடியும்? எனவே, ஒரே என்ற தவறான கொள்கையை மக்களிடையே பிரச்சாரம் செய்வது வீண் வேலை.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.

ஒரே, ஒரே, ஒரே என்பது ஒரேயடி யாக இந்தியாவை அழிக்கும் தீச்சொல் லாகும். தனிப்பெரும்பான்மை இருக் கிறது என்கின்ற ஒரே காரணத்தால் நினைத்ததையெல்லாம் திணிக்க முற் பட்டால், வெடித்துச் சிதறும் நாடு என்பதில் ஐயமில்லை. ஒரே கட்சி, ஒரே மொழி, ஒரே ரேஷன் கார்டு என்றால், ஒரே நாடு என்பது இல்லாமலே போகும்.

– **புலவர் கருமலைத் தமிழாழன்,**
ஒசூர்.

பிரதமர் மோடியின் 'ஒரே' முழக்கம் எங்கே கொண்டு போய் விடுமோ என்று நினைக்கவே அச்சமாக இருக்கிறது. ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே கல்வி இதுபோல் தொடர்ந்தால், ஒரே நாடு, ஒரே மதம், ஒரே கட்சி, ஒரே ஆட்சி என்றாகிச் சர்வாதிகாரம் மேலோங்கி ஜனநாயகம் அழிந்து போகும். இந்திய தேசம் சின்னாபின்னமாகிப் பேரழிவைச் சந்திக்க நேரிடும். அரும்பாடுபட்டுப் பெற்ற சுதந்திரம் பயனற்றுப் போகும். இந்தியாவின் பாரம்பரியம் பாழ்பட்டு, மேன்மை குன்றும். பிரதமர் மோடி, தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும்.

– **உ.மு.ந. ராசன் கலாமணி,**
கோபிசெட்டிபாளையம்.

வேற்றுமையில் ஒற்றுமை என்பது தான் இந்தியாவின் வெற்றி, பெருமை, பலம் எல்லாமே. அதற்குப் பங்கம் வருமானால், நாடு துண்டாடப்படுவ தற்கும் வாய்ப்புகள் உண்டாகிவிடும். அதீதப் பெரும்பான்மை இருக்கிறது என்பதற்காக எந்தவொரு செயலையும் திட்டத்தையும் நிறைவேற்ற முனைந் தால், விளைவுகள் விபரீதம் ஆவதற்கும் வாய்ப்புகள் அதிகம். ஒரே, ஒரே, ஒரே என்ற மந்திரத்தைத் தேவையான நேரத்தில், தேவையான அளவு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அப்படி யில்லை என்றால், நாளடைவில் ஜன நாயக விரோதப் போக்காகவும், எதேச்சதிகாரத்தின் வெளிப்பாடாகவும் ஆகிவிடும். நாடு துண்டாடப்படும். அந் நிலைக்கு இந்தியா ஆளாகிவிடக் கூடாது.


– **மேலை. தமிழ்க்குமரன்,**
மேலைச்சிவபுரி.

இப்போது மத்திய அரசுக்குச் சவாலாக எத்தனையோ பிரச்சனைகள். நீர்ப் பற்றாக்குறை, போக்குவரத்து, வேலைவாய்ப்பு, நிதிப் பற்றாக்குறை, அண்டை நாடுகளின் அச்சுறுத்தல், உணவுப் பற்றாக்குறை என எத் தனையோ பிரச்சனைகள் உள்ள நிலை யில், அசுர பலத்தின் மூலம் எதையும் சட்டமாக அமல் செய்ய எண்ணினால், விளைவுகள் விபரீதமாகும். மக்கள் கொந்தளிப்பார்கள். உள்நாட்டுக் கலகம் ஏற்படும். எனவே, ஒரே! ஒரே! ஒரே! என்ற முழக்கம், முழக்கமாகவே இருக் கட்டும். அதைச் செயல்படுத்தக் கூடாது.

– **என். ஆர். ஜெயசந்திரன்,**
காவேரிப்பட்டணம்.

கட்டுரை

வலுவான மத்திய அரசால் வளர்ச்சி உண்டா?



எம்.சி. சிவசுப்பிரமணியன்

இதுவரை இந்தியாவில் இத்தனை பலமான அரசு இருந்ததில்லை. பல புதிய முயற்சிகள், பல உறுதியான முடிவுகள் – இவை யாவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவவில்லை.

இந்த வேளையில் உங்களுக்குச் சில உதாரணங்களைக் காட்ட விரும்புகிறேன்.

சீன நாடு சுதந்திரம் அடைந்த உடன் அந்த நாடு மிகவும் பலமான சர்வாதிகாரியான மா–சே–துங் என்பவரிடம் இருந்தது. ஆனால் விளைவு, நாடு பொருளாதார வளர்ச்சி அடையவில்லை. மாறாக, கலாச்சாரப் புரட்சி என்ற பெயரில் கோடிக்கணக்கான மக்கள் இறந்து பட்டார்கள்.

சற்று மேற்கே வாருங்கள். கம்யூனிஸ்ட் சித்தாந்தச் சிற்பி ஸ்டாலின் தலைமையில் ரஷ்யாவில் சில மிலிட்டரித் தளவாடங்கள் செய்து குவித்தார்கள். ஆனால் நாடு உருப்படவில்லை. கோர்பச்சேவ் என்ற கடைசிக் கம்யூனிஸ்ட் தலைவர் சர்வாதிகார ஆட்சியை ஒப்படைத்து விட்டு இறங்கிவிட்டார்.

வேடிக்கையைக் கேளுங்கள். தலைவர்கள் செய்ய முடியாததை அமெரிக்காவின் கொக்கோ கோலாவும், ஜீன்ஸ் பேண்ட்டும் சாதித்தன என்பார்கள் ரஷ்யாவில்.

இன்றும் பாருங்கள், ஹோ–சி–மின் என்ற பெரிய பலமான தலைமையில் வியட்நாம் முன்னேறவில்லை. பின்னர் முன்னேறியது. இப்படியாகக் கணக்கெடுத்தால் ஓர் உண்மை விளங்கும். பலமான அரசியல் தலைமை மாத்திரம் வளர்ச்சியைக் கொண்டு வராது என்பதுதான்.

ஏன், நம் நாட்டையே எடுத்துக் கொள்வோம். பலமான மனிதர் ஜவஹர்லால் நேரு தலைமையில் நாடு ஏதோ கொஞ்சம் வளர்ச்சி கண்டது. ஆனால் அது வெறும் கனவுக் காட்சிதான்.

விருப்பு, வெறுப்பு இல்லாமல் பார்த்தால், இந்தியா என்ற பெரிய நாடு, நரசிம்மராவ் என்ற ஒரு சாதாரண மனிதர் தலைமையில்தான் புரட்சிகரமான மாறுதல்களைச் சந்தித்தது. இன்று நடக்கும் பொருளாதாரம் அவர் தொடங்கியதுதான்.

சீனாவைப் பாருங்கள். மா–சே–துங் இறந்த பிறகு, எக்ஸ் பிங் யாங் என்ற ஒரு சாதாரண மனிதன் தலைமையில்தான் அந்த நாடு வேக நடை போடத் தொடங்கியது. இன்று அமெரிக்காவை மிஞ்சும் அளவிற்கு வளர்ந்துவிட்டது.


ஆக, பலமான அரசால் மாத்திரம் வளர்ச்சியைக் கொண்டுவர முடியாது.

மோடி அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. ஆனால், வளர்ச்சி என்பது குறைந்துவிட்டது. முதல் ஐந்தாண்டுக் காலத்தில் எந்த ஒரு விசேஷமான சாதனையையும் பார்க்க முடியவில்லை.



இரண்டாம் முறை தேர்ந்தெடுக்கப்பட்டு மோடி அரசு பல சட்டங்களைத் திருத்திப் பல முயற்சிகளை எடுத்தும் வளர்ச்சி கூடாமல், குறைந்துவிட்டது. ஏன்?

இதோ ஒரு சில புள்ளி விபரங்கள் : இந்திய நாணயமான ரூபாய், ஆறு வருடங்களில் இல்லாத அளவுக்கு உலக மார்க்கெட்டில் மதிப்பிழந்துவிட்டது.



கம்பெனிகளின் பங்கு மார்க்கெட் விலை ரூ. 15 லட்சம் கோடி குறைந்து விட்டது. தீபாவளித் தேவைக்கு ஆர்டர் கொடுக்கும் பெரும் சில்லறை வர்த்தகர்கள் இந்த ஆண்டு குறைவாகவே ஆர்டர் கொடுத்தமையால், உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தி இலக்கில் 10 முதல் 15 சதவிகிதம் குறைத்துவிட்டார்கள்.

டெலிபோன் துறையில் தொடர்ந்து வேக வளர்ச்சி கண்ட காலம் போய்விட்டது. அன்று 16 நிறுவனங்கள் இருந்தன. அவற்றில் 11 நிறுவனங்கள் திவாலாகிவிட்டன. மீதி 5–இல் இரண்டு கடைசிக்கட்டத்தில் உள்ளன. மீதி மூன்றிலும் ஒன்றுதான் உருப்படி. மற்ற இரண்டும் வெறும் நட்டத்தில் காலத்தைக் கழிக்கின்றன.

முன்னேறிய நாடுகள் வரிசையில் இருந்த இந்தியா, இன்று கீழே தள்ளப்பட்டு ஏழாவது இடத்தில் இருக்கிறது.

மேலே சொன்ன டெலிபோன் துறையில் பெரும் மாற்றத்தை விளைவித்துக் கொண்டிருக்கும் 5 ஜி என்ற தொழில்நுட்பம் மற்ற நாடுகளில் சக்கைப் போடு போட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் அது இந்தியாவிற்குள் நுழையவே இல்லை. இதற்கிடையில் இந்தத் துறையில் உலகிலேயே இரண்டாவது நாடு.

இதோ ஒரு சில ஆசிய நாடுகளின் அசுர வளர்ச்சி :

தென்கொரியா 1965–இல் சராசரி வருமானம் $700. 1996–இல் $16230. சீனா 1993–இல் $530. 2008–இல் $2720. மேற்கண்ட நாடுகளின் வளர்ச்சி விகிதம் 10% ஆகும்.

இந்தியாவில் மோட்டார் கார்களின் விற்பனை பெருமளவு சரிந்துவிட்டது. மாருதி கார் 20 முதல் 25 சதவிகிதம் வரை விற்பனை குறையவே, தன் உற்பத்தியை ஒரு ஷிப்ட்டாக்கிவிட்டது. விளைவு, பலர் வேலை இழந்துவிட்டனர்.

வங்கிகளின் வியாபாரம் மிகவும் குறைந்துவிட்டது. சில்லறைக் கடன்கள் துறை சரிந்துவிட்டது. வீட்டு வசதிக் கடன்கள் குறைந்தமையால், ரியல் எஸ்டேட் வியாபாரம் படுத்துவிட்டது. விளைவு, பல லட்சம்பேர் வேலை இழந்து விட்டார்கள். இது போல் மற்ற துறைகளும் பாதிக்கப்பட்டுக் கிடக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துவிட்டது.

ஆக, வளர்ச்சி என்ற ஒரு பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்திவிட்டு, வளர்ச்சி குறைந்து கொண்டே போனால், மக்கள் என்ன முடிவுக்கு வருவார்கள்?

முதலீட்டை ஏற்படுத்தி வளர்ச்சி

யைத் தூண்டிவிடப் பல முயற்சிகள் எடுத்தும், பலன்கள் எதிர்பார்த்த மாதிரி இல்லை. அதிகாரிகள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி விட்டோம். இனி ‘வளர்ச்சியோ வளர்ச்சி’ என்று கூவினாலும் வெளிநாட்டார் முதலீடு செய்யப் பயப்படுகிறார்கள். காரணம், உண்மையிலேயே எந்த ஒரு மாற்றமும் அதிகார வர்க்கத்தார் மத்தியில் ஏற்படவில்லை என்பதுதான்.

இதற்கிடையே பிரதமர் மோடி இன்று 2.7 டிரில்லியன் டாலர் பொருளாதாரம், 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்று சொல்லிக் கொண்டு வருகிறார்.

ஆக, நாம் வளர்ச்சிக்கு அரசே தான் காரணம் என்று நினைப்பது தவறு. அரசு சில வசதிகள் செய்து கொடுக்கலாம். தொழில் முனைவோர் வர வேண்டுமே!

நாடு வளரப் பல பேர் பல அறிவுரைகளை வழங்கி வருகிறார்கள். அவர்கள் கூடச் சேர்ந்து நாமும் சிலவற்றைக் கூறலாம்.


நேருஜி


பி.வி. நரசிம்ம ராவ்


பிரதமர் நரேந்திர மோடி

வளர்ச்சிக்கு யார் தேவை?

இரண்டாவது உலகமகா யுத்தத்தில் இங்கிலாந்தின் வெற்றிக்குப் பிரதமர் சர்ச்சில் காரணமாக இருந்தார். நாடு முழுவதும் அவரைப் புகழ்ந்தது. அதன் பின்னர் நடந்த இங்கிலாந்துப் பொதுத் தேர்தலில் சர்ச்சில் கன்சர்வேட்டிவ் கட்சி சார்பிலும், அவரை எதிர்த்துத் தொழிற் கட்சி சார்பில் அட்லியும் போட்டியிட்டனர்.


அட்லி

உலகம் முழுவதும் சர்ச்சில்தான் வெற்றி பெறுவார் என்று நம்பியது. ஆனால், அட்லிதான் வெற்றி பெற்றார். காரணம், இங்கிலாந்து மக்கள், “எங்கள் நாடு யுத்தத்தில் வெற்றி பெற வேண்டுமானால், அதற்கு சர்ச்சில் தேவை. பொருளாதார வளர்ச்சியில் வெற்றி பெற வேண்டுமானால், அதற்குத் தேவை சர்ச்சில் அல்ல; பிரபு அட்லிதான்” என்றார்களாம்.

உள்நாட்டு வியாபாரத்தைவிட, உலக மார்க்கெட்டைக் குறி வைக்க வேண்டும். அதற்குண்டான சூழ்நிலையை அரசு செய்து தர வேண்டும்.

தொழில் முனைவோர் வங்கிகளை நம்பி ஏராளமான கடனை வாங்கக் கூடாது. மற்ற முறைகளைக் கையாள வேண்டும்.

கல்விப் பருவத்தை முடித்து, அடுத்த கட்டத்தில் நுழையும் இளைஞர்களுக்குப் போதுமான திறன் பயிற்சி கொடுக்க வேண்டும். கல்வித் துறையும் சீரமைக்கப்பட வேண்டும்.

அபரிமிதமான வேலைவாய்ப்புகளைக் கொடுக்கும் துறைகள் – ஜவுளித்துறை, கட்டடத் தொழில், சுற்றுலாத்துறை இன்னும் ஐ.டி. முதலிய துறைகள். இந்தத் துறை களுக்குப் போதுமான வசதிகள் செய்து தர வேண்டும். நிறைய வேலை வாய்ப்புகளைத் தரும் துறைகள் இவைதாம்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக இருப்பது விவசாயம். அந்தத் துறை எப்பொழுதும் நோய்வாய்ப்பட்டுத்தான் இருக்கிறது. இந்தத் துறையை நிபுணர்கள்தான் கவனிக்க வேண்டும்.

பெருவாரியான தொழில்கள் மற்றும் வருமானம் இவற்றை நகர்ப்புறங்களே தருகின்றன. இந்த நகர்ப்புறங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். ஆலமரத்திற்குக் கீழே எந்தச் செடியும் வளராது என்பார்கள் நமது கிராமப்புறங்களில் – சிந்திக்க வேண்டும். ●

கட்டுரை

ராஜராஜனை குற்றவாளிக் கூண்டில் ஏற்றலாமா?

சோழப் பேரரசன் ராஜராஜன் தற்போது அதிகம் விவாதிக்கப்படும் நபராக மாறியிருக்கிறார். வர்ணாசிரம தர்மத்தை நிலைநிறுத்தினார். தேவதாசி முறையை நிறுவனப்படுத்தினார். தீண்டாமையும் அவர் ஆட்சிக் காலத்தில் இருந்தது. சூத்திரர்களிடம் நிலத்தைப் பறித்தார். அதே சமயம் பார்ப்பனர்களுக்கு நிலதானம் வழங்கினார் என ராஜராஜன் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப் படுகின்றன. இப்படிப்பட்டவரின் ஆட்சிக் காலம் எப்படிப் பொற்காலமாகும்? இன்று இப்படியெல்லாம் கேள்வி எழுப்பப்படுகிறது.

ஒரு காலத்தில் நடந்த நிகழ்வுகளை



அக்காலப் பின்னணியுடன் பார்க்க வேண்டும். அக்கால நிகழ்வுகளை இக் காலப் பின்னணியுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது.

எடுத்துக்காட்டாக, திருக்குறளையே எடுத்துக் கொள்வோம். ‘கண்டதுமன்னும் ஒருநாள் அலர்மன்னும் திங்களைப் பாம்பு கொண்டற்று’ என்கிறார் வள்ளுவர். நான் காதலரைக் கண்டது ஒருநாள்தான். அதுவோ நிலவைப் பாம்பு விழுங்கியதுபோல இந்த ஊர் எங்கும் பரவிவிட்டது.

நிலவைப் பாம்பு விழுங்குதுபோல் என்பதை இன்றைய அறிவியலோடு பொருத்திப் பார்த்தால், வள்ளுவனுக்குக்கூட மூடநம்பிக்கை இருந்திருக்கிறதே என்று எண்ணத் தோன்றும்.

இன்று பேசப்படும் பெண்ணுரிமையோடு வள்ளுவன் பேசும் பெண்ணியக் கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ராஜராஜனையும் அக்காலத்தை வைத்தே மதிப்பிட வேண்டும்.


வர்ணாசிரம தர்மத்தின் பிதாமகன் மனு. அவர் ஒரு பிராமணர். இந்து மதம் உருவாக்கியது தான் மனுதர்மம். இந்து மதத்திலும் இந்தியாவிலும் மட்டுமே தீண்டாமை இருக்கிறது. சூத்திரர்கள் பட்ட அவலங்களுக்கும், கொடுமைகளுக்கும் இந்து மதமே காரணம். இப்படி எண்ணற்ற குற்றச்சாட்டு இந்து மதத்தின் மீது சுமத்தப்பட்டது. இது இப்போது கொஞ்சம் திசை மாறி சோழ மன்னன் மீது பாய்ந்துள்ளது.

ராஜராஜன் காலத்தில் தீண்டாமை இருந்ததா? தேவரடியார்கள் இருந்தார்களா? ஒடுக்கப்பட்டோரின் நிலங்கள் பறிக்கப்பட்டனவா? இது எந்த எளவுக்குச் சரியானது என்பதைத் தெரிந்து கொள்ள உலக வரலாற்றைச் சிறிது பார்ப்பது நல்லது.



ராஜராஜ
சோழன்

எஸ்.ஆரோக்கியசாமி



மனிதகுல வரலாறு பல சமூக அமைப்புகளை உள்ளடக்கியதாகும். புராதன பொதுவுடைமைச் சமுதாயம் அல்லது வேட்டைச் சமுதாயம், அடிமைச் சமுதாயம், நிலப்பிரபுத்துவச் சமுதாயம், முதலாளித்துவச் சமுதாயம் ஆகியவையாகும். சோசலிசச் சமுதாயம் உருவான வேகத்தில் அழிந்து விட்டதால், அதை ஒரு சமுதாய அமைப்பாக வரலாறு கணிக்கவில்லை.

புராதன பொதுவுடைமைச் சமுதாயத்தின் அழிவில் அடிமைச் சமுதாயம் உருவாகியது. அடிமைச் சமுதாய உருவாக்கத்தின் ஆரம்பத்திலேயே அரசு என்ற கருவி உருவாகிவிட்டது. அரசு என்ற கருவி உருவானபோதே நான்கு வருணங்களும் உருவாகிவிட்டன. இது அன்றைய காலத்தில் சமூகத்தை இயக்கவும் வழி நடத்தவும் முன்னேறிச் செல்லவும் தேவையாய் இருந்தது. இந்த நான்கு வருணக் கட்டமைப்பு நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் கெட்டிப்பட்டது. ஜமீன்கள், பாளையக்காரர்கள், குறுநில மன்னர்கள், மாமன்னர்கள், சக்கரவர்த்திகள் ஆகியோர் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் காவலர்களாக இருந்து ஆட்சி செய்தனர்.

ஒரு சமூகம் இயங்குவதற்கு இயற்கையாக உருவான நான்கு வருணங்களை மனு என்பான் நீதி நுலாக எழுதிவைத்துள்ளான். இந்த நான்கு வருணங்கள் என்பது வேலைப் பிரிவினை அடிப்படையில் உருவான சமூகக் கட்டமைப்பு. இந்த நான்கு வருணங்கள் என்பவை உலகம் முழுவதும் இருந்தன. அரசர்கள், மதகுருமார்கள், வணிகர்கள், உழைப்பவர்கள் அல்லது அடிமைகள்.

இந்த வேலைப் பிரிவினையால் உருவான வருணங்கள்தான் இந்தியாவில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று அடையாளப்படுத்தப் பட்டன. இத்தகைய வேலைப் பிரிவுகள் மன்னர்கள் ஆட்சி நடைபெற்ற உலக நாடுகள் அனைத்திலும் இருந்தன. கிரேக்கம், பாபிலோனியா, ரோம், எகிப்து, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ருசியா, சீனா, ஜெர்மனி, இந்தியா என்று எங்கெல்லாம் அரசர்கள் ஆட்சி நடைபெற்றதோ, அங்கெல்லாம் இந்த நான்கு வருணங்கள் இருந்தன.

இந்த நான்கு வருணத்தை அங்கீகரித்த இந்து மதம் போலவே புத்த மதம், கிருஸ்துவ மதம், முகமதிய மதம் என உலகில் தோன்றிய அனைத்து மதங்களும் அங்கீகரித்தன. இந்தியாவில் நான்காவது வருணம் சூத்திரர்கள் என்றால் அயல் நாடுகளில் அடிமைகள் நான்காவது வருணமாக இருந்தார்கள்.

இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பிலும் இந்த நான்கு வருணங்கள் வேறு வடிவத்தில் இருக்கின்றன. அன்றைய அரசர்களுக்குப் பதில் மந்திரிகள் இருக்கிறார்கள். ஆலோசனை வழங்கும் இடத்திலிருந்த பிராமணர்களுக்குப் பதில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் இருக்கிறார்கள். அன்று வைசியர்கள் என்றால் இன்று வணிகர்கள். அன்று சூத்திரர்கள் இன்று பல்வேறு துறைகளில் வேலை பார்க்கும் பணியாளர்கள் மற்றும் விவசாயிகள்.

தஞ்சைப்
பெரிய கோவில்



ஆக, நான்கு வருணங்கள் என்பவை அரசு என்று உருவானதோ அன்றிலிருந்து இருக்கின்றன. அதன் வடிவங்களும், பெயர்களும் மாறியிருக்கின்றன அவ்வளவே. நான்கு வருணங்கள் என்று சொல்லப்படும் வேலைப் பிரிவினை இல்லாமல் ஒரு சமூகம் இயங்கவும் முடியாது; முன்னேறிச் செல்லவும் முடியாது.

ராஜராஜன் காலத்திலும் இந்த நான்கு வருணங்கள் இருந்தன. அதற்காக நான்கு வருணங்களை உருவாக்கிப் பாதுகாத்தவன் ராஜராஜன் என்று குற்றம்சாட்ட முடியாது. ஏனெனில், அது அன்றைய ஒட்டுமொத்த சமூக அமைப்பின் கட்டமைப்பு. அதேபோன்று இந்து மதம் உருவாக்கியதுதான் நான்கு வருணங்கள் என்றும் குற்றம் சாட்ட முடியாது. ஏனெனில், நான்கு வருணங்களும் உலகம் முழுவதும் இருந்தன.

சோழ மன்னர் கரிகாலன் கட்டிய கல்லணை, ராஜராஜன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில் எல்லாம் இன்று உலகப் புகழ்பெற்றவையாக விளங்குகின்றன. பல நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கல்லணையின் தொழில் நுட்பத்தைப் பார்த்து ஆங்கிலேயப் பொறிஞர்கள் வியந்ததோடு மட்டுமல்லாமல், அதன் தொழில்நுட்பத்தை ஆதாரமாகக் கொண்டு மேட்டூர் அணையையும், முக்கொம்பு அணையையும் கட்டினார்கள் என்றால், அதற்குக் காரணமான சோழ மன்னர்களைப் பாராட்டாமல் எப்படி இருக்க முடியும்?

தஞ்சைப் பெரியகோவிலின் கட்டடக் கலையைப் பாராட்டாதவர்கள் எவருமிலர். அக்கோவிலைக் கட்டி சோழ சாம்ராஜ்யத்திற்கும், தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தவன் ராஜராஜன்.

அக்கால மன்னர்கள் பெரும்பாலோர் அடுத்த நாட்டு மீது படையெடுப்பது, ஆடம்பரமாக வாழ்வது, குடி,கும்மாளம் என்று அந்தப்புரத்தில் பொழுதைக் கழிப்பது என்ற நிலையே இருந்தது. அதற்குமாறாக, விவசாயிகளின் நலனைக் காக்கவும், விவசாயத்தைப் பெருக்கவும், மக்களின் ஆன்மீகத் தேடலுக்கு ஆலயத்தை நிறுவவும் முனைப்புக் காட்டிய சோழ மன்னர்களின் சாதனையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அப்படியானால், அவர்களுடைய ஆட்சியில் அடிமைகள் இல்லையா? தீண்டாமை இல்லையா? என்றால், இருந்தன என்பதுதான் உண்மை.

ஆனால் அன்றைய அடிமைகளுக்கு வயிற்றுக்குச் சோறிட்டால் போதும். கடுமையான வேலையையும் செய்யத் தயாராக இருந்தனர். அன்று மனித உரிமைச் சிந்தனையெல்லாம் கிடையாது. தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக! என்று கோஷம்போடத் தலைவர்கள் இல்லை. வர்க்கச் சுரண்டல் என்று பேசுவதற்கும் ஆட்கள் இல்லை.

இன்னும் சொல்லப்போனால் இடும் கட்டளையை நிறைவேற்றுவதில் இன்பத்தைக் கண்டனர். அரண்மனையில் அடிமையாய் இருப்பதைப் பெருமையாக நினைத்தனர். மன்னனுக்கு ஓர் ஆபத்தெனில் தங்களது உயிரைவிடவும் தயாராயிருந்தனர். கடவுளுக்குச் சமமாக மன்னர்களைப் பார்த்த காலம். அன்றைய ராஜவிசுவாசம் இன்றையத் தேர்தல்களில்கூடப் பிரதிபலிப்பதைப் பார்க்க முடிகிறது.

சூத்திரர்களிடமிருந்து நிலத்தைப் பறித்தார் ராஜராஜன் என்பதெல்லாம் பிரச்சார யுக்தியே! சூத்திரர்கள் நிலத்தை மட்டுமல்ல, எவர் நிலத்தையும் எடுக்கவும், எவருக்கு வேண்டுமானாலும் கொடுக்கவும் மன்னருக்கு உரிமை இருந்தது. எவரும் கேள்வி கேட்க முடியாது; கேட்கவும் மாட்டார்கள். ஒரு மன்னரின் ராஜ்யத்திற்குட்பட்ட அனைத்தும் மன்னருக்கே உரியன என்ற பொதுவான கருத்து நிலவிய காலம். அதுமட்டுமல்ல, சூத்திரர்களின் நிலத்தைப் பறித்தார் ராஜராஜன் என்பதற்கான ஆதாரமும் இதுவரை இல்லை.



கல்லணை


தீண்டாமை இருந்ததா? : அப்போது தீண் டாமை இருந்ததா என்றால் இருந்திருக்க வேண் டும். நான்கு வருணங்கள் உருவான சமூக அமைப்பில் தீண்டாமையும் உருவாகிவிட்டது. தீண்டாமை என்பது இந்து மதத்தில் மட்டுமோ, இந்தியாவில் மட்டுமோ, பேரரசன் ராஜராஜ சோழன் ஆட்சிக் காலத்தில் மட்டுமோ இருக்க வில்லை. உலகம் முழுவதும் தீண்டாமை இருந்தது.

இந்தியாவில் சூத்திரர்களைத் தீண்டத்தகாத வர்கள் என்று ஒதுக்கி வைத்தார்கள் என்றால், அடிமைமுறை நிலவிய நாடுகளில் கறுப்பர்களை, நீக்ரோக்களைத் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கி வைத்தார்கள். அமெரிக்காவிலும் ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றிலும் இப்போதும்கூட தீண்டாமை கடைப்பிடிப்பதைப் பத்திரிகைகள் மூலம் அறிகிறோம்.

எனவே, தீண்டாமை என்பதும் உலகம் முழுவதும் இருந்தது. இந்தியாவில் ராமானுஜரும், மகாத்மாகாந்தியும் தீண்டாமைக்கு எதிராகப் போராடினார்கள் என்றால், அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கனும், தென்னாப்பிரிக்காவில் நெல்சன் மண்டேலாவும் தீண்டாமைக்கு எதிராகப் போராடினார்கள்.

தீண்டாமை என்பதும் இந்துமதக் கண்டு பிடிப்பு இல்லை. இந்தியாவில் மட்டும் இருப்பது இல்லை; பிராமணர்கள் உருவாக்கியதும் இல்லை. இதுவும் உலகம் முழுவதும் நிலவிய ஒரு கொடு மையாகும். எனவே ராஜராஜன் தீண்டாமையைக் கடைப்பிடித்தான் என்ற குற்றச்சாட்டுக்கு எந்த ஆதாரமும் இல்லை.

தேவரடியார்களும் இருந்திருக்கிறார்கள். அன்றைய சமூக அமைப்பு அதை அங்கீகரித் திருக்கிறது. பொது மகளிர் என்ற ஒரு பிரிவும் இருந்திருக்கிறது. தேவதாசி முறையை ஒழிக்கப் போராடிய முத்துலெட்சுமிரெட்டி, மகாத்மா காந்தி ஜியைப் போல் அன்று யாரும் பிறக்கவில்லை. பொது வழக்கமாக இருந்ததும், அச்சமூகம் ஏற்றுக் கொண்டதுமான ஒன்றை ராஜராஜன் ஏன் ஒழிக்க முற்படவில்லை என்பது அறிவுப்பூர்வமான வாதமா காது. தேவதாசி முறையைப் பாதுகாத்ததாக ராஜராஜனைக் குற்றம் சுமத்துபவர்கள் மும்பை மற்றும் கொல்கத்தாவின் சிவப்புவிளக்குப் பகுதி யில் போய் முதலில் போராடட்டும்.



கரிகாற் சோழன்

பெருமைக்குரிய ராஜராஜன் : உலக வர லாற்றைப் புரட்டிப் பார்த்தால் அக்கால மன்னர் களின் சுகவாழ்க்கை நமக்குப் புரியும். ரோமாபுரி சாம்ராஜ்ஜியமே அழிந்து போனாலும் எனக்குக் கவலையில்லை. எகிப்து நாட்டு இளவரசியான கிளியோபாட்ராவே என் சாம்ராஜ்யம் என்று கிளியோபாட்ராவின் அழகில் மயங்கிக் கிடந்தவன் ரோமாபுரியின் சக்கரவர்த்தி அந்தோணி. அதனால் ரோம ராஜ்ஜியமே அழிவை நோக்கிச் சென்றது.

அந்தப்புரங்களில் அழகிகளுடன் கொஞ்சிக் குலாவி குடியும், கும்மாளமுமாக வாழ்ந்தார்கள் அக்கால மன்னர்கள் என்பது வரலாறு.

வரலாற்று ஏடுகளைப் புரட்டினால் பல கிறுக்கு ராஜாக்களின் கதையும் கோமாளி ராஜாக் களின் கதையும், கொடூரக் குணம் கொண்ட மன்னர்களின் கதையும் வெளிச்சமிடுகிறது.

இப்படியெல்லாம் மன்னர்கள் வாழ்ந்த காலத்தில் மக்களைப் பற்றியும் சிந்தித்த ஒரு மாமன்னராக ராஜராஜன் இருந்திருக்கிறான். கரி காற் சோழன் கட்டி வைத்த கல்லணை, ராஜராஜன் கட்டிவைத்த தஞ்சைப் பெரிய கோவில் தமிழகத் திற்குக் கிடைத்த பொக்கிஷங்கள். உலகமே வியந்து பார்க்கும் அதிசயங்கள் அவை.

எனவே, அக்காலச் சூழலில் நிலவிய சில சமூகக் கேடுகளை இன்றைய காலக் கட்டத்தில் பொருத்திப் பார்த்து ராஜராஜனைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவது சரியான புரிதலாகாது. மாமன்னன் ராஜராஜன் போற்றப்பட வேண்டியவன் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

கட்டுரை

சிலப்பதிகாரம் ஒரு சமணக் காப்பியமா?

முனைவர் ப.சுப்பிரமணியன்

‘நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர்மணி ஆரம்படைத்த தமிழ்நாடு’ என்று பாடினார் பாரதியார். கண்ணகி காலில் அணிந்திருந்த சிலம்பு காரணமாக எழுந்த காப்பியத்தைத் தமிழ்நாடு மணி ஆரமாக மார்பில் அணிந்து கொண்டது என்பது அவரின் பாராட்டு.



இளங்கோவடிகள்

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் தமிழில் எழுந்த முதற் காப்பியம். முடிகெழுவேந்தர் மூவர்க்கும் உரிய இக்காப்பியத்தை முத்தமிழ்க் காப்பியம் என்றும் போற்றுவர். சிலப்பதிகார காலத்தில் தமிழகத்தில் சமணமும் பவுத்தமும் காலூன்றிவிட்டன.



இக்காப்பியத்தில் சமண சமயம் சார்ந்த கருத்துக்களும், கொள்கைகளும் மிகுதியும் இடம் பெறுவதால், இதை ஒரு சமண சமயக் காப்பியம் என்று கூறுவார் உண்டு. இதனை இயற்றிய இளங்கோவடிகளை ஒரு சமணத் துறவி என்றும் கூறுவர். இதனைப் பலர் ஏற்பதில்லை.

பல்வேறு சமயக் கோயில்கள் பற்றிய செய்தியும், பல்வேறு கடவுளர்களை வழிபடும் வழிபாட்டு முறைகளும் இந்நூலில் பேசப்பட்டிருந்தாலும், சமண சமயம் சார்ந்த செய்திகளே மிகுந்து காணப்படுவதால், இதனை ஒரு சமண சமயக் காப்பியம் என்று கூறுவது ஏற்புடையதா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமண சமயத் தாக்கம் : சிலப்பதிகாரக் காப்பியத்தில் ஒரு கதைமாந்தராக இடம்பெறும் கவுந்தி அடிகள் ஒரு சமணசமயப் பெண்பால் துறவி. இவர் பூம்புகாரின் புறத்தே ஒரு சோலையில் அமைந்திருந்த அறப்பள்ளியில் தங்கியிருந்தார். சிலம்பினை விற்றுப் புதிய வாழ்க்கைத் தொடங்குவதற்காக மதுரைக்குப் புறப்பட்டுச் சென்ற கோவலனும் கண்ணகியும் கவுந்தியைக் கண்டு தொழுதனர். அப்போது அவர், ‘அழகும் குடிப்பிறப்பும், ஒழுக்கமும், இறைவன் நூலிற் கூறிய விரதம் தப்பாமையும் ஆகிய இவற்றையெல்லாம் உடைய நீங்கள் தீவினையாளரைப் போல உமது இடத்தை விட்டு நீங்கி விடுவதற்குக் காரணம் என்ன?’ என்று வினவினார்.

“உடுவும் குலனும் உயர்பேர் ஒழுக்கமும்
பெருமகன் திருமொழிபிறழா நோன்பும்
உடையீர் என்னோ
உறுகணாளரின்
கடைகழிந்து இங்ஙனம்
கருதியவாறு” (நாடுகாண் 46–49)



என்பது கவுந்தியின் வினா. இத்துறவியின் கூற்றில் இடம்பெறும் ‘பெருமகன்’ என்பது சமண சமயக் கடவுளாகிய அருகதேவனைக் குறித்தது என்பார் அடியார்க்கு நல்லார். இதனால் காப்பியத் தலைமை மாந்தராகிய கண்ணகியும் கோவலனும் அருகசமயமாகிய சமணசமயத்தைச் சார்ந்தவர் என்பது பெறப்படும்.


சாவகர் என்போர் சமண சமயத்தைச் சார்ந்த இல்லறத்தார் ஆவர். இவ் இல்லறத்தார் இரவு வருவதற்கு முன்பே உணவுண்டு முடித்துவிட வேண்டும் என்பது சமணசமய விதிகளுள் ஒன்று. மதுரைப் புறஞ்சேரியில் கோவலனையும் கண்ணகியையும் மாதரி என்ற இடைக்குல முதியவளிடம் கவுந்தி அடைக்கலமாக ஒப்படைத்திருந்தார். மாதரி தன் மகள் ஐயையை நோக்கி, ‘கோவலன் சாவக நோன்பினன் ஆதலின் உணவு சமைப்பதற்கு வேண்டிய கலன்களைக் கண்ணகிக்குக் காலம் தாழ்த்தாது அளித்திடுக’ என்றார். மாதரியின் இக்கூற்றும் கோவலன் சமண சமயத்தினன் என்பதைப் புலப்படுத்தும்.’

“சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்
நாத்தூண் நங்கையொடு நாள்வழிப்படூஉம்
அடிசில் ஆக்குதற்கு அமைந்த நற்கலங்கள்
நெடியா தளிமின் நீர்” (கொலைக் 18–21)

என்பது மாதரி ஐயையிடம் கூறியது.

தேன் உண்ணாமை, அறியாது உயிர்களைக் கொல்லாமை ஆகியவையும் சமண சமயக் கொள்கைகள். கோவலன், கண்ணகி ஆகிய இருவரிடத்தும் மதுரைக்குச் செல்லும் வயல் வழி பற்றிய கவுந்தியின் கூற்று : ‘வழியில் கரும்பு பயிர் செய்யப்பட்டிருக்கும். கரும்பிலே தேனடைகள் நிறைந்திருக்கும். அத்தேனடைகள் சிதைந்து, அவற்றிலிருந்து தேன் சிந்தி நல்ல நீரோடு கலந்துவிடும். தேன் கலந்த நீரை அறியாமல் கண்ணகி பருகக் கூடும்.

களை எடுப்பவர் களைகளோடு குவளை மலர்களைப் போட்டிருப்பர். குவளை மலரில் தேனை உண்டு மயங்கிக் கிடக்கும் வண்டுகளை மலர்கள் என்று நினைத்து அவற்றின் மேல் கால் வைத்தால் அவை இறந்துவிடும்.


கவுந்தியடிகளுடன் கோவலனும் கண்ணகியும்

வாய்க்கால் வழியில் போனால் நீரில் வாழும் புள்ளிகளையுடைய நண்டுகளும் நத்தைகளும் கரைகளில் வந்து கொண்டிருக்கும். அவற்றின் மேல் கால் வைத்துவிட்டால் அவை துன்புற்று மடியும். இதனால் தேன் அருந்துதலும், நம்மை அறியாமலும் உயிர்களைக் கொல்லுதலும் பாவம் என்னும் சமணசமயக் கொள்கை கவுந்தியால் வலியுறுத்தப்படுகிறது. (நாடுகாண் 82–93).

சிலம்பில் ஊழ்வினை : ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்’ என்பது சிலம்பு கூறும் மூன்று உண்மைகளுள் ஒன்று. ஒருவன் செய்த வினை அவனை மறுபிறவியிலும் தொடர்ந்து வரும். அதிலிருந்து யாரும் தப்ப முடியாது என்பதைச் சமணம் வலியுறுத்தும். இதனைச் சமணசமய நீதி நூலாகிய நாலடியார்,

“பல் ஆவுள் உய்த்துவிடினும்
குழக்கன்று
வல்லதுஆம் தாய்நாடிக் கோடலை –
தொல்லைப்
பழவினையும் அன்னதகைத்தே
தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு”

(நாலடியார், பழவினை 101)

என்று கூறுகிறது.

கோவலன் கொலையுண்டதற்குக் காரணம், அவன் முற்பிறவியில் செய்த தீவினையே ஆகும். சிங்கபுரத்து வேந்தனும் கபிலபுரத்து வேந்தனும் பகைவர்கள். ஒருநாள் சிங்கபுரத்துக் கடைத்தெருவில் கபிலபுரத்தைச் சேர்ந்த சங்கமன் என்ற வணிகன் பண்டங்களை விற்றுக் கொண்டிருந்தான். பரதன் என்பவன் அவ்வணிகனை ஒற்றனென்று அரசனிடத்துச் சொல்ல, அதனால் அவ்வணிகனுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கொலையுண்ட சங்கமன் மனைவி நீலி மிக்க வருந்தி ‘எமக்குத் துயரிழைத்தோர் மறுபிறப்பில் இத்துன்பத்தை அடைக’ எனச் சபித்தாள். அப்பரதனே இப்பிறப்பில் கோவலனாகப் பிறந்தான். அவன் முற்பிறப்பில் செய்த தீவினையே அவன் துன்பங்களுக்குக் காரணம் என்பதை மதுராபுரித் தெய்வம் கண்ணகிக்கு உணர்த்தியது.

கானல்வரியில் கோவலன் மாதவியைப் பிரிவது முதல் நடக்கும் ஒவ்வொரு செயலுக்கும் ஊழ்வினையே காரணம் என்பார் இளங்கோவடிகள். கானல்வரியில்,

“யாழ்இசைமேல் வைத்துத்தன்
ஊழ்வினை வந்து
... ... உருத்ததாகலின்
... ... கோவலனும்
தான்போயினான்”

கோவலன் விடியற்காலையில் கண்ணகியோடு மதுரைக்குப் புறப்பட்டதை,

‘வினைகடைகூட்ட
வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சீயாமுன்’

(வேனிற்காதை – இறுதி வெண்பா) என்றும், பாண்டியன் ஆராயாது கோவலனுக்குக் கொலைத் தண்டனை விதித்ததை,

‘வினைவிளைகாலம் ஆதலின் யாவதும்
சினைஅலர் வேம்பன தேரான் ஆகி’

(கொலைக் 148–149) என்றும்,

பொற்கொல்லன் முதலியோர் கோவலன் இருந்த இடம் சென்றதை,

‘தீவினை முதிர்வலை சென்று பட்டிருந்த
கோவலன் தன்னைக் குறுகினன்’

(கொலைக் 156–157)

என்றும்,

கோவலனது பண்டை ஊழ்வினை காரணமாகக் கல்லாக் களிமகன் வாளால் எறிந்து கொன்றான் என்பதை,

“கல்லாக் களிமகன் ஒருவன் கையில்
வெள்வாள் எறிந்தனன் விசும்கூடு அறுத்தது
... ...
கோவலன் பண்டை ஊழ்வினை
உருத்துஎன்” (கொலைக் 212, 213, 214)

என்றும் இளங்கோவடிகள் ஊழ்வினையின் ஆற்றலைப் பலவிடங்களில் காட்டுகிறார்.

திருவரங்கத்தில் ஒரு சோலையில் சமண முனிவர் இருவர்


கண்ணகி


பாரதியார்

தோன்றினர். அவர்களைக் கவுந்தி, கோவலன், கண்ணகி ஆகிய மூவரும் வணங்கினர். அப்போது அம்முனிவர் கவுந்தியை நோக்கி 'முன்வந்து நிற்கும் தீவினையை 'நீ போ' என்று சொன்னால் போய்விடாது. அது, தன் பலனை ஊட்டித்தான் போகும். விளை நிலத்தில் போட்ட விதை முளைத்து வளர்ந்து பயன் தருவது போல, வல்வினை நம் எதிரில் வந்து அதன் பலனைத் தரும்போது விலக்கவும் முடியாது' என்றனர்.

பீடுஅன்று : தேவந்தி கண்ணகியின் பார்ப்பனத் தோழி. கண்ணகி தான் கண்ட தீக் கனாவைத் தன் தோழியிடம் கூறினாள். அது கேட்ட தேவந்தி, 'நீ முற்பிறப்பில் ஒரு நோன்பினைச் செய்யத் தவறினாய். அதனால் காவிரி கடலோடு கலக்குமிடத்தில் சோம குண்டம், சூரியகுண்டம் என்னும் இரு பொய்கை கள் உள்ளன. அவற்றில் மூழ்கிக் காமவேள் கோட் டத்தை வலம்வந்தால் இப்பிறப்பில் கணவனைப் பெறலாம். மறுபிறப்பிலும் போக பூமியிற் பிறந்து அவனோடு இன்புறலாம்' என்றாள்.

அதுகேட்ட கண்ணகி அது தனக்குப் பெருமை தரத்தக்க செயலன்று என்ற பொருளில் 'பீடுஅன்று' என்றாள். கணவனைப் பெறுவதற் காக நீரில் மூழ்குவதும், கோட்டத்தை வலம் வருவதும் தெய்வம் தொழாக் கற்புடை மகளிர் செய்யார் என்ற பொருளில் கண்ணகி இதனைக் கூறியதாகப் பொதுவாகச் சொல்வர்.

கோவலன், கண்ணகி ஆகிய இருவரும் சமணசமயத்தைச் சார்ந்தவர் என்று முன்பே கூறப்பட்டது. ஒரு காரியம் நிறைவேற நீரில் மூழ்குவதையும், கோயிலை வலம் வருவதையும் தீர்த்தமூடம், தெய்வமூடம் எனச் சமணசமயம் விலக்கியதால் கண்ணகி பீடுஅன்று என்றாள் என்பதே பொருத்தமாகும்.

கவுந்தியின் சல்லேகனை : வடக்கிருந்து உயிர் துறத்தலைச் சல்லேகனை எனச் சமண சமயம் கூறும். சமணசமயப் பெண் துறவியாகிய கவுந்தி அடிகள் சல்லேகனை என்னும் உண்ணா நோன்பிலிருந்து உயிர்விட்ட செய்தி சிலம்பில் இடம்பெறுகிறது. கோவலன் கொலையுண்டதும், பாண்டியனும் கோப்பெருந்தேவியும் உயிர்நீத்ததும், மதுரை மாநகரம் எரியுண்டதும், மாதரி என்னும் மூதாட்டி அடைக்கலம் இழந்த துயரம் தாங்காமல் தீப்பாய்ந்து உயிர்விட்டதும் ஆகிய துயரச் செய்திகளை எல்லாம் கவுந்தி அடிகள் அறிந்து கொண்டு, ஆற்றொணாத் துயர் அடைகிறார். இத் துயர நிகழ்வுகளுக்கும் தமக்கும் தொடர்புண்டு என்று எண்ணுகிறார். தீராத்துயரத்தினால் அம்மூதாட்டி சல்லேகனை என்ற உண்ணா நோன்பை மேற்கொண்டு உயிர்விடுகிறார் என்பதை அறிய முடிகின்றது.

காப்பியத்தின் தலைமை மாந்தர்களாகிய கோவலனும், கண்ணகியும் சமணசமயச் சார்புடை யவர் என்பதாலும், கொல்லாமை, ஊன் உண் ணாமை, தேன் உண்ணாமை முதலிய சமணசமய விதிகள் காப்பியத்தில் பேசப்படுவதாலும், ஊழ் வினையின் ஆற்றல் பெரிதும் வலியுறுத்தப்படுவ தாலும், தாம் நினைத்த காரியம் நிறைவேற நீர்த் துறையில் நீராடுதலையும், கோயிலை அடுதலை யும் பீடுஅன்று என்று கண்ணகி விலக்கியதாலும், கவுந்திஅடிகள் சல்லேகனை செய்து உயிர்துறந்த லாலும் சிலப்பதிகாரம் ஒரு சமணக் காப்பியம் என்னும் முடிவுக்கு வரலாம்.

எனினும் காப்பியப் புலவர் அக்காலத்தில் புகார், மதுரை, வஞ்சி ஆகிய நகரங்களிலிருந்த கோயில்கள் பற்றியும், குறிஞ்சி, முல்லை, பாலை நிலங்களில் வாழ்ந்த மக்களின் வழிபாட்டு முறை கள் பற்றியும் விரிவாகக் கூறுவதால், இந்நூல் சீவகசிந்தாமணி, நீலகேசி போன்று முழுமையான சமணசமயக் காப்பியம் எனக் கூற முடியாது. இதனைச் சமணசமயக் கருத்துக்கள் நிறைந்த ஒரு பொதுமைக் காப்பியம் என்றும், சமய நல்லிணக்கக் காப்பியம் என்றும் உறுதியாகக் கூறலாம்.

●

மகா நந்திகள்!

இந்தியாவில் உள்ள கோயில்களில் மிக உயரமான நந்தியை, ஆந்திராவிலுள்ள அனந்தப்பூர் லேபாட்சி வீரபத்திரர் கோயிலில் காணலாம். இது 15 அடி உயரமும், 27 அடி நீளமும் கொண்டதாகும்.

மைசூர் சாமுண்டி மலை நந்தி, 15 அடி உயரமும் 24 அடி நீளமும் உடையது.

தஞ்சை பெரியகோயில் நந்தி 13 அடி உயரமும் 16 அடி நீளமும் கொண்டதாகும்.

– **த.சீ.பாலு**, சென்னை.





தோல்விகள் தொடங்கிவைக்கும் பாடம்

நா. சியாமளா

தோல்வி என்ற சொல் பெயரளவில் எதிர் மறைச் சொல்லாக இருந்தாலும், அது நேர்மறை எண்ணங்களை, செயல்களைப் படைத்துத் தரும் பிரம்மாவாகவே இருக்கிறது. பத்தாவது முறையாகக் கீழே விழுந்தவனைப் பார்த்துப் பூமி முத்தமிட்டுச் சொன்னது, "நீ ஒன்பது முறை எழுந்தவன்" என்று. உண்மைதான்!

விழுவதெல்லாம் எழுவதற்காகத்தானே தவிர, அழுவதற்காக அல்ல என்பதே தோல்விகள் நமக்குக் கற்பித்த பாடம். தோல்வியையே சந்திக்காத மனிதர் ஒருவர் இவ்வுலகில் இருக்கிறார் என்றால், அவர் தன் வாழ்வில் புதுமுயற்சி ஏதும் செய்திராதவர் என்றுதான் சொல்ல வேண்டும்.

வெற்றியை மட்டுமே விரும்பும் நாம் தோல்வியைக் கண்டால் துவண்டு விடுகிறோம். வெற்றியும், தோல்வியும் வாழ்வின் அடிப்படை அம்சங்கள். வெற்றியானது நம் வாழ்வை ஒரே இடத்தில் தக்கவைத்து விடுகிறது. ஆனால் தோல்வியோ, நம் வாழ்வை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்திச் செல்கிறது.

அதிகமான தோல்வியைச் சந்திப்பவர்கள்தான் அதிக வெற்றிப் பாடங்களைக் கற்கிறார்கள். தோல்வியை விழுப்புண்ணாக்கிப் பாருங்கள். அப்போதுதான் அது வெற்றியின் அடையாளச் சின்னமாக வரலாறுகள் பேசும் விதத்தில் நம் வாழ்வை அமைத்துத் தரும்.

வெற்றியைக் காட்டிலும் தோல்விக்கு அதிக வலிமை உண்டு. ஏனெனில், வெற்றி சிரித்து மகிழ வைக்கும். தோல்வியோ நம்மைச் சிந்தித்து வாழ வைக்கும். நம்மில் பலருக்கு ஏதோ ஒரு தோல்வியிலிருந்துதான், வாழ்வின் திருப்புமுனை அமைந்திருக்க வேண்டும்.

தோல்வி என்பது மருந்தின் மேலிட்ட இனிப்பு போன்றது. அதை நாம் அடையும்போதுதான் சுய மதிப்பீட்டைத் தொடங்குவோம். தேடலில் நம்மைத் தொலைப்போம். அத்தேடலில் நமக்குக் கிடைக்கும் வாழ்க்கைப் பொருள் புதையலைப் போன்றது.

இராபர்ட் புரூஸ் என்ற மன்னன் போரில் பல முறை தோல்வியுற்றுக் குகைக்குள் ஒளிந்து கொண்டிருந்தபோது, வலை பின்னிய சிலந்தியைப் பார்த்துச் சிரித்தான். வலை அறுந்து அறுந்து விழுந்தாலும் விடாமுயற்சியுடன் அச்சிலந்தி, வலை பின்னியதைப் பார்த்து அவனுள் தன்னம்பிக்கை பிறந்தது. அக்காட்சியே பின்னாளில் அவனை மாபெரும் வெற்றியாளனாக்கியது.

ஆயிரம் முறைக்கு மேல் தோல்வியடைந்த பிறகே தாமஸ் ஆல்வா எடிசன் மின்சார விளக்கைக் கண்டுபிடித்தார். அதிகமான தோல்விகளைச் சந்தித்த பெர்னாட்ஷா தொண்ணூறு முறை முயன்றால் ஒன்பது முறை வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்து கொண்டதன் பின், தம் முயற்சிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்திக் கொண்டார்.

"மடுத்த வாயெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து."

என்னும் குறள், தடைபடுகின்ற இடமெல்லாம் தளராது வண்டியை இழுத்துச் செல்லும் எருதின் விடாமுயற்சியை நமக்கு விளங்க வைக்கிறது. எருதினைப் போன்ற விடாமுயற்சி உடையவர்கள் தோல்விக்கே தோல்வி தந்து விடுகிறார்கள்.

நாம் மேற்கொண்ட முயற்சிகளில் தோல்விகளைக் கடந்து வாருங்கள். ஆனால் ஒருபோதும் தக்க வைத்து விடாதீர்கள்.

நிரந்தர வெற்றியைவிடத் தற்காலிகத் தோல்விகளிலிருந்து அதிக வாழ்க்கைப் பாடம் கற்றிடுங்கள்!!

மண்ணில் விழுகின்ற விதைகளெல்லாம் புத்துயிர் பெற்று எழுவதைப் போல, முயற்சி விதைகளை மனத்தில் தூவி வெற்றிப் பயிர்களை அறுவடை செய்யுங்கள்!!

தோல்வி கண்டு வெற்றிகளை வரவேற்றிடக் கற்றுக் கொள்ளுங்கள்!!

கட்டுரை

மணல் கொள்ளை பருவமழை இல்லை

சென்னையில் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு கடும் தண்ணீர்த் தட்டுப்பாடு. கடல்நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம்; செயற்கை மழை; அண்டை மாநிலங்களில் இருந்து தண்ணீர் கேட்பது இப்படித் தண்ணீருக் காகப் போராடுவதில் எந்தப் பயனும் கிடைக்காது.

தமிழகத்திற்கு மட்டும் கடந்த மூன்று ஆண்டுகள் ஏன் பருவமழை பொய்த்துப் போனது? வடகிழக்குப் பருவமழை என்றாலும், தென்மேற்குப் பருவமழை என்றாலும், வங்காள விரிகுடாப் பகுதியில்தான் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகும். மழை மேகம் உருவாகி நிலத்தை நோக்கிச் சென்று, காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி மழையாகப் பெய்வதுதான் அறிவியல் உண்மை. இந்தியாவிலும் இதே அறிவியல் உண்மைதான்; வேத காலம் முதல் இன்று வரை.


மழை பெய்வதற்குக் காற்றில் ஈரப் பதம் மிகமிக அடிப்படை அவசியம். பருவமழைக் காலங்களில் வங்காள விரிகுடாவில் தோன்றும் காற்றழுத்தத் தாழ்வு நிலையோ அல்லது புயலோ கரையைக் கடக் கும்போது தமிழகம் முதல் மும்பை வரை மழை பெய்ய வேண்டும். ஆனால் மழை பெய்யவில்லை.

தமிழக ஆறுகளில் மிக அதிக எண்ணிக்கையில் மணல் குவாரிகள் அமைத்து அளவிற்கு அதிகமாக மணல் அள்ளுவதால், இயற்கையில் என்ன பாதிப்பு ஏற்படும் என்பதுகூட அரசியலாளர்களுக்குத் தெரியவில்லை.

அந்தமான் நிகோபார் தீவுகள் மற்றும் இந்தோனேசியாவின் வடக்கு சுமத்ரா பகுதிகளின் கடலுக்கடியில் ஏற்படும் புவியியல் மாற்றங்களால் புவித் தகடுகள் தொடர்ந்து நகர்வதால் வெளிப்படும் உரசல் வெப்பம் கடல் நீரை ஆவியாக்கி, மழை மேகம் கடலின் மேற்பகுதியில் உருவாகிறது. அப்படி உருவான மழை மேகம் இந்திய நிலப் பரப்பை அடைந்து மழையாகப் பெய்ய வேண்டுமானால், காற்றில் போதுமான ஈரப்பதம் வேண்டும்.

ஆற்றின் பரந்த ஆழமான மணல் பரப்புதான் இயற்கையாக மழைநீரைச் சேகரிக்கும் அமைப்பாகும். இந்த இயற் கைப் பிணைப்புதான் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மாதம் மும்மாரி என மழை பெய்து வந்தது குறிப்பிடத்தக்கது. அரபு நாடுகளில், ஒன்றரை அடி தோண்டினாலே பாறை வந்துவிடும். அதனால்தான் அரபு நாடுகளில் மழை பெய்யும் அளவு மிகக் குறைவு. தற் போது தமிழகத்திலும் அதே நிலைமை தான்.

பல ஆண்டுகளாகத் தமிழக அரசே ஆறுகளில் மணல் அள்ள அனுமதி அளித்த தன் காரணமாக ஒரு நாளைக்கு ஆயிரக்



கணக்கான லாரிகளில் மூன்று லட்சம் டன் அளவிற்குக் கடந்த ஆண்டுகளில் ஆறுகளில் மணல் எடுத்துவிட்டார்கள்.

மழை பெய்யும்போது இயற்கையின் மழைச் சேகரிப்பே பரந்து விரிந்த ஆற்று மணல் பகுதிதான். அத்துடன் ஏரிகள், குளங்கள், அந்தக் காலத்தில் இருந்தே இருந்து வந்தன. தற்போது ஏரிகள், குளங்கள் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டு விட்டன; மிகப்பெரிய அளவில் இயற்கையையே பாதிக்கும் அளவிற்கு மணல் அள்ளப்பட்டுவிட்டது. அளவிற்கு அதிகமாக மணல் அள்ளிப் பருவ மழை பெய்வதற்கான வாய்ப்பையே அழித்துவிட்டார்கள். இனி, தமிழகத்திற்கு எப்போது பருவமழை அந்தந்தக் காலத்தில் பெய்யும் எனச் சொல்ல முடியாது.

இந்த ஆண்டு தோன்றிய பருவ மழையும் அதற்கான காற்றழுத்தத் தாழ்வு நிலையும் வங்காளவிரிகுடாப் பகுதியில்தான் உருவானது. அது தமிழகத்தைக் கடந்துதான் மகாராஷ்டிரா செல்ல வேண்டும். ஆனால் தமிழகத்தில் போதிய மழை இல்லை. ஆனால் மகாராஷ்டிராவில் கனமழை மற்றும் வரலாறு காணாத வெள்ளம். மகாராஷ்டிரா பகுதியில் காற்றில் போதுமான ஈரப்பதம் உள்ளது. அதனால் அங்கே மழை பெய்கிறது. ஆனால் தமிழகத்தில் வறண்ட வானிலை. காற்றில் ஈரப்பதம் இல்லை. ஆகையால் மழையும் இல்லை.

சி. பிரகாஷ்



இயற்கையைக் கொள்ளை அடித்தால் நாடே அழிந்துவிடும் என்பதற்கு மணல் கொள்ளை ஒரு சிறந்த உதாரணம். மழை பெய்யும் வாய்ப்பை அழித்துவிட்டால், தண்ணீர் இல்லாத நிலைமைதான் உருவாகும். மணலை அள்ள அள்ளப் பருவமழை பெய்யவே பெய்யாது. எடுத்த மணலுக்கே இன்னும் எத்தனை ஆண்டுகள் கழித்துப் பருவ மழை பெய்ய போகிறதோ? இயற்கை வளத்தை அழித்து வரும் செயல் மக்களின் வாழ்வாதாரத்தை நாசமாக்கும் செயல்.

அரசும், அரசியலாளர்களும், காவேரித் தண்ணீருக்காகப் போராடும் அமைப்புகளும் இந்த இயற்கை விஞ்ஞான உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். பத்திரிக்கைகளும், ஊடகங்களும் இந்த உண்மையை வலியுறுத்தி அடிக்கடி செய்திகள் வெளியிட வேண்டும். தமிழக ஆறுகளில் அளவிற்கு அதிகமாக மணல் அள்ளியதால் தண்ணீர் வராது, கானல் நீர்தான் வரும். மணல் கொள்ளையால் தமிழக மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தையே கொள்ளை அடித்துவிட்டனர்.



இந்த விஞ்ஞான உண்மை தெரியாமல் விவசாயிகள் தங்கள் வறண்ட நிலங்களில் மணலை அள்ளி விற்பனை செய்கிறார்கள். வேதத்தில் சொல்வதென்றால், செய்த கர்மத்திற்குப் பதிலாகப் பலன்தான் இப்போது தண்ணீர் இல்லாமல் மக்கள் அவதியுறுவது. விஞ்ஞானத்தில் சொல்வதென்றால், ஒவ்வொரு வினைக்கும் அதற்குச் சமமான எதிர்வினை உண்டு. ●



தூய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
MILK
SPECIAL
SUPREME
SELECT
Pasteurised, Homogenised, Standardised Milk
Pasteurised Toned Milk
500ml
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

இம்மாத ராசி பலன்

"என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!"

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

1.9.2019 அன்று கோள்கள் நிலை

			ராகு
	09.9.2019 சுக். – கன்னி 10.9.2019 புதன் – கன்னி 17.9.2019 சூரி. – கன்னி 26.9.2019 செவ். – கன்னி 26.9.2019 புதன் – துலாம்		
			சூரியன் புதன் சுக்கிரன் செவ்வாய்
சனி கேது	குரு		சந்திரன்

மேஷம்



மேஷ ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், சில குழப்பங்கள் ஏற்படலாம். முடிவுகளை மாற்றிக் கொள்ளக்கூடும். புதன் – செவ்வாய் கூடியிருப்பதால் உறவினர்கள் வகையிலும் சில பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புண்டு. மாதத்தின் பிற்பாதியில் 6–ஆம் வீட்டில் சூரியன் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் அனுகூலம் ஏற்படும். சிற்சில எதிர்ப்புகள் அகன்றுவிடும். 8–இல் குரு சஞ்சரிப்பதால் முழுமையாக இன்னும் சில பிரச்சனைகளிலிருந்து விடுபட முடியாது. 9–இல் சனி – கேது சஞ்சரிப்பதால் ஆலய வழிபாடு நல்லது.

தீய கிரக திசா புத்தி நடைமுறையில் இருப்பின், தகப்பனார் பகை, பெரியோர் பகை, ஏமாற்றம் ஏற்படக்கூடும். ராகு 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் அசட்டுத் துணிச்சலால் அற்ப வெற்றி கிட்டலாம். பயணங்கள் செல்லத் தடையில்லை. சகோதர வர்க்கத்தாரின் அதிருப்திக்கு ஆளாக வேண்டாம். திருமணக் காரியங்கள் விரைவில் கைகூடும். தற்போது நீங்கள் அதற்குண்டான முயற்சிகளில் இறங்கலாம். சுக்கிரன் 9–ஆம் தேதி வரை 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் ஒரு சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிட்டலாம். புதிய முயற்சிகளைப் புரட்டாசியில் தொடங்கலாம்.

ரிஷபம்



ரிஷப ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் 4–ஆம் வீட்டில் சூரியன் சஞ்சரிப்பதால் அதிக அலைச்சல், அத்தியாவசியப் பயணங்கள், தேக நலிவு ஏற்படக் கூடும். செவ்வாய் – சுக்கிரன் – புதன் கூட்டுச் சேர்க்கையால் பெற்றோர்க்கு நற்பலன்கள் ஏற்படாது. மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 5–ஆம் வீட்டில் சுக்கிரன் – புதன் சேர்க்கை பெற்றுச் சஞ்சரிப்பதால், சில நல் வாய்ப்புகள் தொழில், உத்தியோகத் துறைகளில் ஏற்படக்கூடும். குரு 7–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சில நேரங்களில் வாழ்க்கைத் துணைவர் எதிரியைப் போல் காட்சியளிப்பார். ஒரு சிலருக்குத் திருமண வாய்ப்புகள் ஏற்படக்கூடும்.

சனி – கேது 8–இல் சஞ்சரிப்பதால் தொழில் துறையில் அவ்வளவு சிறப்பான போக்குக் காணப்படாது. சில நேரங்களில் குழப்பம் உண்டாகும். ஒரு சிலருக்கு உடல் நலிவுகள் ஏற்படும். 2–இல் ராகு சஞ்சரிப்பதால் கண்ணில் உபத்திரவம் உள்ளவர்கள் அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம். செவ்வாய் 26–ஆம் தேதி வரை 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் பெரியோர் ஆலோசனைகள் கேட்டு நடப்பது நல்லது. தாய், தந்தையரது உடல் நலனில் மிகுந்த அக்கறை தற்சமயம் தேவை. புதிய முயற்சிகள் இம்மாதம் வேண்டாம்.

மிதுனம்



மிதுன ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதி அனுகூலமாகக் காணப்படுகிறது. தொழில் துறையில் முன்னேற்றம், பொருளாதார நன்மை ஏற்படும். புதிய முயற்சிகளுக்கு ஏற்றது. மாதத்தின் பிற்பாதியில் அலைச்சல் அதிகம் உண்டு. பயணங்களால் சோர்வடைவீர்கள். செவ்வாய் 26–ஆம் தேதி வரை 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் நிலம், பூமி சம்பந்தமாகவோ, சகோதர வர்க்கத்தார் மூலமோ நன்மையும் ஏற்படலாம், அதிருப்தியும் ஏற்படலாம். சொந்த பந்தங்களின் நிலை குறித்து அதிருப்தி அடைவீர்கள். குரு 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் இன்னும் சில மாதங்கள் கடன்களைப் பற்றிய கவலை இருந்து வரும். உறவினர்கள், தாய்வழி மாமன்கள் வகையிலும் அதிருப்திக்கு ஆளாகலாம்.

ராசி மீது ராகு சஞ்சரிப்பதால் குடத்திலிட்ட விளக்குப் போல் உங்களின் திறமை, உழைப்பு வெளித்தெரியாது. சனி, கேது 7–இல் சஞ்சரிப்பதால் அதிக வயதானவர்கள் கவலைப்பட நேரிடலாம். பற்பல விஷயங்களிலும் நீங்கள் தனிமைப்படுத்தப் படலாம். அதனால் பல விரக்தியான மன நிலையில் வீண் குழப்பத்திற்கு ஆளாவீர்கள். திருமணக் காரியங்கள் இரண்டொரு மாதங்கள் வரை தடைப்படலாம். குரு இடம் பெயர்ந்து தனுசு ராசியில் பிரவேசிக்கும் எதிர்வரும் ஆண்டு திருமணத்திற்குச் சிறந்த காலம். புதிய முயற்சிகளை மாதத்தின் முற்பாதியில் தொடங்க வெற்றி கிட்டும்.

▲

கடகம்



கடக ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சுபச் செலவுகள் உண்டு. பணத்தேவை அதிகரிக்கலாம். குடும்பத்தில் அத்தியாவசியச் செலவுகள் தவிர்க்க இயலாமல் போகலாம். மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத்தில் நன்மையுண்டு. புரட்டாசியில் புதிய காரியங்களைத் தொடங்க உங்களுக்கு உகந்தது. செவ்வாய் 26–ஆம் தேதி வரை வாக்குஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் கடுமையான சொற்களைப் பேச வேண்டாம்.

குரு 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் கூடவே நல்ல சம்பவங்களையும் எதிர்பார்க்கலாம். குழந்தைகளால் நன்மையும், தனச் சேர்க்கையும், அரசாங்க அனுகூலமும் ஏற்பட வாய்ப்புண்டு. சுப காரிய முயற்சிகள் ஈடேறும். சனி – கேது 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் இக்காலம் சொத்துச் சேர்க்கை ஏற்பட வாய்ப்புண்டு. 12–இல் ராகு சஞ்சரிப்பதால் தகாத மறைமுக உறவுகள் வேண்டாம். வேற்று சாதி, மதக்காரர்களுடன் தீவிர நட்புக் கொள்வது தவிர்க்கப்பட வேண்டும். சூரியன் – செவ்வாய் – புதன் – சுக்கிரன் 2–இல் மாதத்தின் முற்பாதியில் சஞ்சரிப்பதால், கண்களில் உபாதைகள் ஏற்பட்டால் மருத்துவரை நாடவும்.

▲

சிம்மம்



சிம்ம ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் சூரியன் சுபக்கிரகங்களின் இணைவு பெற்று ராசி மீது சஞ்சரிப்பதால், மன மகிழ்ச்சி, பொருள் லாபம், தன லாபம், தொழில் வழி நன்மை, அதிகாரம் ஓங்குதல், காரிய அனுகூலம் முதலியவை ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் இரண்டில் சூரியன், சுக்கிரன், புதன் சேர்க்கை பெற்றுச் சஞ்சரிப்பதால், எதார்த்தமான உங்களின் செயல்பாடுகள், இனிமையான பேச்சாற்றலால் நன்மை ஏற்படும். 4–இல் குரு சஞ்சரிப்பதால் குடும்ப விருத்தி ஏற்படும். சுய தொழிலில் முன்னேற்றம் ஏற்படும்.

சனி – கேது 5–இல் சஞ்சரிப்பதால் புத்திர வகையில் தொடர்ந்து அவர்களது முன்னேற்றம் குறித்த சிந்தனைகள் இருந்து வரும். இராகு 11–இல் சஞ்சரிப்பதால் சுப காரியங்கள் இவ்வருடம் நவம்பர் மாதத்திற்குப் பின் முயற்சி செய்தால் நடைபெறும். 26–ஆம் தேதி வரை செவ்வாய் ராசி மீது சஞ்சரிப்பதால் கோபதாபங்கள் சில நேரங்களில் ஏற்படலாம். அமைதியுடன் செயல்பட வேண்டும். புதிய முயற்சிகளை வரும் ஐப்பசி மாதத்தில் தொடங்கலாம். கால சர்ப்ப யோக அமைப்பில் பிறந்தவர்களுக்கு யோகமான காலம். மாதத்தின் பிற்பாதியில் 2–ஆம் வீட்டில் கிரகங்கள் சேர்க்கை பெறுவதால் பண வரவும் அதிர்ஷ்டமும் சிலர் அடைவர்.

▲

கன்னி




கன்னி ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சுப விரயம் ஏற்படும். பயணங்கள் ஏற்படும். சிலர் அரசாங்க உபத்திரவங்களை அடைய நேரிடும். மாதத்தின் பிற்பாதியில் ராசி மீது சூரியன் சஞ்சரிப்பதால், உங்களின் நலன் கருதிச் சில செலவினங்கள் ஏற்படக்கூடும். செவ்வாய் 12–ஆம் வீட்டில் இம்மாத இறுதி வரை சஞ்

சரிப்பதால், வீண் பதற்றம், ஞாபக மறதி முதலிய வற்றால் சிறு இழப்புகள் ஏற்படக்கூடும். எதிலும் கவனம் வேண்டும். குரு 3–ஆம் வீட்டில் சஞ்சரிப் பதால் சிலருக்கு வீண் பொறாமைக்குணம் ஏற்படும்.

சனி – கேது 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் குழப்பங்கள் அவ்வப்போது ஏற்பட்டு நிவர்த்தியாகும். ராகு 10–இல் சஞ்சரிப்பதால் வீடு, தொழில் முதலியவற்றில் மாற்றங்கள் செய்யக் கடந்த பல மாதங்களாக முயற்சித்துத் தோல்வி அடைந்திருக்கக்கூடும். தற்சமயம் மாற்றங்கள் குறித்துச் சிந்திக்க வேண்டாம். அதனால் பெரிய தொரு நன்மை இல்லை. திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் தற்சமயம் பயனளிக்கும் என்று கூற இயலாது. பெண்கள் மூலமான அபவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது, கவனம் தேவை. புதிய திட்டங் களைத் தொடங்கத் தற்காலச் சூழ்நிலைகள் சரியில்லை.


துலாம்



துலாம் ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதம் முற்பாதியில் லாபஸ்தானத்தில் செவ்வாய் – சுக்கிரன் – புதன் ஆகிய கிரகங்களுடன் கூட்டாகச் சஞ்சரிப்பதால் பொருள் வரவு, சகோதர வழி நன்மை, பண வரவு, உறவினர் சேர்க்கை, உத்தியோக வழி நன்மை, ஆடை, அணி – மணி லாபம் உண் டாகும். மாதத்தின் பிற்பாதியில் 12–ஆம் வீட்டில் சூரியன் சஞ்சரிப்பதாலும், புதன் – சுக்கிரன் சேர்க்கை பெறுவதாலும் பயணம், பண விரயம், அலைச்சல், சுப காரிய ஈடுபாடு முதலிய பலன்கள் ஏற்படக்கூடும். குரு 2–இல் சஞ்சரிப்பதால், குடும் பம் விருத்தியாகும். பணப்புழக்கம் அதிகப்படும்.

ராகு 9–இல் சஞ்சரிப்பதால் நீண்ட தூரப் பயணங்கள், வெளிதேச வர்த்தகத் தொடர்புகள் நன்மையளிக்கும். தகப்பனார் வர்க்கத்தாருக்குச் சிறு பாதிப்புகள் ஏற்படக்கூடும். சனி – கேது 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் ஆஸ்தி அந்தஸ்து அதிகப்பட வாய்ப்புண்டு. முயற்சித்தால் செல்வச் செழிப்பு ஏற்படும். 9–ஆம் தேதி முதல் உங்கள் ராசியதிபதி சுக்கிரன் 12–இல் நீசம் பெறுவதால், வயதானவர்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அரசாங்கக் காரியங்களில் முன்னெச் சரிக்கையுடன் இறங்க வேண்டும். குறுக்கு வழிகளைக் கையாள்வது கூடாது. திருமணக் காரியங்கள் விரைவில் சித்தியாகும். வரும் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் கைகூடும்.

விருச்சிகம்



விருச்சிக ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத் தின் முற்பாதியில் 10–ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் தொழில்வழி நன்மையுண்டு. செவ்வாய் – சுக்கிரன் – புதன் முதலிய கிரகங்களின் சேர்க்கை காரணமாக உங் களின் அதிகாரம், செல்வாக்கு உயரும். மாதத்தின் பிற்பாதியில் 11–ஆமிடத்தில் சூரியன் சஞ்சரிப்பதால், சகல காரியங்களும் அனுகூலப்படும். வழக்கு விவகார வெற்றி ஏற் படும். பெண்கள் மூலம் லாபம் உண்டாகும். 26–ஆம் தேதி வரை செவ்வாய் 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களின் அதிகார எல்லைக்குட்பட்டுச் செயல்பட வேண்டும். தொழில் செய்யும் இடத்தில் கலக்கம் இருந்து வரும்.

ராசி மீது குரு சஞ்சரிப்பதால் நீதியாக, நேர்மையாகச் செயல்பட்டால் பொருளாதார அபிவிருத்தி ஏற்படும். அவ்வப்பொழுது வீட்டில் சிறு மனஸ்தாபங்கள் உங்கள் வாக்கின் காரண மாக ஏற்படும். ராகு 8–இல் இருப்பதால் எதிர் பாராத பணப்புழக்கம் சிலருக்குக் கிட்டும். திரு மணக் காரியங்களில் இன்னும் ஒன்றிரண்டு மாதங்கள் கழித்து இறங்கலாம், ஈடேறும் வாய்ப்புண்டு. புதியதாகத் தொழில் தொடங்கவோ அல்லது இதர சுப காரியங்களில் இறங்கவோ ஏற்ற காலமாகும். குறிப்பாகப் புரட்டாசி மாதம் நல்லது.

தனுசு



தனுசு ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதி யில் சூரியன் 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதாலும் செவ்வாய், சுக்கிரன், புதன் சேர்க்கை பெறுவதாலும் நேர்மையான நடவடிக்கையாலும், தர்மார்த்த சிந்தனையாலும் காரியங்கள் சிறிது காலத்திற்குப் பின் சித்தியாகும். உபன் யாசம், அறங்காவல், நீதிமன்றம் தொடர்பான பணி களில் உள்ளவர்கள் யோகம் அடைவர். மாதத்தின் பிற்பாதியில் நீண்ட நாள் எண்ணம் ஒன்று ஈடேறும். தொழில் துறையில் உயர்வு ஏற்படும். தொழில் தொடர்பாகச் சிலர் பயணம் மேற்கொள்ள வாய்ப்புண்டு. சிலர் தொழில் அபிவிருத்தி கருதிக் கடன் பெற வாய்ப்புண்டு.

குரு 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் புதிய பதவி அந்தஸ்து ஒரு சிலருக்குக் கிட்டும். ஒரு சிலர் ஜென்மச்சனியின் காரணமாகச்

செலவினங்களை அதிகம் அடைவர். திருமணக் காரியங்கள் ஈடேறுவது அவரவர் ஜனன ஜாதகத்தைப் பொறுத்தது. ஜன்ம ராசியில் கேது சஞ்சரிப்பதால் குழப்பங்களுக்கு இடம் கொடுப்பது நல்லதல்ல. 7–இல் இராகு சஞ்சரிப்பதால், ஒரு சிலர் பயணங்களை மேற்கொள்வர். நூதன மனிதர்கள் வாழ்க்கையில் குறுக்கீடு செய்யும் காலம் என்பதால் எல்லா விஷயங்களையும் ஆய்வு செய்து நட்புக் கொள்வது நல்லது. புதிய முயற்சிகளை மாதத்தின் பிற்பாதியில் தொடங்க நன்று.




மகர ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் 8–ஆம் வீட்டில் செவ்வாய், சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்களின் சேர்க்கை பெற்றுச் சஞ்சரிப்பதால், மிகவும் கவனமாக எக்காரியத்தையும் செய்ய வேண்டும். எதிர்பாரா சம்பவங்கள், செலவுகள், உடல் உபாதைகள் ஏற்பட வாய்ப்புண்டு. மாதத்தின் பிற்பாதியில் சூரியன், சுக்கிரன், புதன் சேர்க்கை பெற்று 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சன்மார்க்கனாக இருந்து காரியம் செய்யலாம். நன்மை உண்டு. துன்மார்க்கனாக இருந்து செயல்பட்டால் தீமை விளையும். காரியத் தடைகள் ஏற்படும்.

குரு லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் தெரிந்தே சில விஷயங்களில் ஏமாறுவீர்கள். வேண்டிய நபர் ஒருவர் மூலம் விரயம் வரக்கூடும். 12–இல் சனி, கேது சஞ்சரிப்பதால் பிறரது பேச்சைக் கேட்டு உங்களைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம். சுயமாகச் சிந்தித்துச் செயல்படுவதே நன்மையானது. பிறரைச் சந்திக்கும் போது நல்லவரா, கெட்டவரா என்று ஆராய்ந்து உங்களது எண்ணங்களை வெளிப்படுத்துவது நல்லது. ஜனன ஜாதகத்தில் விருச்சிக ராசியில் சுக்கிரன் அமையப் பெற்றவர்களுக்கும், ரிஷப ராசியில் குரு அமையப் பெற்றவர்களுக்கும் திருமணம் கைகூடும்.




கும்பராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் பல்வேறு நபர்களைச் சந்திக்கும் வாய்ப்பு உண்டாகலாம். பல வழி எதிர்ப்புகளும் ஏற்படலாம். மாதத்தின் பிற்பாதியில் எதிர்பாராத சம்பவங்களால் சங்கடம் வரும். எதிர்பாராத செலவும் ஏற்படலாம். மாதத்தின் ஆரம்ப நாட்களில் கவனம் தேவை. குரு 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் வருமானம் குறைவுபடாது. தொழில் துறையில் ஓரளவு சீரான போக்கே இருந்து வரும். சனி, கேது லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பெரியோர்களால் ஆதரவும் உதவியும் கிட்டும். ஒரு சிலர் வயது முதிர்ந்தவர்கள், சந்நியாசிக்கு ஒப்பானவர்களுடன் நட்புக் கொள்வர்.

ராகு 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் விஞ்ஞானப்பூர்வமாக எதையும் சிந்திப்பீர்கள். கணிப்பொறி, உயிரியல், மென்பொருள் சம்பந்தப்பட்ட தொழில், கல்வி, ஆராய்ச்சியில் உள்ளவர்கள் நற்பலன்களை அடைவர். திருமணம் முதலிய சுப காரியங்களில் ஈடுபாடு கொள்ளலாம். இன்னும் 2, 3 மாதங்களில் சாதகமான பலன்கள் கிட்டும். செவ்வாய் 7–ஆம் வீட்டில் பெரும்பாலான நாட்கள் இம்மாதம் சஞ்சரிப்பதால் கணவன் – மனைவி உறவுகளில் பாதிப்பு வரக்கூடும். எனவே, தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. புது முயற்சிகளுக்குக் கார்த்திகை மாதம் நல்லது.



மீன ராசி அன்பர்களுக்கு, இம்மாதத்தின் முற்பாதியில் சூரியன் 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் அனுகூலம் உண்டு. செவ்வாய், சுக்கிரன், புதன் சேர்க்கை காரணமாக ஒரு சிலர் உடல் உபாதைகளை அனுபவிக்கக்கூடும். ஒரு சிலர் கடன்கள் கொடுப்பதாலோ, வாங்குவதாலோ பிரச்சனைகளை அடையக்கூடும். மாதத்தின் பிற்பாதியில் சூரியன், புதன், சுக்கிரன் 7–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் எதிர்ப்புகள் ஏற்படக் கூடும். குடும்பப் பிரச்சனைகள் கவலை ஏற்படுத்தலாம். குரு 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் ஒரு சிலருக்குச் சந்ததி பாக்கியம் ஏற்படும். திருமணம் முதலிய சுப காரியங்கள் சிலருக்கு ஈடேறவும் வாய்ப்புண்டு.

சனி, கேது 10–இல் சஞ்சரிப்பதால், தொழில் துறையில் சற்று மந்தமான போக்குத் தென்படும். உங்களது அந்தஸ்து தாழ்ந்து விடுமோ என்ற வீண் பயமும் ஏற்படக்கூடும். ராகு 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் பயணங்களில் கவனம் வேண்டும். 6–ஆம் வீட்டில் செவ்வாய் 26–ஆம் தேதி வரை சஞ்சரிப்பதால் வழக்குத் தொடர்ந்தால்தான் தீர்வு கிடைக்கும் என்ற சூழ்நிலையில் இருப்பவர்கள் அவ்வாறான வழக்குகளைத் தொடரலாம். பின்னாளில் வெற்றி கிட்டும். புதிய முயற்சிகளை மாதத்தின் முற்பாதியில் தொடங்க வெற்றி கிடைக்கும்.



காளமேகத்தின் ‘திருஆனைக்கா உலா’

கே.பி. அறிவானந்தம்

தமிழ் இலக்கியத்தின் கவிதைகளைப் பொதுவாகச் சங்க இலக்கியம், இடைக்கால இலக்கியம், தற்கால இலக்கியம் எனப் பிரிக்கிறோம். அவற்றுள் இடக்கால இலக்கியங்களைப் பற்றிச் சொல்லவந்த ஒரு தனிப் பாடல், யார் யார் எதிலெதில் வல்லவர் என்பதை இப்படிப் பட்டியலிடுகிறது.

“வெண்பாவில் புகழேந்தி பரணிக்கோர்

ஜெயங்கொண்டான் விருத்த மென்னும்

ஒண்பாவிற்கு உயர்கம்பன் கோவையுலா

அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்

கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்

வசைபாடக் காளமேகம்


பண்பாக உயர்சந்தம் படிக்காசர்

அலாதொருவர் பேசொணாதே”

இதில் ‘வசை பாடக் காளமேகம்’ என்றே அவர் அடையாளப் படுத்தப் பட்டிருந்தாலும் அவர் இசை பாடவும் தவறியதில்லை. யாரைப் புகழ வேண்டுமோ, அவர்களை முழுமையாகப் பாராட்டியிருக்கிறார். எல்லாத் தெய்வங்களைப் பற்றியும் அற்புதமாகப் பாடியிருக்கிறார்.

தமிழில் இப்படியெல்லாம் சொல் விளையாட்டுச் செய்ய முடியுமா என்னுமளவிற்கு வியக்கத்தக்க பல பாடல்களைத் தந்திருக்கும் இவர், சிலேடை பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்திருக்கிறார்.

ஒரு புலமைப் போட்டியில் எப்படிக் கேட்கிறார்களோ, அவ்விதமே ஆசுகவி பாடி, ‘ஆசுக்குக் காளமுகில்



ஆனவனே' எனப் பாராட்டப் பெற்றார்.

"இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம் பாட்டா காதோ"

என்றபடி பாடல்களைக் கார்காலத்து மேகம் பொழிவது போல் பொழிந்து தள்ளிய காரணத்தால், காளமேகம் என்று பெயர் பெற்றவர் இவர்.

வரதன் என்ற இயற்பெயர் கொண்டிருந்த அவர், திருவரங்கம் கோயிலில் மடப்பள்ளியில் பணிபுரிந்து வந்தார். திருஆனைக்கா கோயிலிலுள்ள உருத்திர கணிகையான ஒரு பெண்ணிடம் நேசம் கொண்டிருந்தார். அவள் மார்கழி மாதத்தில் ஒரு நாள் திருவெம்பாவை பாடும்போது, "உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்ற பாடலில், "எங்கொங்கை நின்னன்பர் அல்லாதோர் சேரற்க" என்ற தொடரைப் பாடினாள்.

அதைக்கேட்ட தோழிகள், "நீ இப்போது சிவனடிக்கு அன்பில்லாத ஒருவனிடந்தானே காதல் கொண்டிருக்கிறாய்" என்று கேலி செய்தார்கள். அதனால் நாணமடைந்த அவள், வரதன் வரும்போது வாயிற்கதவை அடைக்க, காரணம் அறிந்த அவர், அவளுடைய காதலைப் பெரிதாக மதித்து, சிவதீட்சை பெற்றுச் சைவனானார், காளமேகப் புலவரானார் என்று ஒரு வரலாறு காளமேகத்தைப் பற்றி வழங்குகிறது.

காளமேகம் என்றாலே, அவரது தனிப்பாடல்கள்தான் என அனைவருக்கும் நினைவு வரும். அவர் பாடிய சிற்றிலக்கியமாக நமக்குக் கிடைத்திருக்கும் ஒரே நூல் 'திரு ஆனைக்கா உலா.' சோழ நாட்டில் காவிரியாற்றின் கரையில் அமைந்த ஆனைக்கா என்ற திருத்தலத்தில் சம்பு கேசுவரர் என்று சொல்லப்படும் வெண்ணாலீசர் மீது இது பாடப்பட்டுள்ளது.

வெண்ணாலீசுவரர் உலா வரும்போது எழுவகை மாதர் அவரைக் கண்டு மோகம் கொள்வதாக அமைத்துப் பாடப்படுவது உலா. அவர்கள் வயதுக்கேற்ப பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அறிவை, தெரிவை, பேரிளம்பெண் எனப்படுவர்.

எவருக்கு என்ன வயது என்பதில் பன்னிருபாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் ஆகியவற்றின் சூத்திரங்களில் மாற்றங்கள் உள்ளன. இருப்பினும் மூன்றுக்கும் பொதுவாக அமைந்த ஒரு தனிப்பாடல் கூறுவதே பொதுவானது என ஏற்றுக் கொள்ளலாம்.

"பேதை தனக்குப் பிராயம் ஏழு; பெதும்பைக்கு ஒன்பது;
ஓதிய மங்கைக்குப் பன்னிரண்டாம்; ஒளிர் மடந்தை
மாதருக்கு ஈரேழு; அரிவை பதினெண்; மகிழ்தெரிவை
சாதி மூவேழு; பேரிளம் நாலெட்டுத் தையலர்க்கே."

இவர்களுள் பேதை என்பவள் இளஞ்சிறுமியாதலால், வேட்கை பிறவாத பருவத்தினள் – விளையாட்டொன்றையே அறிவாள். பெதும்பை வேட்கை பிறந்தும், பிறவாமலும் உள்ள பருவத்தாள். மங்கை தக்க பருவத்தாள்; காதலொழுக்கத்திற்கு உரியவள்; இனிதான் அதை அறியப் போகிறவள். மடந்தை சற்றே இன்பம் துய்த்தவள். அறிவை இன்பத்தை முழுவதும் அனுபவித்தவள். தெரிவை அதனைக் கடந்து தாய்மை நிலை அடைந்தவள். பேரிளம்பெண் வயது முதிர்ந்து மெய்யின்பத்தை நாடும் நிலையைக் கடந்தவள்.

இத்தகைய ஏழு பருவ மகளிரையும் வருணிக்கும்போது கவிஞர்கள் அவரவர் வயதுக்கேற்ப அவர்கள் நிலையைப் பாட வேண்டும். காளமேகம் அதை அற்புதமாகச் செய்திருக்கிறார்.

பெதும்பை கழங்காடுமிடத்தில் ஒன்று முதல் ஏழு வரையுள்ள எண்களைக் கூறும்போது அவர்கள் நிலையைப் பாட வேண்டும். காளமேகம் அதை அற்புதமாகச் செய்திருக்கிறார்.

தமிழ் மாதங்களின் பெயர்களை

வேறு பொருட்களில் அமைத்துப் பாடியிருப்பதும், வல்லெழுத்துக் களைக் கொண்டும் மெல்லெழுத்துக் களைக் கொண்டும் பாடியிருப்பதும், தமிழறிந்த அனைவரையும் வியக்க வைப்பவையாகும்.

காளமேகம் முறைப்படி முதலில் கணபதிக்குக் காப்புச் செய்யுள் பாடு கிறார். இந்தக் காப்புச் செய்யுள் விநாயகரைப் பற்றிப் பாடல்கள் கொண்ட பல நூல்களில் இடம் பெற்றிருக்கிறது.


"ஏரானைக் காவினுறை என்னானைக் கன்றளித்த
போரானைக் கன்றதனைப் போற்றினால் – வாராத
புத்திவரும் பத்திவரும் புத்திரசம் பத்துவரும்
சத்திவரும் சித்திவரும் தான்"

ஏர் என்றால் அழகு. அழகிய ஆனைக்காவினுறைகின்ற என்னாசாக் கன்று (இந்தத் திருத்தலத்தில் சுவாமிக்கு வழங்கும் பெயர்களில் இதுவும் ஒன்று) அளித்த போர் ஆனைக்கன்று – விநாயகர். அவரைப் போற்றினால் புத்தி, பத்தி, புத்திர சம்பத்து, சத்தி, சித்தி யாவும் வரும் என்கிறது பாடல்.

உலாப் பாடுதல் என்பது கலி வெண்பாவில் இருக்க வேண்டும் என்பது மரபு. இத்தனை அடிகள்தான் இருக்க வேண்டும் என்ற வரம்பு ஏதும் கிடையாது. எடுத்துக்கொண்ட பொரு ளுக்கேற்ப அது அமையும். திரு ஆனைக்கா உலா இரண்டிரண்டு அடிகள் கொண்ட கண்ணியாக 491 கண்ணிகள் கொண்டதாக அமைந் திருக்கிறது.

முதலில் திருஆனைக்காவின் தல வரலாற்றைப் பாடத் தொடங்கும் காளமேகம், இறைவனின் சிறப்பை இவ்விதம் பாடித் தொடங்குகிறார்.

"சீர்பெற்ற தற்பரமாய்ச் சிற்பரமாய்ச் சிற்பரத்து
வேர்பெற்ற நாதமாய் விந்துவாய்ப் – பேர்பெற்ற
சோதியாய் மும்மைச் சொரூபமாய் ஐம்பூதத்து
ஆதியாய் எவ்வுயிரும் ஆயினோன்"


உ
காளமேகப் புலவர்
பாடிய
திருஆனைக்கா உலா
— மூலமும் குறிப்புரையும் —
பதிப்பாசிரியர் :
மு. அருணாசலம், எம். ஏ.
செந்தமிழ்க் கழகம்
சொக்கநாதபுரம்

எவ்வளவு கம்பீரமான தொடக் கம்! தற்பரம் – பரம்பொருளின், சிற் பரம் – அறிவுக்கு எட்டாத பொருள். பரம்பொருளான இறைவன் அறிவுக்கு எட்டாத பொருளாய், நாதமாய், விந்துவாய், புகழ்மிக்க சோதியாய் மூன்று சொரூபமாய், ஐம்பூதத்திற்கும் ஆதியானவனாய் எல்லா உயிர்களுக் கும் இருந்து எவ்வுயிரும் தானாக விளங்குகிறான்.

மூன்று சொரூபம் என்பது அரு வம், உருவம், அருவுருவம் என்பதைக் குறிக்கும். ஐம்பூதம், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பவற் றைக் குறிக்கும்.

இதற்கடுத்து ஓர் அற்புதமான உருவத்தைத் தருகிறார் காளமேகம். எதற்கும் மட்டுப்படாமல் வளர்ந்து அண்டமளாவியதாய் எட்டுக் கிளை கள் கொண்ட மரமொன்று உள்ளது என்கிறார்.

"மட்டுப் படாது வளர்ந்தாண்ட வண்களிந்து
எட்டுப் பணை கொண்டு எழுந்த தரு"

தரு – மரம், பணை – கிளை, எது அந்த மரம்? சிவம்தான்! வேதத்துக்கு மட்டுப்படாது வளர்ந்து அண்ட முகடுகளைக் கடந்து எட்டுக் கிளை களோடு விளங்குகிறது என்கிறார். அது என்ன எட்டுக் கிளைகள்? நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரி யன், சந்திரன், ஆன்மா என்பவைதாம் அவை.

இப்படிச் சிவத்தைப் பற்றிய பெருமைகளைப் பாடியிருக்கிறார் காளமேகம்.

கட்டுரை



சர்க்கரை நோயிலிருந்து தப்பி வந்தவனின் சத்திய வாக்குமூலம்

"டாக்டர் ஒருவர் உங்களைப் பார்க்க விரும்புகிறார். வரச்சொல்லவா?" என்று எங்கள் பகுதியில் குடியிருக்கும் ஆசிரியை ஒருவர் கேட்டார்.



"வேண்டாம். எதுக்கு?" என்றேன்.

"சும்மாதான். உங்கள் புத்தகங்களைப் படித்தவர். அது விஷயமாக இருக்கலாம்" என்றார்.

"வேண்டாம்" என்று சொல்லிவிட்டேன். ஆனால், இரண்டு மாதங்கள் கழித்து, அவர் தமது சீடர்களான இளம் மருத்துவர்களுடன் திடீரென வந்துவிட்டார். என்ன செய்ய... வரவேற்றுப் பேசினேன்.

"நீங்கள் எழுதிய ஓஷோ, கலீல் ஜிப்ரான், மிர்தாதின் புத்தகம் முதலியவற்றைப் படித்துத்தான் சில தெளிவுகள் பெற்று நாங்கள் டாக்டர்கள் ஆனோம். நன்றிக் கடனாக உங்களுக்கு நாங்கள் ஏதாவது செய்ய வேண்டும் என்றுதான் சந்திக்க விரும்பினோம்" என்றார் டாக்டர் அய்யா.

"எனக்கு ஒன்றுமில்லை. நன்றாகத்தான் இருக்கிறேன்" என்றேன்.

"இப்படிச் சொன்னால் எப்படி? எப்படி இருக்கிறது உடல் நலம்?" என்றார்.

"வழக்கம் போல. இந்த வயதுக்கு என்ன வரும்? சர்க்கரை நோய்தான்."

"யார் சொன்னது?"

"டாக்டர்கள்தான்."


"இல்லை. உங்களுக்குச் சர்க்கரை நோயே கிடையாது. எல்லாம் டாக்டர்கள் விட்ட சரடு."

"அய்யோ! என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? 26 வருடங்களாக மருந்துகள் சாப்பிட்டு வருகிறேனே."

"கால் நூற்றாண்டிற்கு மேலாக மருந்துகள் சாப்பிட்டுமா நோய் குணமாகவில்லை?"

"சர்க்கரை நோய் குணப்படுத்த முடியாதது. அதனால்தான்."

"குணப்படுத்த முடியாததற்கு எதற்காக மருந்து



கவிஞர் புவியரசு

சாப்பிட வேண்டும்?"

"கட்டுப்பாட்டில் வைக்க."

"கட்டுப்பாட்டில் இருக்கிறதா? அதிகரித்திருக்கிறதா?"

"அதிகரித்திருக்கிறது!"

"அப்புறம் என்ன கட்டுப்பாடு?"

"சரிங்க. என்னதான் செய்யட்டும். எல்லாரும் அப்படித்தானே?"

"ஆமாம். ஆனால் நீங்கள் அப்படி இருக்கக்கூடாது. நீண்ட காலமாக வாழ்ந்து, நிறைய எழுத வேண்டும்."

"எனக்கு வயது 88. இனி எத்தனை காலம் உடல் நலத்தோடு வாழ முடியும் டாக்டர்?"

"முடியும்! அதற்குத்தான் வந்திருக்கிறோம். இப்போது விழுங்கி வரும் மருந்துகளைப் பட்டியலிடுங்கள்."

"காலையில் 32 பாயின்ட் இன்சுலின். அப்புறம் மாத்திரைகள். பகலில் மாத்திரை – இரவு 18 பாயின்ட் இன்சுலின். அப்புறம் நீரிழிவுக்கான மாத்திரை. அப்புறம் கால் எரிச்சலுக்கு, மரத்துப் போனதுக்கு, குத்தலுக்கு, வெளிக்குப் போக, சிறுநீர் போக, சத்து மாத்திரை, அவ்வப்போது பெயின் கில்லர்... என்று நிறைய மாத்திரைகள்..."

"இத்தனை நஞ்சுகளையும் உள்ளே தள்ளிவிட்டு, இன்னும் நீங்கள் சாகாமல் இருப்பதுதான் ஆச்சரியம்!"

"நான் சாகாமல் இருப்பதற்கே இந்த மருந்துகள்தானே காரணம்!"

"நீங்கள் எப்படி இப்படித் தலைகீழாக யோசிக்கிறீர்கள்?"

"அப்படியா? எனக்கு அப்படித் தோன்றவில்லை. இப்போது என்ன செய்ய?"

"எல்லாவற்றையும் அப்படியே நிறுத்துங்கள். உங்கள் மருந்துகளைக் குப்பையில்கூடப் போட வேண்டாம். சாக்கடையில் கொட்டுங்கள்" என்றார் டாக்டர்.

நான் அதிர்ந்து போய், "அய்யோ!" என்றேன்.

"என்ன அய்யோ?"

"நாளைக்கே நான் செத்துப் போவேன்" என்றேன்.

"நாங்கள் எழவுக்கு வந்து, உங்களை உயிர்ப்பித்து உட்கார வைப்போம்!" என்று ஒரு போடு போட்டார் மருத்துவர் அய்யா.

அப்புறம், உரையாடல் தொடர்ந்தது. கடைசியில் நான் அவர் பேச்சில் இருந்த உறுதி, ஞானம், விளக்கம், அறிவியல், ஆய்வுகள் எனப் பலவற்றைக் கேட்டபின்... நிறுத்தினேன்! எல்லாவற்றையும் நிறுத்தினேன்! சட்டென ஒரே நாளில். இந்த நிறுத்த நாள் 2019 ஜூன் 3–ஆம் தேதி.

ஜூன் 4–ஆம் தேதி நான் சாகவில்லை! உடல் அப்படியே இருந்தது. உள்ளே என்ன நடந்ததோ தெரியாது... நினைத்துப் பாருங்கள், 32 பாயின்ட் இன்சுலின், அதன் பக்க வாத்தியங்களாக மாத்திரைகள் ஏதும் இல்லாமல் நான் நலமாகவே இருந்தேன்.

தினசரி காலையில், தற்கொலை செய்து கொள்ளும் ஜப்பான்காரனின் 'ஹராகிரி' போல வயிற்றில் ஊசியால் குத்திக் கொண்டிருந்த வேதனையிலிருந்து விடுபட்டேன்.

உடல், தன்னைத்தானே சரி செய்து கொள்ள ஆரம்பித்தது! அதற்கு அந்த ஆற்றல் உண்டு. அதை

தெரிந்து கொள்ளுங்கள்...!

1. மருந்தே நோய். 2. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு – வள்ளுவர். 3. பசித்துப் புசி. 4. உன் உடலின் மொழியைக் கற்றுக்கொள். 5. 'சர்க்கரை நோய்' என்பது ஒரு பொய். 6. பழங்கள், இனிப்பைச் சாப்பிட்டு நீரிழிவை விரட்டு. 7. இன்சுலின் நஞ்சு.



நாம் தெரிந்து கொள்ளவே இல்லை.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு" என்ற வள்ளுவரின் வாய்மொழியை நாம் நம்பவில்லை.

சில நாள்கள் கழித்து மருத்துவர் அய்யாவைப் பார்க்கப் போனேன்.

"சர்க்கரை அளவைச் சோதிக்கப் போனீர்களா?"

"இல்லை."

"நல்லது. அவை ஒரு பித்தலாட்டம். அப்புறம் கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். கழட்டுங்கள்!" என்றார்.

"கழற்றினால், எல்லாம் மங்கலாகும். படிக்க முடியாது" என்றேன்.

"எதுவும் மங்கலாகவில்லை. எல்லாம் தெளிவாகவே இருக்கின்றன. இன்று முதல் கண்ணாடி அணியக் கூடாது" என்றார்.

"அய்யோ!" என்றேன்.

"இனிமேல் என் முன்னால் 'அய்யோ' போடக்கூடாது" என்றார்.

"சரிங்க அய்யா!" என்றேன்.

வாசக நண்பர்களே, –3.75 கண்ணாடி அணிந்து வந்த நான், அதைக் கழற்றிவிட்டு, நாளிதழின் சிறிய எழுத்துக்களையும் படிக்கிறேன்! நம்ப முடியவில்லையா? கூப்பிடுங்கள் வந்து படித்துக் காட்டுகிறேன்.

எத்தனை மருந்துகள், சோதனை மாய்மாலங்களில் அகப்பட்டிருந்த நான், இப்போது மருந்துச் செலவுகள் எதுவும் இல்லாமல், நவீன டாக்டர் சொன்ன கசப்பைச் சாப்பிடாமல், இனிக்கும் பழங்களாக விழுங்கி, நிறைய ஸ்வீட் சாப்பிட்டுச் சந்தோசமாக இருக்கிறேன்.

இதற்காக நான் செய்தது என்ன? ஒன்றுமே இல்லை. என் உடலை நம்பினேன். அது சொல்வதைக் கேட்டேன். அது விரும்புவதைக் கொடுத்தேன். அவ்வளவுதான்.

நண்பர்களே, சர்க்கரை நோய் என்று எதுவுமே இல்லை. அது நம் மூளையில் திணிக்கப்பட்ட ஒரு மாபெரும் பொய்! மூன்று சர்வதேச மருந்துக் கம்பெனிகள் நீண்ட காலத்திற்கு முன்பு ஒன்று கூடிக் கூட்டுச் சேர்ந்த சதி! உலகமே இந்தச் சதியில் சிக்க, அவர்களின் மருந்துகளுக்கு அடிமையாகி அல்லல்படுகிறது.

உங்களுக்கு வழிகாட்டி வாசல் திறந்து வைத்த மருத்துவர் அய்யா யார் என்று கேட்கிறீர்களா? அவர் தம் பெயரைச் சொல்லக்கூடாது என்று வாக்கு வாங்கியிருக்கிறார். "என்னைத் தேடி வந்து அடித்தே கொன்றுவிடுவார்கள்" என்று கூறினார்! உண்மைதானே!

ஒரு புத்தகம் படிக்கலாம், விழி திறக்க, வழி பிறக்க. அக்குஹீலர் உமர் பாரூக் எழுதியுள்ள "உடலின் மொழி." எல்லா வேத பாராயணங்களையும் நிறுத்தி வைத்துவிட்டு, இதை முதலில் படியுங்கள். உய்வடைய இதுதான் வழி. உங்களை நீங்கள் உணர்ந்து கொள்ள இது ஒன்றுதான் வழி.

உங்கள் உடலுக்கு ஒரு மொழி இருக்கிறது. அது உங்கள் பெற்றோருக்குத் தெரியாது. உங்கள் மனைவி, மக்களுக்கும் தெரியாது. ஏன், உங்களுக்கேகூடத் தெரியாது. அதுதான் உங்கள் சொந்த மொழி. அதை முதலில் கற்றுக் கொள்ளுங்கள். அதனுடன் பேசுங்கள். நலம் பெறுவீர்!

சந்தேகப்பிராணிகள் மருந்து, மாத்திரைகள் விழுங்கி நோயில் அல்லல் படுங்கள். இதுவே என் சாபம்!

●



‘முத்தலாக்’ என்று மொழியாதீர்!

எஸ். ஜி. இசட்கான்

“உங்களுள் குற்றம் புரியாதவர் யாவர்?” வினவுகிறது பைபிள்! “தவறு புரியும் இயல்பினன் மனிதன்” மொழிகிறது திருக் குர் ஆன்! இதனை இதர எந்த ஒரு வேதமும் மறுப்பதில்லை.

பாரில் சாதி இரண்டு. அவை ஆண், பெண் என்று புலமை மிகும் பெருமாட்டி ஔவை மூதாட்டி புகன்றுள்ளார்.

இல்லறம் பேணும் ஆவலினால் இரு மனங்கள் இணையத் திருமணம் ஒருங்கிணைப்புப் பெறுகிறது. ஏனோ, அவசரத்தில் ‘தலாக்’ (விவாகரத்து) சொல் எழுச்சி பெற்றுவிடுகிறது. ஏதோ ஆக்ரோஷத்தில் அச்சொல் தொடர் மும்முறை ஒலிக்கப்பட, ‘முத்தலாக்’ மண முறிவு – மண முறிதலுக்கான எல்லைக்கே சென்று விடுகிறது! அது ஆமோதிக்கப்பட்டும் விடுகின்றது.

இத்தகு வினையால் ஏற்படும் பாதிப்பு, பெண்டிர்க்குச் சொல்லி மாளாது! இது காரணம் கருதியே ‘இஸ்லாம்’ தன்னுள் நெறிமுறைகள் பலவற்றை நிலை நிறுத்தி உள்ளது. இது ‘ஷரியத்’ என்று சொல்லப்படுகிறது! இவ்வாறாக இருந்தும், திருமணம் (நிக்காஹ்) இரத்தாவதும், ‘மறுமணம்’ என்றும், ‘பலதார மணம்’ என்றும் தொடர் நிகழ்வுகள் நீண்டே செல் கின்றன.

இதன் பின் விளைவு, மணமான பெண்டிர்க்குச் சோகம்; மணமாகாத பெண்டிர்க்கு அச்சம்.

காலத்திற்கேற்ப மக்கள் நடைமுறை விசயங்கட்கு, செயல் வினைகட்கு, சரியான பாதை காட்டப்படுவதும்தான் ‘ஷரியத்’ என்பதும் ஆகும்; உட்பொருளும் ஆகும். ஏன், மெய் நிலைப்பாடும் ஆகும்.

தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர் பாத்திமா முசாஃபிர், “முத்தலாக் சொல்வது தவறு; சொன்னால் செல்லாது. கணவன் – மனைவி உறவும் பிரியாது” என்ற உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை வரவேற்கிறோம். ஆனால், பிந்தையதாக உள்ள வரைவு தண்டனைகள் மூன்றாண்டுகள் தேவையில்லை” என்கிறார்.

“மணமுடித்த ஆடவன் இன்னொரு பெண்ணை மணம் கொண்டால் ஏற்கப் படுகிறது. அதுவும் முதல் மனைவியிடம் விவாகரத்துப் பெறாத நிலையிலேயே! ஆனால், பெண் மாற்று மணம் புரிவதாக இருந்தால், கணவரிடம் விவாகரத்துப் பெற்றாக வேண்டும் என்ற நிலை உள்ளதால் பொது சிவில் சட்டம் அவசியம்” என் கிறார் வழக்குரைஞர் மெஹருன்னிசா.

“புதிய சட்டம் – உத்தேசம் குறித்து அ.இ. ஷியா தனிச்சட்ட வாரியம் மைய அரசின் செயற்பாட்டை வரவேற்றுள்ளது” என மௌலானா யாசூப் அப்பாஸ் (செய்தித் தொடர்பாளர்) அறிவித்திருக்கிறார்.

“பாரதிய முஸ்லிம் மகிளா ஆந்தோலன்” அமைப்பின் இணை நிறுவனர் ‘சஃபியா நிவாஸ்’ கூட, முத்தலாக் நடைமுறைக்கு மாற்றாக அரசியல் சாசனம், வேதம் குர் ஆன் படியும் புதுச் சட்ட வரைவைக் கடந்த 1917–லேயே வரவேற்றிருக்கிறார்.

இல்லறம் என்பது அன்பின் மீது அமைக்கப் படுவதால், அதன் மீதான பராமரிப்பு இருக்கலாமே ஒழிய, விவாகரத்து (தலாக் – முத்தலாக்) என்ற பெயரில் புறக்கணிப்புக் கூடாது என்றே கலிஃபா உமர் (ரலி) அவர்களும் அந்நாளிலேயே வலியுறுத்தியிருக்கிறார்.

இவ்வாறாக, பல உண்மைகள் வெளிப்படையாக உள்ளபோது, “முத்தலாக்” கூறிடல் அவசியமே இல்லை என்றே ஆகிறது. இந்நிலையில், அது நிகழ்ந்தால் அது குற்றம் என்றே ஏன் கருதக்கூடாது?


இருப்பினும், மாதரைக் காப்பதிலும், மதிப்பளித்தலிலும், அத்துடன் ஆடவர் மீது பரிவு காட்டுதலிலும் அரசுத் தரப்புக்குப் பொறுப்பு அதிகம் என்பதையும் ஈங்கு உரைத்தாக வேண்டும்! •

சிறுகதை

பூக்காத மரம்

நான் மகான் கந்தசாமியை முதன் முதலில் சந்தித்தது எப்போது? 1967–ஆக இருக்கலாம். நான் அப்போது நாகலாபுரத்தில் பள்ளித் துணை ஆய்வாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அந்தப் பணியின் இப்போதைய பெயர் உதவிக் கல்வி அலுவலர்.

ஒருநாள் மண்டலப் பள்ளி ஆய்வளரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. மண்டலக் கல்வி ஆய்வாளர் என்றால் இன்றுள்ள முதன்மைக் கல்வி அலுவலர். அன்று



"யாரோ காந்தசாமி வாத்தியாராம். உங்களப் பார்க்க வந்திருக்காரு..." என்றார். ஒரு கணத்தில் மகான் காந்தசாமி பற்றிய சித்திரம் என் மனம் முழுவதும் நிறைந்தது.

மண்டலக்கல்வி ஆய்வாளர் என்பது அதிகாரம் பெருத்த பதவி. ஆசிரியரை நியமிப்பது, தவறு செய்பவரைத் தண்டிப்பது, எல்லாமே அப்பொழுது அவருடைய அதிகாரத்திற்கு உட்பட்ட பணிகள்.

மண்டலக் கல்வி ஆய்வாளர்களிடமிருந்து எனக்கு வந்த கடிதம் இதுதான்; இன்ன ஊர் அரசு உயர் நிலைப் பள்ளிக்கு ஒரு லட்ச ரூபாய்க்கு அறிவியல் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. நீங்கள் நேரே போய் அந்தக் கருவிகள் சரியாக அனுப்பப்பட்டுள்ளனவா, அவை தரமாக உள்ளனவா, எல்லாமே உரிய பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்று பார்வையிட்டு அறிக்கை அனுப்புங்கள்.

நான் இந்த ஆணையை எடுத்துக் கொண்டு நேரே அந்தப் பள்ளிக்குப் போனேன். தலைமை ஆசிரியர் என்னை அன்போடு வரவேற்றார். "இந்தத் துறைக்குப் பொறுப்பானவர் கந்தசாமி சார். கந்தசாமி சாரை உங்களுக்குத் தெரியுமா?" என்றார்.

"கேள்விப்பட்டதில்லையே ..." என்றேன்.

"அடடா... ஆச்சரியமாக இருக்கிறதே! அப்படியா?"

"அவர் ஒரு மகான் சார். சட்டை போடமாட்டார். கதர் வேட்டியும் துண்டும்தான் அணிந்திருப்பார். அவற்றையும் அவரே துவைத்துக் காய வைத்துக் கட்டி இருப்பார். தானே சமைத்து உண்பார். சுத்த சைவம்" என்று அடுக்கிக் கொண்டே போனார்.

எனக்கு அவரைப் பார்க்க ஆசை உண்டாயிற்று. நேரே ஆய்வகத்திற்குப் போனேன். கந்தசாமி சாரை நேரில்

சந்தித்தேன். நான் யார் என்பதையும், எதற்காக வந்திருக்கிறேன் என்பதையும் அவரிடம் சொன்னேன்.

சதை போடாத மெலிந்த தேகம் அவருக்கு. பித்தளை நிறத்தில் மினுமினுப்பாக இருந்தார். கருப்புத் தலைமுடியை அவரே வெட்டியிருக்க வேண்டும். சில இடங்களில் முடி நீண்டும், சில இடங்களில் குறுகலாகவும் தாறுமாறாகச் சிலும்பிக் கொண்டு நின்றது. அவரைப் பார்க்கப் பார்க்க அவர் மீது மதிப்புக் கூடியது எனக்கு.

திடீரென்று ஆய்வகத்தின் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. பேன்ட் சட்டை அணிந்த ஒரு வாட்டசாட்டமான மனிதர் காரைவிட்டு இறங்கி ஆய்வகத்திற்கு வந்தார். கோயிலின் உள் நுழைபவர் போல, வாசலுக்கு வெளியே ஷூவைக் கழற்றிவிட்டு உள்ளே வந்து குனிந்து கந்தசாமியின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். வியப்பின் மேல் வியப்பு எனக்கு. எதுவும் பேசிக் கொள்ளாமல் என் ஆய்வகத்தில் உள்ள புதிய பொருட்களைச் சரி பார்க்கத் தொடங்கினேன்.

மத்தியானம் எனக்கு உணவு வந்தது. சாப்பிட்டு விட்டுத் திரும்ப என் வேலையைத் தொடங்கினேன். எல்லாப் பதிவேடுகளும் நேர்த்தியாகவே இருந்தன. வேலைகள் கிட்டத்தட்ட முடிந்ததும், அவரிடம்; பேச்சுக் கொடுத்தேன்.

“ஐயா, உங்களுக்கு எத்தனைக் குழந்தைகள்?” என்றேன்.

ரொம்ப அலட்சியமாகச் சிரித்தார் அவர்.

“நான் பிரம்மச்சாரி சார்.”

நான் சிரித்தேன். “ஐயா, பிரம்மச்சரியம் என்பது இளமையில் கொள்ள வேண்டிய ஒழுக்கம். வாழ்க்கை முழுவதும் பிரம்மச்சாரியாக எப்படி இருக்க முடியும்?” என்றேன்.



பொன்னீலன்

அதற்கு அவர் பதில்; சொல்லவில்லை. இப்படி முட்டாளாக இருக்கிறானே என்பதுபோல் குழந்தைத்தனமாகச் சிரித்தார்.

“வாழ்க்கை முழுவதும் பிரம்மச்சாரியாக இருப்பது எப்படி? பெற்றுப் பெருகி வம்சத்தை வளர்க்க வேண்டாமா? இதுதானே இயற்கையின் நியதி?” என்றேன்.

அதற்கும் ஓர் அலட்சியமான முறுவலே பதிலாக வந்தது.

ஆய்வக உதவியாளர் என்னிடம் சொன்னார்; “சார்... இவர் பெரிய மகான். தன் வீட்டையும் சொத்துக்களையும் தம்பிமாருக்கு எழுதிக் கொடுத்திட்டாரு. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்காக அந்தப் பிள்ளைகளை வைச்சே கிணறு வெட்டியிருக்காரு. சைக்கிள்களை வைக்க ஒரு கூரை மாணவர்களை வைத்தே உருவாக்கியிருக்காரு. அவர் செய்திருக்கிற காரியங்கள் சொல்லிமாளாது.”

மேலும் மேலும் வியப்பாக இருந்தது எனக்கு. என் வேலையை முடித்து அவரிடம் கையெழுத்துப் பெற்று

விட்டு நாகலாபுரத்திலுள்ள என் அலுவலகத்திற்குப் புறப்பட்டேன். மனம் பூராவும் கந்தசாமியே நிறைந்திருந்தார்.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்குப் பின் நான் மாவட்டக் கல்வி அலுவலராக அதே கோவில்பட்டிக்குப் போனேன். என் பழைய ஊர் என்பதனால் மகிழ்ச்சியாக இருந்தது.

ஒருநாள் என் உதவியாளர் என்னிடம் வந்து, “யாரோ கந்தசாமி வாத்தியாராம். உங்களப் பார்க்க வந்திருக்காரு...” என்றார். ஒரு கணத்தில் மகான் கந்தசாமி பற்றிய சித்திரம் என் மனம் முழுவதும் நிறைந்தது.

கந்தசாமி உள்ளே வந்தார். அதே எளிய தோற்றம். துவைத்துக் கட்டிய வேட்டி, துண்டு. ஆள் ரொம்பவும் மெலிந்திருந்தார். நடையில் சோர்வு தெரிந்தது. எழுந்து நின்று மரியாதையாக அவரை வரவேற்று, எதிர் ஆசனத்தில் அமரும்படி வேண்டினேன். தயக்கத்தோடு உட்கார்ந்தார். என் வேலைகளைக் கவனித்தபடியே அவரோடு உரையாடினேன். அவர் பண்ட பலகாரம் சாப்பிட மாட்டார் என்பது எனக்கு ஏற்கெனவே தெரியும். என் அலுவலக உதவியாளரை இரண்டு நாட்டுப் பழங்கள் வாங்கி வரச் செய்து, அவருக்குக் கொடுத்தேன். ஆர்வத்தோடு அவற்றைச் சாப்பிட்டார்.

“ஐயா, உங்க பிரம்மச்சரிய வாழ்க்கை எப்படி நடக்குது?” என்றேன். அவ்வளவில் அவர் கண்கள் கலங்கிவிட்டன.

“துணைக்கு ஆள் இல்லாமல் தவிச்சிப் போய்க்கிடக்கேன் சார். யாரிடம் பேச? எனக்கு யாருமே இல்லை. வேலை செய்ய ஓர் ஆள் ஏற்பாடு செய்திருக்கிறேன். எப்படா வேலை முடியும் என்று அவளும் ஓடிப் போய் விடுகிறாள். தனிமை என்னைக் கொல்லுது. உங்களை அடிக்கடி நினைத்துக் கொள்ளுவேன். திருமணம் செய்து கொள்ளுங்கள் எனத் திரும்பத் திரும்பச் சொன்னீர்கள். அப்போது எனக்கு அது புரியவில்லை. இப்போது புரிகிறது. ஆனால் என்னைத் திருமணம் செய்து கொள்ள இப்போது யாரும் முன்வரவில்லை. பரிதாபமாகப் போய்விட்டது வாழ்க்கை. முதுமை ரொம்பக் கொடுமையானது. சிறுசிறு உதவிகள் செய்வதற்குக்கூட ஆள் இல்லை.”

அவர் பேச்சு நின்றது. கண்கள் நிறைந்து நரைத்த வினோபா பாவே தாடி வழியாக அந்த உப்புநீர்த் துளிகள் தாவித்தாவி இறங்கின.


“சிஷ்யன்மார் கூட்டம் இருக்குமே?”

“எல்லாருமே பணமும் செல்வமும் அதிகாரமும் இருந்தாத்தான் ஒட்டுவாக.”

“ஏதாவது ஒரு சிறுவனைத் தத்தெடுத்துக் கொள்ளுறதுதானே!”

மாசாமாசம் பென்சனுக்கு ஆசைப்படுறாக. பென்சன வாங்கிட்டு ஓடிப் போயிடுறாக. எவ்வளவு சிக்கல் நிறைந்ததாய் இருந்தாலும் சொந்த மனைவி, சொந்தப் பிள்ளை, சொந்தச் சேமிப்பு... இதுதானேயா வாழ்க்கையோட அடிப்படை. நீங்க பலமுறை சொல்லியிருக்கீக. நான் எதையும் அப்போ சேர்த்து வைக்கல்ல. இளமையில சேர்த்து வைக்காதவர் முதுமையில அலங்கோலப்படுவார் என்கிறது எவ்வளவு பெரிய உண்மை.”

மௌனமாயிருந்தேன். “அன்னிக்கிக் கேட்டீக; உங்க அன்பை எங்க சேமிச்சி வைப்பீக? எங்கே சேமிச்சி வச்சா அது பத்திரமா இருக்கும்? காலம் வளர வளரப் பெருகும்? இறுதிக் காலத்துக்கு உதவும்?”



“நான் சேமிச்ச இடமெல்லாம் சிதறிப் போச்சே. எல்லாம் போயி என் வாழ்க்கையே சூனியமாச்சே!”

கந்தசாமியின் தலை கவிழ்ந்தது. மெலிந்த இமைகள் நிறைந்து கண்ணீர் சொட்டுச் சொட்டாக உதிர்ந்தது.

ஒன்றும் சொல்லத் தோணாமல் பெருமூச்செறிந்தேன். அவர், நாற்காலியில் இருந்து எழுந்து தள்ளாடிய படி வெளியே போவதைப் பார்த்துக் கொண்டே இருந்தேன்.

●



சிவாலயம் மோகனுக்குக் கம்பன் விழா விருது!

பேராசிரியர் கே. சுவாமிநாதன் நினைவு விருதினைத் 'தமிழவேள்' திரு. சிவாலயம் ஜெ. மோகன் அவர்களுக்கு, மாண்பமை நீதியரசர் அரு. இலக்குமணன் வழங்குகிறார். இடமிருந்து வலம் : நல்லி சில்க்ஸ் அதிபர் குப்புசாமி செட்டியார், திரு. தமிழருவி மணியன், மலேசியா நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டத்தோஸ்ரீ எம். சரவணன், சென்னை கம்பன் கழகத் தலைவர் திரு. இராம. வீரப்பன், கம்பன் கழகச் செயலர் திரு. இலக்கியவீதி இனியவன்.

9.8.2019 அன்று நடைபெற்ற சென்னை கம்பன் கழகத்தின் 44–வது ஆண்டு விழாவில், சென்னை கம்பன் கழகத் தலைவர் நீதியரசர் மு.மு. இஸ்மாயில் நிறுவியுள்ள 'பேராசிரியர் கே. சுவாமிநாதன் நினைவு விருது,' திரு. சிவாலயம் ஜெ. மோகன் அவர்களுக்கு வழங்கிப் பெருமைப்படுத்தப் பட்டார்.

சென்னை ஐ.ஐ.டி.யில் மென்பொருள் துறையில் முதுநிலைப் பட்டம் பெற்ற பொறியாளர், தொழிலதிபர் சிவாலயம் ஜெ. மோகன், சென்னை 'தெய்வச் சேக்கிழார் ஆய்வு மையத்தின் செயலாளர் ஆவார்.

சென்ற மாதம் இறுதியில் சென்னையில் நடைபெற்ற சேக்கிழார் விழா, நினைவை விட்டு அகலாத விழா. கயிலாயமே இறங்கி விட்டதைப் போன்ற சூழ்நிலையை ஏற்படுத்திய விழா. அருட்செல்வர் ஐயாவின் சைவப் பட்டறையில் பட்டை தீட்டப்பட்ட வைரம் சிவாலயம் மோகன் அவர்கள்.

நூற்றாண்டு கடந்த பழந்தமிழ் நூல்களைத் தேடித் தேடி மீள்பதிப்புச் செய்கிற இரண்டாம் உ.வே.சா. என இவரைத் தமிழ் உலகம் கொண்டாடி வருகிறது. திருவாவடுதுறை ஆதீனம் 'சைவத் தமிழ்ச் செம்மல்' விருதும், குன்றக்குடி ஆதீனம் 'தமிழவேள்' விருதும், திருவள்ளுவர் திருநாட்கழகம் 'பரிமேலழகர்' பட்டமும் வழங்கிச் சிறப்புச் சேர்த்துள்ளன.

அருட்செல்வரைப் போலவே, உரியவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்கள் கொடுப்பதை அறிந்த வடலூர் தவத்திரு ஊரன் அடிகள், இவரை 'அறிவுக் கொடை வள்ளல்' என்றும், 'ஞானதான வள்ளல்' என்றும் பாராட்டி மகிழ்ந்துள்ளார்.

– L.I.C. ஜி. வேங்கடாசலம்

சென்னையில் தவத்திரு ஊரன் அடிகளின் 'சேக்கிழாரும் வள்ளலாரும்' நூல் வெளியீட்டு விழா!



நூலினை வெளியிட்ட சென்னை இராமலிங்கர் பணிமன்றத் தலைவர் டாக்டர் ம. மாணிக்கம். உடன் உள்ளோர் தவத்திரு ஊரன் அடிகளார், மூத்த வழக்குரைஞர் காந்தி, சிவாலயம் ஜெ. மோகன், மறைமலை இலக்குவனார், பேராசிரியர் டாக்டர் இராமலிங்கம் மற்றும் சான்றோர்கள்.

சிவாலயம் தம்பதிக்குக் குன்றக்குடி அடிகளார் ஆசி...



சிவாலயம் மோகன் – திருமதி ஹேமா மோகன்



கவிஞர் பொன்முடி சி. சுப்பையன், புலவர் வெ.பு. பழனிச்சாமி மற்றும் கவிஞர்களும், இலக்கியவாதிகளும்.



கவிதாயினி நந்தினி

கோவையில் சுதந்திர தினக் கவியரங்கம்

கோவை, பேரூர் தமிழ் மன்றமும், கோவை சப்னா புக் ஹவுஸ் நிறுவனமும் இணைந்து நடத்திய சுதந்திர தின விழாச் சிறப்புக் கவியரங்கம், 'சப்னா' நிறுவனத்தில் 15.8.2019 அன்று சிறப்பாக நடைபெற்றது.

இக்கவியரங்கத்தை பேரூர் தமிழ் மன்றத்தின் செயலாளர் திரு. ரவி அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். 'வீரத்தில் விளைந்திட்ட சுதந்திரம்' என்ற தலைப்பில் 20 கவிஞர்கள் சிறப்பாகக் கவிதைகளை வாசித்தனர்.

இக்கவியரங்கத்தில் தமிழ்க் கல்லூரி மாணவி கவிதாயினி செல்வி. மா. நந்தினி வழங்கிய இணைப்புரையும், கவிதையும் மிக அழகாக அமைந்தன. எதிர்காலமுள்ள கவிதாயினியை அறிமுகப்படுத்துகிறோம்.

இவ்விழாவில் வாழ்த்துரை வழங்கியவர்கள் 'மனோ சக்தி' மாசிலாமணி, புலவர் வெ.பு. பழனிச்சாமி, கவிஞர் பெ. சிதம்பரநாதன். வரவேற்புரையை கவிஞர் ரவி அவர்கள் வழங்க, சப்னா புக் ஹவுஸ் நிறுவனர் திரு. கார்த்திகேயன் முன்னிலை வகித்தார். – ந.நி

சாகித்ய அகாடமி விருது பெற்ற கவிஞர் சிற்பி அவர்கள், தமது 'சிற்பி அறக்கட்டளை' மூலம், சிறந்த கவிஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் "சிற்பி இலக்கிய விருது" மற்றும் "சிற்பி இலக்கியப் பரிசு" வழங்கிக் கவுரவித்து வருகிறார்.

இந்த ஆண்டிற்கான 'சிற்பி இலக்கிய விருது' வழங்கும் விழா, பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரி விவேகானந்தர் அரங்கில் *27.7.2019* அன்று நடைபெற்றது. கல்லூரியின் தலைவர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் விழாவிற்குத் தலைமைவகித்து விருதுகளை வழங்கினார். சிற்பி அறக்கட்டளைத் தலைவர் கவிஞர் சிற்பி முன்னிலை வகித்தார்.

சிறந்த கவிதைத் தொகுப்புகளைத் தந்த கோவில்பட்டியைச் சேர்ந்த கவிஞர் தேவதச்சனுக்கு இந்த ஆண்டுக்கான 'சிற்பி இலக்கிய விருதும்' ரூ. *30* ஆயிரத்திற்கான காசோலையும் வழங்கப்பட்டன.

பொள்ளாச்சி சமத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளித் தமிழாசிரியரும், கவிஞருமான திரு. சோலைமாயவனுக்கு, 'சிற்பி இலக்கியப் பரிசுக் கேடயமும்' ரூ. *15* ஆயிரத்திற்கான காசோலையும் வழங்கப்பட்டன.

நெகிழிப் புறக்கணிப்புச் சமூக சேவையைப் பாராட்டி, பொள்ளாச்சி டார்கெட் ஜீரோ அமைப்புத் தலைவர் திரு. பாலகுமாரனுக்கு, 'பொ.ம. சுப்பிரமணியம் விருதும்,' ரூ. *10* ஆயிரத்திற்கான காசோலையும் வழங்கப்பட்டன.

விழாவில் என்.ஜி.எம். கல்லூரி முதல்வர் முனைவர் பொ.மா. பழனிசாமி, சாகித்ய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர் திரு. எஸ். ராமகிருஷ்ணன், சிற்பி அறக்கட்டளை நிர்வாகி நந்தினி வெங்கட் உள்ளிட்டோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

– ந.நி.

"சிற்பி இலக்கிய விருது" வழங்கும் விழா!



"சிற்பி இலக்கிய விருது" பெற்றவர்களுடன் என்.ஜி.எம். கல்லூரித் தலைவர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர், கவிஞர் சிற்பி, எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன், கல்லூரி முதல்வர் முனைவர் பொ.மா. பழனிசாமி உள்ளிட்டோர்.

மருத்துவம்

வெண்புள்ளிகள்

வெண்புள்ளி என்பது, உடலில் இயல்பான தோலின் நிறம் மாறி வெண்மையாகக் காணப்படுவது. இது சிலருக்குச் சிறியதாகவும், சிலருக்கு முகம், கை, கால் விரல்கள், தோலில் ஆங்காங்கே படை போன்றும் காணப்படும். இதனைச் சித்த மருத்துவத்தில் வெண்குட்டம், சுவேத குட்டம் என்று அழைப்பர். ஆங்கில மருத்துவத்தில் இதனை Leucoderma (or) Vitiligo என்றழைப்பர்.

இன்றைய உலக மக்கள் தொகையில் சுமார் 2



சிகிச்சைக்கு முன்



சிகிச்சைக்குப் பின்

சதவிகிதம் பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சித்த மருத்துவத்தில் இதனை நோய் என்று சொல்வதில்லை. ஊட்டச்சத்துக் குறைபாட்டினாலும், மரபு வழியிலும் இந்நிலை ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

ஆங்கில மருத்துவ முறையில் இதற்குச் சிகிச்சை கிடையாது. ஆனால், சித்த மருத்துவத்தில் இதனைக் குணப்படுத்த முடியும்.

இந்நோயின் இயல்பானது, உடல் முழுவதுமாகவோ, முகம், கை, கால், உதடு, உள்ளங்கை, பிறப்புறுப்புகள் முதலிய சில இடங்களிலோ பல வெண்புள்ளிகள் ஏற்படுதல், அந்த இடங்களில் மயிர் வெளுத்தல், உதிர்தல், அவ்விடங்களில் எரிச்சல் ஏற்பட்டுத் தோல் சிவந்து காணுதல் முதலிய குறிகுணங் களாகும்.



சித்த மருத்துவத்தில் வெண்புள்ளி நோயினை 4 வகைகளாகப் பிரிக்கலாம். அவை, வாத வெண்புள்ளி, பித்த வெண்புள்ளி, கப வெண்புள்ளி, தொழுநோய் மற்றும் மேக நோயினால் வரும் வெண்புள்ளி என்பன. இவை தொற்று நோய் அல்ல.

இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றவர்களுடன் இயல்பாகப் பழகுவதற்குத் தயங்குவார்கள். அவர்களுக்குத் தன்னம்பிக்கை கொடுத்து, சித்த மருத்துவத்தின் மூலம் கோவை கஸ்தூர்பா காந்தி நினைவு சித்த மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஆங்கில மருத்துவத்தில் ‘மெலனின்’ என்ற நிறமி தோலில் குறைவதால் இந்நோய் உண்டாவதாகக் கூறப்படுகிறது. சித்த மருத்துவத்தில் அயச் செந்தூரம், கரிசாலைக் கற்பம், கார்போக அரிசி மாத்திரை முதலிய உள் மருந்துகளாலும், வெளிப்பூச்சாகத் தரப்படும் மருந்துகளாலும் இந்நோய் குணமடைகிறது. இந்நோய்க்கு இம்மருத்துவமனையில் நூற்றுக்கணக்கான நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிகிச்சை பெற்று வரும் ஒரு குழந்தையின் தந்தையார் கூறுகிறார்...

“எனது மகள் வள்ளியம்மைக்கு 5 வயது. அவளுக்கு இரண்டரை வயதில் முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தோலில் வெள்ளை நிறத்தில் ஒரு சில இடங்களில் புள்ளிகள் ஏற்பட்டன. அப்பொழுது நாங்கள் கோவை ‘கஸ்தூர்பா காந்தி மருத்துவமனையின்’ சித்த மருத்துவரை அணுகினோம்.

முதலில் அவர், இந்நோய் குணமாகிவிடும் என்று எங்களுக்கு நம்பிக்கை கொடுத்தார். பிறகு சித்த மருந்துகள் கொடுத்தார். இந்த வெள்ளை நிறமானது (White Patches) மெல்ல மெல்ல மாறிவிடும் என்று மருத்துவர் கூறினார். அவர் கூறியது போலவே, இந்நோய் தொடக்க நிலையிலிருந்ததில் முக்கால் பகுதி இப்போது குணமாகிவிட்டது.

நாங்கள் முழு நம்பிக்கையுடன் கோவை ‘கஸ்தூர்பா காந்தி சித்த மருத்துவமனையில்’ காண்பித்து வருகிறோம். இந்த மருத்துவமனைக்கும், மருத்துவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு

பி. லெட்சுமணன், கோவைப்புதூர்”

மேலும் விபரங்களுக்கு, கோவை ‘கஸ்தூர்பா காந்தி சித்த மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின்’ தலைமை மருத்துவரின் தொடர்பு எண் : 90432 12789.

டாக்டர் ப. சரவணன்

இளம் விஞ்ஞானிகளைப் பள்ளிப் பருவத்திலேயே உருவாக்கும் மத்திய அரசின் திட்டமான 'அடல் டிங்கரிங் ஆய்வகம்' (ATAL TINKERING LAB), அருட் செல்வர் ஐயாவின் நல்லாசியுடன் ஆப்பக்கூடலில் இயங்கி வரும் 'சக்தி மேல்நிலைப் பள்ளியில் 8.8.2019 அன்று பள்ளியின் செயலர் முனைவர் க.ரா. முத்துசுவாமி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

அறிவியல் தொழில்நுட்ப அறிவை மாணவப் பருவத்திலிருந்தே வளர்த்துக் கொள்ளும் நோக்கத்தில், கல்லூரியில் கிடைக்கிற விஞ்ஞான அறிவை வளர்த்து, ஒவ்வொரு மாணவனின் தனித்திற மையை வெளிப்படுத்துவதற்கு இத் திட்டம் மிகவும் உதவியாக இருக்கும்.

முன்னாள் தலைமையாசிரியர் திரு. பி. பூபாலன் அவர்களால், மத்திய அர சிடம் விண்ணப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ. 20 லட்சம் நிதியுதவி ஒதுக்கீடு செய்துள்ளது.

இச்சிறப்பு ஆய்வகம், 2019–ஆம் கல்வியாண்டில் ஈரோடு மாவட்டத்தில் முதலாவதாக சக்தி மேல்நிலைப்பள்ளி யில் தொடங்கப்பட்டுள்ளது. தொடக்க விழாவில் பள்ளியின் செயலர் திரு. க.ரா. முத்துசுவாமி அவர்கள் தலைமை வகித்தார். தலைமையாசிரியை திருமதி. பி. ரங்கநாயகி வரவேற்புரை நல்கினார். சக்தி சர்க்கரை ஆலையின் முதுநிலைப் பொதுமேலாளர் திரு. வி. திருவேங் கடம் மற்றும் மனிதவள மேம்பாட்டுத் துறை அதிகாரி திரு. மோகன்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியர் திரு. பி. பூபாலன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். ஈரோடு மாவட்ட டிங்கரிங் ஆய்வகத் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. யுவராஜ் அவர்கள் ஆய்வகத்தைப் பயன்படுத்தும் முறை பற்றியும், படைப்புகளைச் சமர்ப் பிக்கும் முறை பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். ●

இளம் விஞ்ஞானிகளை உருவாக்கும் ஆய்வகத் திறப்பு விழா!



ஆய்வகத்தைத் தொடங்கி வைக்கும் முன்னாள் தலைமையாசிரியர் திரு. பி. பூபாலன், எஸ்.ஐ.டி. இயக்குநரும், பள்ளிச் செயலருமான முனைவர் க.ரா. முத்துசுவாமி ஆகியோர்.



கவிஞர் ஜெ. கமலநாதன்

ஓடி ஒளிய இடமில்லை!



அறுபத்தி இரண்டு அகவையில்
தனிமை நெருப்பு;
தஞ்சம்புக தாய்மடி இல்லை;
சோர்வில் சாய தந்தையின் தோள்கள் இல்லை;
மனையறத் துணையோவெனில்
நோய்களுடன் வாசம்;
மகனும் மகளும்
டாலர்களை எண்ணிக்கொண்டு
அமெரிக்காவில்;
பழைய கதைபேசக் கிடைக்கும்
நண்பர்களோ மாலை 6 மணிக்கு
மட்டுமே கொஞ்ச நேரம்;
தி.ஜா.ரா., கா.நா.சு., சு.ரா., இ.பா.,
இவர்களைப் பற்றிப் பேச
இலக்கியத் துணை ஏதும்
கிடைப்பதே இல்லை!
அட்டு அரசியல் பேச
ஆயிரம் பேர் டீக்கடையில்...
அங்கு மனம் ஒட்டவில்லை.
முதுமை என மனம் ஒத்துக்கொள்ளவில்லை;
இளமை என உடல் ஒத்துக்கொள்ளவில்லை;
நகரும் நாட்களோடு மெல்ல
நகரும் வாழ்க்கை!

ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில்
நமது இல்லத்து இறைவனாக இருக்கும் முன்னோர்களுக்கு



பித்ரு பூஜை, திலஹோமம், திலதர்ப்பணம் மற்றும் கோதானம் செய்ய ஏற்ற நாள்

மஹாளய அமாவாசை-28.09.2019

முன்னோர் திருநாளில், முன்னோரை வழிபட்டு முன்னேற்றமடைவோம்



மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் பித்ரு பூஜை

மாத்ரு தேவோ பவ...! பித்ரு தேவோ பவ...! நமது முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்வது நமது இன்றியமையாத கடமையாகும். நமக்கு நல்வாழ்வு அளித்துச் சென்ற முன்னோர்களை திதி நாளில், திருப்திபடுத்தாத காரணத்தினால் தான் நமக்கு துன்பங்கள் அடுக்கடுக்காக வருகின்றன. அத்துன்பங்களில் இருந்து விடுபட மஹாளயபக்ஷ நாளில் ஓர் அதிஅற்புத செயலான பித்ரு பூஜையை ஒவ்வொரு குடும்பத்திலும் செய்யவேண்டும் என்பதற்காக, பசுமடத்தில் வைதீக முறைப்படி திலஹோமம் செய்து, மாட்டுத் தொழுவத்தில் பசுமாட்டினை முன்நிறுத்தி ஸ்ரீசாளகிராமம், விஷ்ணு பாதம் முன் புனிதமான கங்கை நீர் கொண்டு திலதர்ப்பணம் நடைபெறும். மேலும், யோகங்கள் சேர்ப்பதில் வல்லவரும், ஹோமங்கள் செய்து க்ஷேமங்கள் குவிப்பதில் ராசியானவரும், பித்ரு தோஷ நிவர்த்திக்கு விருட்ச பரிகாரம் சொல்பவருமான ஜோதிட சிம்மம் ஸ்ரீயோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி விருட்ச சாஸ்திர வித்வான் பூஜ்ய **ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா** தமது வேத வித்வான்கள் குழுவுடன் பித்ருதோஷ நிவர்த்திக்கான கோதான பூஜை, கோபூஜை மற்றும் வலம்புரி சங்கு பூஜையும் செய்து வைக்க உள்ளார்கள். இதில் அனைவரும் கலந்துகொண்டு அனைத்துவித தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற்று பிதுர் ஆசி, ரிஷி ஆசி, குரு ஆசி, தேவ ஆசி பெறலாம். மேலும் அடுத்தடுத்து வரும் சந்ததிகள் அனைத்து வளமும் நலமும் பெற்று சிறப்புடன் வாழ இச்சிறப்புமிக்க பித்ரு பூஜைகளில் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறோம்

முன்னோர்கள் நினைவாக பசுவிற்கு தாங்கள் செய்யும் அன்னதானம் மட்டுமே தானத்தில் சிறந்த தானம் ஆகும்

ஒரு பசுவை பராமரிக்க ஒரு வாரத்திற்கு **ரூ.200** அனுப்புவோருக்கு **தெய்வீக ஆற்றல் நிறைந்த காமதேனு யந்திரம்** அனுப்பி வைக்கப்படும்

அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வெல்லம் செலவு **ரூ.500** அனுப்புவோருக்கு **பித்தளையிலான சக்தி வாய்ந்த பெருமாள் விளக்கு** அனுப்பி வைக்கப்படும்

அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வைக்கோல் செலவு **ரூ.1,000** அனுப்புவோருக்கு **பித்தளையிலான காமதேனு விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் அகத்தி கீரை/கோரப்புல் செலவு **ரூ.2,000** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான தவழும் கண்ணன்** அனுப்பி வைக்கப்படும்

அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் தீவனச் செலவு **ரூ.3,000** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான துளசி மாடம்** அனுப்பி வைக்கப்படும்

அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத மருத்துவ செலவு **ரூ.4,000** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான கோமாதா விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

ஒரு பசுவும் கன்றும் ஒரு வருடத்திற்கு பராமரிக்க **ரூ.6,600** அனுப்புவோருக்கு **வலம்புரி சங்கு மற்றும் பித்தளையிலான சங்கு விளக்கு** அனுப்பி வைக்கப்படும்

முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று கீழ்கண்ட கோதானங்கள் கொடுப்பவருடைய ஏழு கோத்ரங்களையும், நூற்றியோரு குலத்தையும் இக்கோதானங்கள் காப்பாற்றும்

நாட்டுப் பசுவும் கன்றும் தானம் செய்தால்... ஜாதக ரீதியான தோஷம், தலைமுறை தோஷம், செய்வினை தோஷம், மாத்ரு, பித்ரு தோஷம், குல தோஷம், திருஷ்டி தோஷம், பூர்வ ஜென்ம தோஷம், புத்ர தோஷம், களத்திர தோஷம், பிரம்மஹத்தி தோஷம் நீங்கி, தீர்க்க சுமங்கலி பாக்கியம், குழந்தை பாக்கியம், மறுமணம், குடும்பத்தில் குபேர சம்பத்து உண்டாகி மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும் **கோதானம் செய்ய ரூ.12,500**

காறாம் பசுவும் கன்றும் தானம் செய்தால்... ஏழரை சனி, அஷ்டம சனி, அர்த்தாஷ்டம சனி, அனைத்து கிரஹங்களின் பாதிப்பு விலகி, மகாலட்சுமி அருளால் வீடு, நிலம், பொன், பொருள், புகழ், கல்வி, நிகரற்ற செல்வம் பெற்று தங்கள் குலம் தழைத்து வாழையடி வாழையாய் செல்வச் செழிப்புடன் வாழ்வாங்கு வாழ்வீர்கள் **காறாம் பசு தானம் செய்ய ரூ.13,500**

மகிஷ தானம் (எருமையும் கன்றும்) செய்தால்... வாகன விபத்து, வியாபார நஷ்டம், கடன் பிரச்சனை, படிப்பில் தடை, உத்யோகத் தடை நீங்கி வாழ்க்கை வளம், பதவி உயர்வு, சகல கார்ய சித்தி, குலவிருத்தி, கோத்ர விருத்தி, வம்ச விருத்தி, குடும்ப விருத்தி, ஆயுள் விருத்தி, உடல் ஆரோக்கியம், குடும்ப ஒற்றுமை, சகலவிதமான சந்தோஷம், ஆனந்தம் உண்டாகும் **மகிஷ தானம் செய்ய ரூ.14,500**

ரிஷப தானம் (காளைக் கன்று) செய்தால்... அனைத்து துன்பங்களும் துயரங்களும் நீங்கி பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகும், தடை இன்றி தன வரவு மற்றும் காரிய வெற்றி பெறலாம், தோல்விகள் அகன்று வெற்றிகள் குவியும். ரிஷப தானம் செய்பவர்களுக்கு பித்தளையிலான கல்பவிருஷ காமதேனு விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும் **ரிஷப தானம் செய்ய ரூ.5,000**

தங்கள் சார்பாக நடைபெறும் கோதானத்துடன் அன்னதானமாக புடலங்காய் சாதம், பிரண்டை சாதம் மற்றும் கருப்பு எள் சாதமும் அனைவருக்கும் வழங்கப்படும்

மேற்கண்ட நன்கொடையை அனுப்புகிறவர்கள், மஹாளய அமாவாசையன்று முன்னோர்கள் நினைவாக நடைபெறும் திலஹோமம், திலதர்ப்பணம், கோபூஜை, கோதானத்தை யார் பெயரில் செய்ய விரும்புகிறீர்களோ, அவர்களின் பெயர், திதி, கோத்திரம் போன்ற விபரங்களை தெரிவிக்கவும். அதன்படி மேற்கண்ட பூஜைகள் நடைபெறும். கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான பெருமாள் விளக்கும், பித்தளையிலான கோமாதா விக்ரஹமும், பித்தளையிலான சந்தான கோபாலன் விக்ரஹமும் அனுப்பி வைக்கப்படும்

குடும்ப சந்தோஷத்தின் திறவுகோலான வலம்புரி சங்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்கி வாழ்வை வளமாக்கும்.
மன இருளையும் வாழ்க்கை இருளையும் அகற்றி தங்கள் வாழ்வை பிரகாசமாக்கி சீரும் சிறப்புமாய் வாழவைப்பதும் வலம்புரி சங்கே!



ஸ்வாமிஜி அவர்கள் செய்து வைக்கும் வலம்புரி சங்கு பூஜை

சங்கு அதிர்ஷ்டம் தருவது, தைரியம் தருவது, செல்வம் தருவது. மேலும் வாழ்வில் நல்ல துணையை பெறவும், மாணவர்கள் கல்வியறிவு பெருகவும், குழந்தைகளுக்கு வரும் நோய்களை தடுக்கவும், வாஸ்து தோஷம் நீங்கவும், வியாபாரத்தில் யோகம் பெறவும் வலம்புரி சங்கை வழிபடுவீர். இதனால் எல்லா தேவதைகளும் வீட்டில் குடிகொண்டு மஹாலட்சுமி வாசம் இருப்பாள். ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க ரூ.6,600 அனுப்புவோருக்கு பசுவிற்கு அபிஷேகம் செய்யப்பட்ட மனக்கவலை மாற்றும் வலம்புரி சங்கு மற்றும் பித்தளையிலான சங்கு விளக்கு அனுப்பி வைக்கப்படும்

கோமாதா குடிகொள்ளும் மாட்டு தொழுவத்தை விரிவுபடுத்த, நோயினால் பாதிக்கப்பட்ட பசுக்களுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவ கூடம் கட்ட கட்டிட நிதி (கோ-சம்ரக்ஷன நிதி) அளித்து குவலயத்தில் குன்றாத நலமும் குறையாத செல்வ வளமும் பெற்று மகிழ்வீர்!

பசுமடத்தில் பராமரிக்கப்படும் பசுக்கள் அனைத்தும் ஏலம் விடப்பட்ட மற்றும் சாலைகளில் அடிபட்டு கிடந்த ஊனமுற்ற, நோயுற்ற, வயதான பசுக்களாகும். இதுபோன்ற மேலும் பல பசுக்களை பாதுகாக்க வேண்டியிருப்பதால் மாட்டு தொழுவத்தை விரிவுபடுத்த வேண்டியுள்ளது. மேலும் நோயினால் பாதிக்கப்பட்ட பசுக்களுக்கு பசுமடத்திலேயே கால்நடை மருத்துவகூடம் அமைத்து சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது. எனவே மாட்டு தொழுவத்திற்கும், கால்நடை மருத்துவகூடத்திற்கும் கட்டிட நிதியாக தங்களால் இயன்ற நிதியுதவியை அளித்து கோமாதாவை பாதுகாக்கும் கோ-சேவையில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். கட்டிட நிதியாக ரூ.5,000/- மேல் அனுப்புவோருக்கு பித்தளையிலான கல்பவிருஷ காமதேனு விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்

பசுவின் தீவனத்திற்கும், கோதானத்திற்கும், மருத்துவகூடத்திற்கும் (கோ-சம்ரக்ஷன நிதி), வலம்புரி சங்கிற்கும் நன்கொடையை **CHEQUE/DD/MO** ஆக **SHRI GHOSALA SEVA TRUST, CHENNAI** என்ற பெயரில் அல்லது **Direct Remittance**-ஆக **SHRI GHOSALA SEVA TRUST, ICICI BANK, MYLAPORE BRANCH, SB A/C NO: 218601000077, IFSC CODE: ICIC0002186** என்ற வங்கி கணக்கில் அல்லது ஆன்லைன் மூலமாக **www.shrigosala.com** என்னும் எங்களுடைய இணையதளத்தின் மூலமாகவும் நன்கொடையை அனுப்பலாம். நன்கொடை அனுப்பும்பொழுது தங்களின் பெயர், முகவரி, தொலைபேசி எண்ணை தெளிவாக குறிப்பிட வேண்டுகிறோம். நன்கொடை அனுப்புவோருக்கு ரசீதும், கோமாதாவின் ஆசீர்வாத பிரசாதங்களும், மேற்கண்ட பொருட்களும் மற்றும் சுத்தமான நாட்டு பசுஞ்சாணத்தில் சைவ முறைப்படி பசுமடத்தில் விராஜ ஹோமம் செய்து தயாரிக்கப்பட்ட விபூதியும், பூஜைக்கு பயன்படுத்தப்பட்ட விசேஷமான விஷ்ணு பாதமும், புனித கங்கா தீர்த்தமும் மஹாளயபக்ஷம் முடிந்த பிறகு தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

பசுமடம்

(RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA)

வயதான, நோயுற்ற, ஊனமுற்ற, கறவை நின்ற, பசுக்களை சுதந்திரமாக பாதுகாத்து பராமரிக்கும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (PO), சென்னை-77

www.shrigosala.com
pasumadam.chennai@gmail.com
OFF: 8754 555 555
MADAM: 8754 666 666



ஸ்வாமிஜி தலைமையில் பசுமடத்தில் நடைபெற்ற கோதானம்

பித்ருதோஷ நிவர்த்திக்கு மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் பித்ருபூஜைக்கு ஈடு இணை வேறேதுமில்லை

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication
28.8.2019

Regd.No.CB/016/2018-20

OM SAKTHI - SEPTEMBER - 2019